HELLO MOBILE WORLD

122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050

அறைவு 03 இயம் 21 December 13-19, 2014
உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU
Registered as a newspaper in Sri Lanka
பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்
பக்கங்கள் : 20 விலை : 30.00

Sugirtha Stationers

காகிதாதிகள் மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்கள்
அரச அங்கீகாரம் பெற்ற விநியோகத்தர்கள்
378/380 Court Road, Trincomalee
026 2225699 - 0775151336


# அனல்மின் அறிக்கை கையளிக்கப்பட்டது

சம்பூர் அனல் மின் நிலையத்தை உருவாக்குவதற்கு மிகவும் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாக இருந்த சூழல் தாக்க ஆய்வு அறிக்கையினை (Environmental Impact Assessment Report) இந்தியா இலங்கையிடம் கையளித்துள்ளது.

இந்தியாவின் நெசனல் தேர்மல் பவர் கோப்பரேசன் இந்த அறிக்கையினை இலங்கையின் மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபையிடம் கையளித்துள்ளது.

கடந்த ஆறுமாதங்களுக்கு முன்னரே சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டிய அறிக்கையானது இலங்கையொரு சனாதிபதித் தேர்தலை எதிர்கொண்டுள்ள நிலையில் திடீரென....

17



இந்தியாவின் நெசனல் தேர்மல் பவர் கோப்பரேசன் ஆந்திராவில் அமைத்துள்ள அனல் மின் நிலையம்

## கிழக்கில் நியாயாதிக்கத்தை நிறுவியது மேல் நீதிமன்றம்

கிழக்கின் மேல் நீதிமன்றுக்கு கிழக்கின் மாகாண அரச நடவடிக்கைகளை விசாரிக்கும் அதிகாரம் உண்டா? இல்லையா என்ற விவாதமொன்று எழுந்த போது தனது நியாயாதிக்கத்தை கிழக்கு மேல் நீதிமன்றம் மீள நிறுவியுள்ளது.

கிழக்கு மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி எம். இளஞ்செழியன் இவ்வராலாற்றுத் தீர்ப்பை அறிவித்து கிழக்கு மாகாண சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் சம்பந்தமாக, கிழக்கு மாகாண சபைக்கு

17

## கோடிக்கணக்கில் பணம் பெண்ணொருவரின் கணக்கில்?

கிழக்கின் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தில் நடந்ததாகக் கூறப்படும் பாரிய மோசடியில் சுருட்டப்பட்ட பணம் பெண்ணொருவரின் வங்கிக் கணக்கிலும் வைப்பிலிடப் பட்டுள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளன.

குறித்த பெண் ஊழியர் மோசடி நடைபெற்ற காலத்தில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தில் பணியாற்றி வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மோசடி தொடர்பாக விசாரணைகளை கிழக்கு மாகாண அரசின் கீழியங்கும் மூன்று குழுக்கள் முன்னெடுத்துள்ள அதேவேளை மத்திய அரசின் நேரடிக் கண்காணிப்பின் கீழும் விசாரணைக்கான அணியொன்று

17

## சீனன் குடாவிலிருந்து கள்ள வோட்டுக்கள்- ராஜித



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்காக அரசாங்கம் கள்ள வாக்குகளை பெருமளவில் பயன்படுத்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன குற்றம் சுமத்தியுள்ளார் என சர்வதேச ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

அரசாங்கம் கள்ள வாக்குச் சீட்டுக்களை சீனன்குடாவில் உள்ள கடற் படை முகாமில உள்ள இயந்திரம் மூலம் அச்சிட்டு அவை அங்கிருந்து வெலிசறை முகாமுக்கு கொண்டு வரப்பட்டுள்ள தகவலை கடற்படையினர் தமக்கு தெரிவித்துள்ளதாக ராஜித சேனாரத்ன கொழும்பில்

17

"சிவில் செயற்பாட்டாளர் மீது தாக்குதல் முயற்சி"

## திருகோணமலை தமிழ் சிவில் சமூக அமைப்பு சிரேட்ட காவல் அத்தியட்சகருக்குக் கடிதம்

திருகோணமலை மாவட்ட தமிழ் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களுள் ஒருவரும், மூதூர் இந்துக் குருமார் சங்கத்தில் தலைவருமான சிவஸ்ரீ. பாஸ்கரன் குருக்கள் மீது தாக்குதல் மேற்கொள்ள எடுக்கப்பட்ட முயற்சி தொடர்பாகத் தமது கடும் கண்டனத்தை திருகோணமலை மாவட்ட தமிழ் சிவில் சமூக அமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன் அவர் மீதான தாக்குதல் முயற்சி தொடர்பாக மூதூர் காவல்துறையினரின் விசாரணைகள் திருப்தியளிக்காதிருப்பதாகத் தெரிவித்துள்ள தமிழ் சிவில் சமூக அமைப்பு, திருகோணமலை மாவட்ட சிரேட்ட காவல்துறை அத்தியட்சகருக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

இக்கடிதத்தில் குறித்த தாக்குதல் முயற்சிக்கான உண்மையான காரணம்

17

AFTER O/L....
English for You
E4U
VEAL BUSINESS COLLEGE
4 MONTHS COURSE
No.159A, Sea View Road, Trincomalee - 026 222 76 22 / 0777 555 738

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# சிறுபான்மை அரசியலின் அறுவடைகள்

ஒடுக்கப்படுகின்ற இனங்களின் அரசியல் நிலைப்பாடுகள் இரண்டு பிரிவுகளில் உள்ளடக்கப்படலாம் என்பதை அனுபவங்களின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

அவ்வினங்களின் முன்னே விரிந்து கிடக்கும் அரசியல் வாய்ப்புக்கள் முறையே சிறுபான்மை அரசியலாகவும் , தேசிய அரசியலாகவும் பரிணமிக்கின்றன.

சிறுபான்மை அரசியல் என்பதன் விளக்கமும் தேசிய அரசியல் என்பதன் விளக்கமும் அந்ததந்த இனங்களின் வேர்களில் தான் தங்கியிருக்கின்றன.

ஒடுக்கப்படுகின்ற ஒரு இனம் அந்நாட்டின் மீது உரிமையைக் கொண்டிருப்பதுடன், தனக்குரிய சுயநிர்ணய உரிமையுடன் வாழ்ந்த காலத்தைத் தனது வரலாற்றில் கொண்டும், தனக்கான தனித்த வாழ்க்கைமுறை, கலப்படமற்ற கலாசாரம் போன்ற இன்னோரன்னவற்றைக் கொண்டிருக்குமாயின் அந்த இனத்திற்கான அரசியல் வாய்ப்பானது தேசிய அரசியல் வாய்ப்பாகவே காணப்படுகின்றது.

மற்றைய பக்கத்தில் மேற் கூறியவற்றையெல்லாம் கொண்டிருக்காத ஆனால் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே அந்தப் பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்ற இனமொன்று, சிறுபான்மை அரசியலையே முன்னெடுத்துச் செல்ல முயற்சிக்கும்.

அதாவது ஒரு நாட்டிலுள்ள மூன்று இனங்களில் முதலாவது இனம் ஒடுக்கும் இனமாகவும், இரண்டாவது இனம் ஒடுக்கப்படும் இனமாகவும் உள்ள நிலையில் ஒடுக்கப்படும் இனமானது தம்மீதான ஒடுக்குமுறைக்கு எதிராக போராடத் தொடங்கியிருப்பின் அந்நாட்டில் வாழும் மூன்றாவது இனம் தமக்கான சிறுபான்மை அரசியலையே முன்னெடுத்துச் செல்ல முடியும்.

இதற்கு நல்லதோர் உதாரணமாக தென்ஆபிரிக்க இனவெறிப் போரை கொள்ளலாம். அந்நாட்டில் வெள்ளையினத்தவர்கள் ஒடுக்குபவர்களாகவும், தென் ஆபிரிக்க நாட்டின் வம்சாவளியினர் ஒடுக்கப்படுபவர்களாகவும் - வெள்ளையின ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடுபவர்களாகவும், இருந்த வேளையில் அந்நாட்டில் இருந்த மூன்றாவது இனமான இந்தியர்கள் வெள்ளையினத்தவருடன் சேர்ந்து தமது அரசியல் அபிலாசைகளைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் தமது அரசியலை முன்னெடுத்துச் சென்றிருந்தனர்.

ஒரு தேசிய அரசியலுக்கும் சிறுபான்மை அரசியலுக்கும் இடையிலான மிகப் பெரும் வேறுபாடு தேசிய அரசியலானது சுயாட்சி அல்லது சமத்துவ ஆட்சி அல்லது கூட்டாட்சி, சுயநிர்ணய உரிமை போன்ற உயர்ந்த இலட்சியங்களுக்கான அரசியல் செயற்பாடாகக் காணப்படும்.

ஒடுக்குமுறையொன்றின் கீழிருந்து வெளிவரும் இத் தேசிய அரசியலின் எண்ணக்கருக்கள் உடனடியாக எட்டக் கூடியவை அல்ல. அவை பல்வேறு தியாகங்கள் அழிவுகளின் பின்னரே எட்டப்படத்தக்கவை. அவ்வாறான அழிவுகள் தியாகங்களின் போது அவ்வினம் மேலும் சுருங்கும் பேராபத்தையும் கொண்டுள்ளது. எனினும் அதன் நோக்கம் தேசிய அரசியலை நோக்கிய பயணிப்பாகவே இருக்கும்.

இவ்வாறு தேசிய அரசியல் பயணிப்பில், நாளாந்தம் கிடைக்கக்கூடிய நன்மைகள் பலவற்றை அந்த இனம் இழக்க வேண்டியிருக்கலாம். ஆனால் பயண முடிவில் அடையப்படுகின்ற இலக்குகளின் அறுவடை அந்த இனத்தின் எதிர்காலச் சுபீட்சமே!

இங்கு சிறுபான்மை அரசியலின் அறுவடைகளை அம் மூன்றாவது இனம் ஒடுக்குகின்ற இனத்துடன் கூடி நாளாந்தம் பெற்றுக்கொள்ளும். குறுகிய கால அறுவடைகள் சிறுபான்மை அரசியலின் பொரிமணிகள்.

எனினும் சிறுபான்மை அரசியலின் அறுவடைகள் எக்காலத்திலும் அச்சிறுபான்மை அரசியலைத் தேசிய அரசியலாக உருப்பெற வைக்கமாட்டாது. ஏனெனில் தேசிய அரசியலில் உடனடித் தீர்வுகள் எவையுமில்லை....

-மாயன்-

# ஈச்சந்தீவு பாதைப் புணரமைப்பு கைவிடப்பட்டுள்ளது.

## "மக்கள் அவலம்"

ஈச்சந்தீவுக் கிராமத்தையும் சின்னத்தோட்டம் கிராமத்தையும் இணைக்கும் பாதையானது கடந்த பல வருடங்களாக சேதமுற்று மக்களின் பாவனைக்குதவாத நிலையில் காணப்படுகின்றது. கடந்த காலங்களில் மக்களே மண் மூட்டைகளை நிரப்பி இதனை ஓரளவு சரி செய்தனர்.

நடந்து போய் வரக் கூடிய நிலை காணப்பட்ட போதும் அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக வழியின் ஒரு பகுதி முற்றாக உடைந்துள்ளது. இதனால் முற்று முழுதாக போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. இறந்தவர்களின் உடல்கள் தகனம் செய்வதில் மக்கள் கடும் சிரமங்களை அனுபவிக்கின்றனர். இதனை பல அதிகாரிகளுக்கு பல முறை அறிவித்தும் எவ்வித பயனுமில்லை. கடந்த 2014.12.06 அன்று வீதி அபிவிருத்தி திணைக்களத்தால் பாதையை புனர் நிர்மானிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சியும் பயனளிக்கவில்லை. மழை கூடுதலாக பெய்தமையே காரணம் எனக் கூறப்பட்டுள்ளது. அதன் பின்னர் இப்பணி முற்று முழுதாகக் கைவிடப்பட்டுள்ளதா என்பது பற்றி தெரியவரவில்லை.


இடைநடுவில் கைவிடப்பட்ட திருத்தப்பணி

# சமாதான நீதவான்



திருகோணமலை அந்தோனியார் வீதியை சேர்ந்த ஜெயினுலாப்தீன் நிஹாஸ் அண்மையில் மூதூர் மாவட்ட மெகஸ்ரேட் நீதிவான் ஐ.பயாஸ் றசாக் அவர்கள் முன்னிலையில் சத்தியபிரமானம் செய்து திருகோணமலை மாவட்ட சமாதான நீதிவானாக பதிவி யேற்றுக் கொண்டார். (அச்சுதன்)

# ஆதரவுப் பேரணி

(றபாய்தீன்பாபு ஏ.லத்தீப்)

ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஸவை ஆதரித்து திருகோணமலையில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வாகனப் பேரணியொன்று நடாத்தப்பட்டது.ஸ்ரீ.ல.சு.கட்சியின் திருகோணமலை தேர்தல் தொகுதி அமைப்பாளரும் பொருளாதார பிரதி அமைச்சருமான சுசந்த புஞ்சிநிலமேயின் வழிகாட்டலில் இப்பேரணி நடாத்தப்பட்டது.

வடகரை வீதியூடாக புல்மோட்டை வீதியை நோக்கி இப்பேரணி ஜனாதிபதியின் படங்களையும் பதாதைகளையும் தாங்கியவாறு சென்றது. ஜமாலியா முச்சந்தியில் நகரசபை உறுப்பினர் என்.நூர்முகம்மது அவர்களின் எற்பாட்டில் அமைக்கப்பட்ட தேர்தல் அலுவலகம் சுசந்த புஞ்சிநிலமேயினால் திறந்து வைக்கப்பட்டது.





கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் புதிய கட்டிடங்களை அமைப்பதற்காக வருகை தந்திருந்த உயர் கல்வி அமைச்சருடன் மாகாண ஆளுனர், பல்கலைக்கழக உபவேந்தர் முனைவர் கி.கோபிந்தராஜா, வளாக முதல்வர் முனைவர் பிறேம்லால் டி சில்வா ஆகியோர்


உயர்கல்வி அமைச்சர் திருமலை வளாகத்தில்



# அகம் நிறுவனத்தின் கண்காட்சிச் சந்தை





(அச்சுதன்)

யுத்தத்தின் பின் மீள் குடியேற்றயேற்றப் பட்டுள்ள மூதூர் கிழக்கு மக்களுடைய உற்பத்திகளுக்கு சிறந்த சந்தை வாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்கில் திருகோணமலை மாவட்ட இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தினால் சுவீடன் கூட்டறவு நிறுவன நிதி உதவியின் ஊடாக கண்காட்சிச் சந்தையொன்று நடைபெற்றுள்ளது.

கூட்டறவு சங்கங்களை வலுவூட்டி அதன் மூலம் இக் கண்காட்சி நிகழ்வினை அகம் நிறுவனம் கட்டைப்பறிச்சான் பொதுச்சந்தை வளாகத்தில் கடந்த 05ம் திகதி முதல் 07ம் திகதி வரை நடாத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புச் செய்திகள்

## “யுத்தத்தை நிறுத்தியிருக்காவிட்டால் தமிழ் இல்லாமல் போயிருக்கும்” வி.முரளிதரன்



யுத்தத்தை அப்போது தான் நிறுத்தாமல் விட்டிருந்தால், இப்போதுள்ள தமிழ் இளைஞர், யுவதிகள் இல்லாமல் போயிருப்பார்கள் என்று மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

“திவிநெகும” திணைக்களத்தின் “செழிப்பான இல்லம்“ எனும் செயற்றிட்டத்தின் கீழ், போரதீவுப்பற்று பிரதேச செயலளர் பிரிவிலுள்ள பயனாளிகள் வீடுகளை திருத்துவதற்கான 2,500 ரூபாய் முதற்கட்ட கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு, திக்கோடை கணேச வித்தியாலயத்தில் புதன்கிழமை (10) நடைபெற்றது. இங்கு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

“2002ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் நான் இருந்தபோது, தமிழ் மக்களுக்காக ஒஸ்லோவுக்குச் சென்று அப்போதிருந்த இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தினேன். அவ்வாறு பல பேச்சுவார்தைகள் நடத்தியபோதிலும், இறுதியில் எதுவும் நடைபெற்றதாக இல்லை. இந்த நிலையில், நானே உணர்ந்து யுத்தத்தை நிறுத்தினேன்.

நான் அப்போது யுத்தத்தினை நிறுத்தாமல் விட்டிருந்தால் இப்போது இருக்கும் எமது தமிழ் இளைஞர் யுவதிகள், இல்லாமல் போயிருப்பார்கள். இப்போதுள்ள அரசாங்கத்தை பலப்படுத்தி நாங்கள் அனைவரும் நன்மை அடையவேண்டும். இந்த விடயத்தில் எமது தமிழ் மக்கள் மிக கவனமாக சிந்தித்துச் செயற்படவேண்டும்.

இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால், ஆளும் கட்சியில் 25 நாடாளுமன்ற உறுப்பினர்களை நாம் உருவாக்கிவிடலாம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‘வுக்கு 60,000 வாக்குகள் கிடைத்தன. இவை இந்த மாவட்டத்திலுள்ள முஸ்லிம் மக்களால் அளிக்கப்பட்ட வாக்குகளாகும். கடந்த தேர்தல்களில் எதிர்த் தரப்புக்கு எமது மக்கள் வாக்களித்தது போலல்லாமல், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‘வுக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்யவேண்டும்.

மேலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் பல உட்கட்டுமான அபிவிருத்திகளை மேற்கொண்டு வருகின்றோம். அதுபோன்று, இந்த மாவட்ட மக்களின் வாழ்வாதார த்தை மேம்படுத்தும் வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப் படுகின்றன. வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‘, திவிநெகும திணைக்களத்தின் ஊடாக திவிநெகும திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார். இத்திட்டத்தினூடாக குறைந்த வட்டி வீதத்தில் கடன் வசதிகள், தொழில் உபகரணங்கள் வழங்குதல் போன்ற பல உதவிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இது தவிர, இந்த மாவட்ட மக்களின் நலன் கருதி ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தின் கீழ், 24 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. நனசல திட்டத்தின் கீழ் 14 பாடசாலைகளும் இதை விட, மஹிந்தோதைய திட்டத்தின கீழ் 5 பாடசாலைகளும் தெரிவுசெய்யப்பட்டு அபிவிருத்திகள் நடைபெறுகின்றன. நீர்ப்பாசன வசதி, உரமானியம், அரச உத்தியோகஸ்தர்களுக்கு சம்பள உயர்வு உட்பட இம்மாவட்ட மக்களின் அனைத்து விடயங்களுக்கும் இந்த அரசு உதவுகின்றது.

கடந்த 5 வருடங்களினுள் போரதீவுப்பற்று பிரதேச செயலகத்தினூடாக மாத்திரம் 61 கோடி ரூபாய் நிதி. இப்பிரதேச அபிவிருத்திகளுக்காக செலவாகியுள்ளது. இதனை விட மின்சாரம், நீர்ப்பாசனம் போன்றவற்றுக்கு விசேட திட்டத்தினூடாக பல கோடிக்கணக்கான நிதி இப்பிரதேசத்தில் செலவு செய்யப்பட்டுள்ளது“ என்றார்.

## திருமணம் செய்யுமாறு வற்புறுத்தியவர் கைது

ஏறாவூர் பிரதேசத்தில் யுவதி ஒருவரை திருமணம் செய்து கொள்ளுமாறு வற்புறுத்தி அந்தரங்க உறுப்பை காட்டியதாக கூறப்படும் இளைஞர் ஒருவரைக் கைது செய்திருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். 19 வயதான யுவதியிடமே மேற்படி இளைஞன் இவ்வாறு அநாகரீகமாக நடந்து கொண்டுள்ளார். குறித்த யுவதி ஏறாவூர் பொலிஸில் செய்த முறைப்பாட்டை அடுத்து, அந்த இளைஞனைக் கைது செய்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

## சமுத்திர பல்கலையில் பயிற்சி

நாவலடியிலுள்ள இளைஞர் விவகார திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் சமுத்திரப் பல்கலைக்கழகத்தில் பயிற்சிகளை பூர்த்திசெய்த 15 பேருக்கு சான்றிதழ்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை வியாழக்கிழமை வழங்கப்பட்டன. கடலக இயந்திரப்பயிற்சி, நீச்சல் பயிற்சி, கடலக வரைபு வாசிப்பும் தொலைத்தொடர்பும் உள்ளிட்ட பயிற்சிகளை பூர்த்திசெய்தவர்களுக்கே சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## இராணுவ பயிற்சி முடிவும் பரிசளிப்பும்



இராணுவத்தின் 23ஆவது படைப்பிரிவுத் தலைமையகத்தில் முதலாவது பயிற்சிகளை நிறைவுசெய்த 405 சிங்கள, சிங்கள, முஸ்லிம் இராணுவ வீரர்களின் பயிற்சி நிறைவு நாள் நிகழ்வு, புணாணையிலுள்ள படைப்பிரிவின் தலைமையகத்தில் புதன்கிழமை (10.12.2014) நடைபெற்றது. பயிற்சிகளை நிறைவு செய்தவர்களில் 31 தமிழ் இளைஞர்களும் 7 முஸ்லிம் இளைஞர்களும் அடங்குகின்றனர். நாடு பூராகவும் தெரிவுசெய்யப்பட்ட இளைஞர்கள், மூன்றரை மாத பயிற்சிகளை பூர்த்தி செய்தனர். பயிற்சியின்போது, திறமைகளை வெளிக்காட்டிய இராணுவ வீரர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

## வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு செல்வோர் தொடர்பான ஆய்வு

தெரிவுசெய்யப்பட்ட செங்கலடி பிரதேச செயலகத்தை மாதிரியாகக் கொண்டு, மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்புகளுக்காக செல்லும் பெண்களின் பொருளாதார மற்றும் சமூக விளைவுகளை கண்டறியும் ஆய்வு கடந்த வாரம் தேசிய மனிதவள அபிவிருத்திச் சபையால் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வு தொடர்பில் விளக்கமளிக்கும் செயலமர்வு மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.கிரிதரன் தலைமையில் செவ்வாய்க்கிழமை (09.12.2014) நடைபெற்றது. தேசிய மனித வள அபிவிருத்திச் சபையின் உதவிப் பணிப்பாளர் சி.தணிகசீலன் இது தொடர்பான ஆய்வு அறிக்கையை சமர்ப்பித்து விளக்கமளித்தார்.

## மனித உரிமைகளை பறிக்கவோ வழங்க மறுக்கவோ முடியாது

ஒரு மனிதனுக்குள்ள மனித உரிமைகளை எவரும் பறிக்கவோ அல்லது வழங்காதிருக்கவோ முடியாது என மனித உரிமை ஆணைக்குழுவின் கிழக்கு பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தெரிவித்தார். சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் புதன்கிழமை (10.12.2014) மட்டக்களப்பு கிறீன்காடன் ஹோட்டலில “சுழலும் சொல் அரங்கு” எனும் தலைப்பில் நிகழ்வு நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## மட்டு மக்கள் எமது பக்கமே



மட்டக்களப்பு மாவட்ட மக்கள் 1978ஆம் ஆண்டிலிருந்து எமது பக்கமே இருந்தனர். பின்னர் 1984ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு பிரச்சினைகள் காரணமாக சற்றுத் தளம்பல் ஏற்பட்டது. தற்போது இந்த மாவட்ட மக்கள் எமது பக்கம் வந்துள்ளார்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் அரசரெட்ணம் சசிதரன் தெரிவித்தார். மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் முன்னெடுக்கவுள்ள தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பில் திங்கட்கிழமை (08.12.2014) கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## திவிநெகும ஊடாக வளைக்கப்படும் மக்கள்

போரதீவுப்பற்று பிரதேச செயலளர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு, ஒரு குடும்பத்துக்கு 2,500 ரூபாய் வீதம் 7,624 குடும்பங்களுக்கு, 19,060,000 ரூபாய் நிதி புதன்கிழமை (10.12.2014) வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக, போரதீவுப்பற்று பிரதேச திவிநெகும அபிவிருத்தி உத்தியோகஸ்தர் க.உதயகுமார் தெரிவித்தார். திவிநெகும திணைக்களத்தினூடாக செழிப்பான இல்லம் ' எனும் செயற்றிட்டத்தின் கீழ் திவிநெகும பயனாளிகளுக்கு வீடு திருத்துவதற்காக ஒரு குடும்பத்துக்கு 10,000 ரூபாய் மானியமாக ஓதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மீழ்குடியெற்றப் பிரதியமைச்சர் விநாயகமூரத்தி முரளிதரன், மற்றும் திவிநெகும அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் என பலரும் இதில் இணைந்து கொண்டு மக்களுக்கான இவ்வுதவிகளை வழங்கி வைத்தனர்.

## த.ம.வி.புலி அலுவலகம் திறப்பு

கிரான்குளத்தில் தேர்தல் கடமைகளுக்காவும், மற்றும் மக்களின் சேவைக்காகவும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் கட்சியின் அலுவலகம் கட்சியின் தலைவரான சி.சந்திரகாந்தனால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இவ் அலுவலகம் கிரான்குளம் பிரதான வீதியில் அமைந்துள்ளது. இந்நிகழ்வில் பிரதேச செயலாளர், த.ம.வி.புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர், செயற்குழு உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## முஸ்லீம் காங்கிரஸ் ஏன் மௌனிக்கிறது??

முஸ்லிம் காங்கிரஸ் இன்று எதிரணியின் முன் மூக்குடைபட்டு, ஆட்சியாளர் முன் முழந்தாளிட்டு, திக்குத் தெரியாது, மக்கள் முன் மௌனித்து நிற்கின்றது“ என கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ்.எஸ்.பி.அப்துல் மஜீத் திங்கட்கிழமை(8.12.2014) தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், “நாட்டில் தேசியமட்டத் தேர்தல் ஒன்று நெருங்கி வருகின்றது. இத்தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்பது பற்றி மக்கள் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். கட்சித் தலைமைகள் உரிய காலத்தில் முறையாக வழிகாட்டாமையால் அந்த தனிமனித தலைமைகளுடன் மக்கள் இன்று இல்லை.

சுயமாகச் சிந்திக்கத் தொடங்கியுள்ள மக்கள் தாம் வாக்களிக்கவேண்டிய கட்சி தொடர்பில் முடிவெடுத்துவிட்டார்கள் எனவும் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு MALAIMURASU

# தேசிய செய்திகள்

## மருத்துவக் கல்விக்கு அகதி அந்தஸ்த்து தடை



இந்தியாவில் மருத்துவ கல்வியை தொடர தடை விதிக்கப்பட்ட ஈழ அகதி நந்தினிக்கு சீனா பல்கலைக்கழகத்தில் அனுமதி கிடைத்துள்ளது.

1990ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து தமிழகத்துக்கு அகதியாக குடும்பத்துடன் சென்ற இவர் அரச்சலூர் நவரசம் மெட்ரிக் பாடசாலையில் சென்ற வருடம் உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்தி மருத்துவ கல்விக்கு தெரிவானார்.

இருப்பினும் இந்திய மருத்துவ சபையின் சட்டத்திட்டபடி அகதியாக வருபவர்கள் மருத்துவ கல்வி கற்க முடியாது. என்பதனால் பொறியியல் கல்வியை கற்க முடியுமென கூறப்பட்டது. ஆனால் அதற்கு நந்தினி மறுப்பு தெரிவித்துவிட்டார்.

இந்த நிலையில் இலங்கையை சேர்ந்த தனியார் அறக்கட்டளை நந்தினியின் நிலைமையை இணைய தளம் மூலம் அறிந்து கொண்டு. அவர்களை குடும்பத்துடன் இலங்கைக்கு திருப்பி அழைத்தனர்.

அதனை தொடர்ந்து சீனா நாட்டில் சென்னியாங் நகரில் உள்ள தனியார் மருத்துவ கல்லூரியில் குறித்த நிறுவனத்தின் உதவியுடன் மருத்துவ கல்வியை கற்று வருகின்றார்.

## ரணிலின் விலை ஒரு கோப்பை பால் "ரீ"

எங்கள் கட்சி செயலாளர் எதிர்கட்சிக்கு போனார் அதற்கு பதிலாக ஐ.தே.க பொது செயலாளரை எம் பக்கம் மாற்றினோம் இப்பொழுது அவர் சுகாதார அமைச்சரானார்.

அவருக்கு நான் ஒரு கப் கோப்பியை தான் கொடுத்தேன் எம் பக்கம் வந்துவிட்டார். இதே போல் ரணிலுக்கு ஒரு கப் டீயை கொடுத்தால் அவரும் எம் பக்கம் வந்து விடுவார் இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த நேற்று அனுராதபுரத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில் தெரிவித்தார்.

## பணத்திற்காக யாழ் இளைஞன் கோரக்கொலை

யாழ்ப்பாணத்திற்கு பொருட்களை ஏற்றிச்சென்றபோது, காணாமற்போன லொறியில் பயணித்த முல்லைத்தீவு இளைஞனின் கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரை கைதுசெய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ். திருநெல்வேலி பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு உணவுப்பொருட்கள் ஏற்றிச்சென்ற லொறியொன்று கடந்த 30 ஆம் திகதி காணாமற்போயிருந்தது

45 இலட்சம் ஷரூபா பெறுமதியான பொருட்களுடன் பயணித்த லொறியுடனான தொடர்பு புத்தளம் பகுதியிலிருந்து துண்டிக்கப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பில் யாழ். கோப்பாய் மற்றும் கொழும்பு பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் லொறியின் நடத்துனர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், லொறியில் இருந்த பொருட்களை சாரதியுடன் இணைந்து விற்றமை மற்றும் லொறிக்கு பொறுப்பாக அனுப்பப்பட்ட இளைஞன் கொலைசெய்யப்பட்டு காட்டுப் பகுதியில் புதைக்கப்பட்டமை ஆகிய விடயங்கள் தெரியவந்துள்ளன.

இதனையடுத்து, மல்லாவி - வவுனிக்குளம் பகுதியைச் சேர்ந்த 20 வயதான இளைஞனின் சடலம் அனுராதபுரம் - புத்தளம் இடையிலான காட்டுப்பகுதியில் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரை கைதுசெய்வதற்கான மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக காவல்துறை ஊடகப் பிரிவு குறிப்பிட்டது.

## விமானிகளின் இறுதி வார்த்தைகள் "பனிமூட்டம் காரணமாக பறப்பது கஸ்டமாக உள்ளது"

கொழும்பின் புறநகர்ப் பகுதியான அத்துருகிரிய ஹோகந்தரவில் விமானமொன்று இன்று காலை விபத்துக்குள்ளாகியுள்ளது.

அதிக பனிமூட்டமே இந்த விமான விபத்துக்கு காரணம் என கடுவலை நீதவான் தம்மிக்க ஹேமபால குறிப்பிட்டுள்ளார்.

விபத்து இடம்பெற முன்னரே பனி மூட்டம் நிலவுவதாகவும், சீராக விமானத்தைச் செலுத்த முடியாதிருப்பதாகவும் இரத்மலானை விமானப் படைத் தளத்தின் கட்டுப்பாட்டுப் பிரிவுக்கு விமானிகள் தகவல் வழங்கியிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் பின்னரே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விமானம் விபத்துக்கு உள்ளாக முன்னர் குறித்த பிரதேசத்திலுள்ள மரமொன்றின் மீது மோதுண்டதாக பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் விமானியான குருநாகல் - கொக்கரல்ல பிரதேசத்தைச் சேர்ந்த சமந்த அபேவர்தன உயிரிழந்திருப்பதாகவும், ஸ்ரீலங்கா விமானப் படையைச் சேர்ந்த தரங்க மற்றும் பி.ஜீ. சாந்த ஆகியோரும் உயிரிழந்திருப்பதாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.





சமந்த அபேவர்த்தன கொழும்பு றோயல் கல்லூரியின் மாணவரான இவர் குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

இதுவரை 2239 மணிநேரம் விமானமோட்டியுள்ள இவர் சிறந்த விமானியாக பட்டியலிடப்பட்டுள்ளார்.

அத்துடன் இரு மாதங்களுக்கு முன்னரே இவர் திருமணம் செய்திருந்தார் .

## வரி செலுத்துவோருக்கு வெள்ளிப் பதக்கங்கள்

உரிய நேரத்தில், சரியாக வரி செலுத்துபவர்களுக்கு தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்கள் வழங்குவதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தீர்மானத்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், இந்த மாதம் சுமார் 500 பேருக்கு பதக்கங்கள் வழங்கப்படவுள்ளதாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் வசந்தி மஞ்சநாயக்க குறிப்பிட்டார்.

அத்துடன், எதிர்வரும் காலங்களில் சரியாக வரி செலுத்துபவர்களுக்கு பல்வேறு சலுகைகள் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

சரியாக வரி செலுத்துபவர்களுக்கு வங்கிகளில் குறைந்த வட்டியுடன் கடன் வழங்குவதற்கும், சுங்கம் மற்றும் குடிவரவு திணைக்களத்தில் விசேட சலுகைகளை வழங்குவதற்கும் தீர்மானித்துள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.



## அரசியல் பிரசார வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதியது

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் மேற்கொள்ளும் முகமாக ஜனாதிபதியின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் அருண் தம்பிமுத்து உட்பட 19 பேர், பயணித்த 03 வாகனங்கள் விபத்துக்குள்ளானதால், 07 படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மரப்பாலத்தில் இன்று வெள்ளிக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. அருண் தம்பிமுத்து உட்பட 19 பேரும் 03 வாகனங்களில் பயணித்தனர். இதன்போது, முன்னால் இவர்களின் வாகனமொன்று பயணித்தபோது, பின்னால் பயணித்த இரண்டு வாகனங்களில் ஒன்று மற்றொன்றை மோதி, முன்னால் சென்றுகொண்டிருந்த வாகனத்தையும் மோதியுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த 07 பேரும் உடனடியாக கரடியனாறு ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இருப்பினும், ஜனாதிபதியின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் அருண் தம்பிமுத்து எந்தவித காயமின்றி தப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஹிருணிகா நாட்டைவிட்டு வெளியேறினாரா?

மேல்மாகணசபை உறுப்பினர் ஹிருனிகா பிரேமசந்திர, தனது தாயுடன் வெளிநாடொன்றுக்குப் பயணமாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த தகவலை முல்லேரியா பிரதேச சபைத் தலைவர் சோலங்க ஆராச்சி வெளியிட்டுள்ளார்.

எனது தங்கை ஹிருனிகா எதிர்க் கட்சியில் இணைந்துகொண்டதால், அவருக்கு அரசாங்க தரப்பிலிருந்து பல இன்னல்களும் கஷ்டங்களும் ஏற்படுத்தப்படுகின்றன.

இதனால் அவர் உடன் வெளிநாடு சென்றுள்ளார். ஆனால், அவர் சில நாட்களின் பின் நாடு திரும்பி, மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் பிரசாரத்தில் கலந்து கொள்வார் எனவும் அவர் தெரிவித்தார்.

ஹிருணிக்கா கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஆளுங்கட்சியிலிருந்து விலகி, எதிரணியில் இணைந்து கொண்டார். பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பதாக பகிரங்கமாக தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்


## இந்திய மீனவர்களைக் கைது செய்துள்ள பாகிஸ்தான், பங்களாதேஸ்

சர்வதேச கடல் எல்லையை தாண்டி மீன்பிடித்ததாக இந்திய மீனவர்கள் 58 பேரை பாகிஸ்தான் அரசு கைது செய்துள்ளது. அத்துடன் அவர்களின் 10 படகுகளையும் பறிமுதல் செய்துள்ளது.

அதேவேளை தமிழகத்தின் குமரி மாவட்டத்தைச் சேர்ந்த 24 மீனவர்கள் தங்களுடைய 3 மீன்பிடி படகுகளை மேற்கு வங்காள மாநில மீன்வளத்துறை அதிகாரிகளிடம் பதிவு செய்து கொண்டு கடந்த நவம்பர் மாதம் 17-ம் தேதி கொல்கத்தா அருகில் உள்ள பெட்டுவாகட் பகுதியில் இருந்து கடலுக்குள் மீன்பிடிக்க சென்றனர்.

இந்நிலையில், இந்த 26 மீனவர்களையும் வங்காளதேச கடலோரக் காவல் படையினர் நேற்று வழிமறித்து பிடித்து வைத்துள்ளதாக தமிழக மீனவர்கள் மேம்பாட்டு அமைப்பின் தலைவர் ஜஸ்ட்டின் அந்தோனி செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

## வலுவிழக்கும் எச்.ஐ.வி



எயிட்ஸ் நோயைத்தோற்றுவிக்கும் எச் ஐ வி வைரஸ் தனது தீவிரத்தன்மையை படிப்படியாக இழந்துவருவதாக ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழக ஆய்வு ஒன்று தெரிவித்திருக்கிறது.

இதன்காரணமாக, எச்ஐவி வைரஸின் தொற்றும் தன்மை குறைவதோடு, மனிதர்களின் உடலுக்குள் எச்ஐவி வைரஸ் சென்றபிறகு அது மனித உடலைத்தாக்கி முழுமையான எயிட்ஸ் நோயாக பரிமாணம் எடுப்பதற்குத் தேவையான கால அளவும் அதிகரிப்பதாகவும் இந்த ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எச்ஐவி வைரஸானது மனித உடலில் புகுந்து மனித உடலின் செல்களுக்குள் புகுந்து அங்கே பல்கிப்பெருகும்போது, மனித உடலின் நோய் எதிர்ப்பணுக்களின் கண்களில் படாமல் தப்பிக்கும் நோக்கில் பலவித மரபணு மாற்றங்களை மேற்கொள்கிறது. எச்ஐவி வைரஸுக்குள் ஏற்படும் இந்த பரிணாம வளர்ச்சி காரணமாக அதன் தீவிரத்தன்மை கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து வருவதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பொட்ஸ்வானா மற்றும் தென் ஆப்ரிக்காவை சேர்ந்த நூற்றுக்கணக்கான பெண்களை ஆராய்ந்தபிறகு தாங்கள் இந்த முடிவுக்கு வந்ததாக ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த முடிவுகள் ஓரளவு ஊக்கத்தை தந்தாலும், இன்னமும் இந்த வைரஸ் ஒரு குணப்படுத்த முடியாத சவாலாகவே தொடர்வதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இந்த ஆய்வின் முடிவுகள் இறுதியானவை அல்ல என்றாலும் எச் ஐ வி தொற்றைத் தடுப்பதிலும் எயிட்ஸ் நோயை கட்டுப்படுத்துவதிலும் இதன் முடிவுகள் பெருமளவு பயன்படும் என்று தெரிவித்தார் இந்தியாவின் தேசிய தொற்றுநோய் தடுப்பு மையத்தின் தொற்றுநோய் புலனாய்வு அதிகாரி மருத்துவர்

## பலஸ்தீன அமைச்சரின் மரணம் - குற்றச்சாட்டுக்களை மறுக்கும் இஸ்ரேல்



இறுதிப் பயணத்தில் அமைச்சரின் மகள்

காசா பள்ளத்தாக்கில் பலஸ்தீனியர்களால் மேற்கொள்ளபடப்ட ஆர்ப்பாட்டங்களைக் அவதானித்து அவ்வார்ப்பாட்டங்களில் பங்புற்றவும் சென்ற பாலஸ்தின அமைச்சர் ஒருவர் திடீர் மரணமானதைத் தொடர்ந்து பாலஸ்தீனியத் தரப்பு இஸ்ரேலின் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளது.

அமைச்சர் "ஷியாத் அபு இன" இஸ்ரேலிய இராணுவத்தின் தாக்குதலுக்கு இலக்காகியே மரணமுற்றதாக அவரது பிரேத பரிசோதனை அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு பாலத்தீனத் தரப்பு இக்குற்றச்சாட்டுக்களை முன்மொழிந்துள்ளது.

குறித்த அமைச்சரின் மரணம் சம்பவிக்கக் காரணம் அவரது நெஞ்சுப்பகுதியில் ஏற்படுத்தப்பட்ட அழுத்தம் என குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் குறித்த அமைச்சரை இஸரேலிய இராணுவத்தினர் தமது துப்பாக்கியின் பின்புறத்தால் நெஞ்சுக்கூட்டுப் பகுதியில் தாக்கியதாகவும் தெரிவித்துள்ளது.

எனினும் இக்குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ள இஸ்ரேல் ஏற்கனவே இதயக் கோளாறுக்குள்ளாகியிருந்த அமைச்சர் குறித்த கலவரங்களைப் பார்வையிட வந்தபோது ஏவப்பட்ட கண்ணீர்ப்புகையினை அளவுக்கு ஆதிகமாகவே சுவாசித்தாலேயே இந்த மரணம் நிகழ்ந்துள்ளது எனத் தெரிவித்துள்ளது.


## "வறிய சீனர்களுக்கு வலைவீச்சு" வியட்நாமியப் பெண்கள் மாயம்

வறிய சீனர்களைத் திருமணம் செய்த பல வியட்நாமியப் பெண்கள் ஒரு சேரக் காணாமற் போயுள்ளனர்.

சீனாவில் குடும்பத்திற்கு ஒரு குழந்தை என்ற திட்டத்தால் பெண்களின் எண்ணிக்கை மிகக் குறைவடைந்துள்ளது. இதனால் சீனப் பெண்களை மணக்க சீன ஆண்கள் பெருமளவு செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து வெளிநாட்டுப் பெண்களை மணம் முடிக்கச் சீனர்கள் வீரம்புவது அதிகரித்து வருகின்றது. இதனைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட வியட்நாமியத் தரகர் ஒருவர் பெண்ணொருவருக்கு சுமார் 16000 டொலர்களைத் தரகுப் பணமாகப் பெற்றுக்கொண்டு வியட்நாமியப் பெண்களை சீனர்களுக்கு மனம் முடி் வைத்துள்ளார்.

இந்நிலையில் இந்தப் பெண்கள் அனைவரும் ஒருசேரக் காணாமற் போயுள்ளனர். ஒட்டுமொத்தமாக இவர்கள் காணாமற் போனதை அடுத்தே இத் திருமண நடவடிக்கை ஒரு சதிச் செயல் எனத் தெரிய வந்துள்ளது.

## அமெரிக்கக் கடற்படையின் அதி நவீன லேசர் ஆயுதம்




அமெரிக்கக் கடற்படை அதிநவீன லேசர் கதிர்கைளக் கொண்ட ஆயுதமொன்றை முதன் முறையாகப் பரிசீலித்துப்பார்த்துள்ளது.

உறுதியான இன்பிறாரெட் வெப்பமேற்றப்பட்ட கதிர்களை இலக்கு நோக்கித் துல்லியமாக வெளிப்படுத்தக் கூடிய இவ் ஆயுதத்தின் பரீட்சிப்பானது பேர்சியக் குடாவில் நிலைகொண்டுள்ள யுஎஸ்எஸ் பொன்ஸ் தாக்குதல் கப்பலால் நிகழ்த்தப்பட்டுள்ளது.

2020ம் ஆண்டில் லேசர் இராணுவத் தாக்குதலுக்கான முழுமையான தொகுதி உருவாகிவிடுமாம.

## கூடங்குளம் வெற்றியால் மேலும் 10 அணு மின்னகங்கள்



கூடங்குளம் அணுமின் நிலையம் வெற்றி பெறுள்ளதாகவும் அதனையடுத்து மேலும் 10 அணு மின்னகங்களை இந்தியா ஆரம்பிக்க விருப்பதாகவும் இந்தியா வந்திருக்கும் ரஸ்ய அதிபர் விளாடிமிர் புடினுடனான சந்திப்புக்கு பிறகு இந்தியப் பிரதமர் மோடி கூறியுள்ளார்.

இந்தியா மற்றும் ரஸ்ய நாட்டுத் தலைவர்களுக்கு இடையேயான பேச்சுவார்த்தைகளின் முடிவில், இராணுவம், அணுசக்தி, தகவல் பரிமாற்றம், உட்கட்டமைப்பு மேம்பாடு, வர்த்தகம் உட்பட கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் இருபது ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

கூட்டாக செய்தியாளர்களை இரு தலைவர்களும் சந்தித்த போது, இந்திய-ரஸ்ய உறவுகள் என்றென்றும் போற்றப்படும் என்று இருவருமே உறுதியளித்தனர்.

"இந்தியாவில் தயார் செய்யுங்கள்" என்கிற தமது புதிய முன்னெடுப்பின் கீழ் இந்தியாவில் ரஸ்யப் பொருட்களின் உற்பத்தியை பெருக்க ரஸ்ய அரசும் தொழிலதிபர்களும் முன்வர வேண்டும் என்றும் மோடி கோரியுள்ளார்.


## தொன் கழிவுகள் 270,000 கடலில்.....

உலகில் உள்ள பெருங்கடல்களில் இரண்டு லட்சத்து எழுபதாயிரம் டன்கள் பிளாஸ்டிக் கழிவுகள் இருப்பதாக புதிதாக வந்துள்ள சர்வதேச ஆய்வு தெரிவித்துள்ளது.

பூமத்தியரேகைக்கு அடுத்து இருக்கும் ஐந்து கடல் பகுதிகளில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நீரோட்டம் காரணமாகவும் கடல்நீரின் அழுத்தத்தாலும் உடைந்து நொறுங்கி சிறிய துகள்களாக மாறுகின்றன.

மொத்தக் கழிவுகளில் 90 சதவீதம் மைக்ரோ பிளாஸ்டிக் எனப்படும் நுண்துகள்களாக இருக்கின்றன. இவை மீன்களாலும் மற்ற கடல்வாழ் உயிரினங்களாலும் உண்ணப்படுகின்றன

## பிடலுக்கு சீனாவின் கன்பூக்ஷியஸ் விருது



சீனாவின் கன்பூசியஸ் அமைதிப் பரிசு இந்த ஆண்டு முன்னாள் க்யூப அதிபர் பிடல் காஸ்ட்ரோவுக்கு தரப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அமைதிக்கு அவர் ஆற்றிய பங்கு குறித்து, குறிப்பாக அமெரிக்காவுடனான முரய்பாடுகளில் அவர் ராணுவ பலத்தைப் பயன்படுத்தாதது குறித்து அவர் பாராட்டப்பட்டிருக்கிறார்.

கடந்த ஆண்டு இந்த விருது ரஸ்ய அதிபர் விளாதிமிர் புட்டினுக்கு வழங்கப்பட்டது.

மூன்றாண்டுகளுக்கு முன்னர் சீனா இந்த விருதை , நோபல் அமைதிப் பரிசுக்கு மாற்றாக, நிறுவியது.

நோபல் அமைதிப் பரிசு சீனாவுக்கு எதிராகப் பயன்படுத்தப்படுவதாக சீனக் கம்யூனிஸ்ட் தலைமையால் கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திக்.. திக்.. திகில்..

அன்று அதிகாலை 4 மணியிருக்கும் ஏனோ தெரியவில்லை தன்யாவுக்கு முழிப்பு வந்தது. சினந்தவாறே மீண்டும் தலையணையை கட்டிக்கொண்டு தூங்கிப் போனாள். சற்று நேரத்தின் பின் திடுக்கிட்டு எழும்பிய தன்யா ஐயோ இவ்வளவு நேரம் தூங்கிவிட்டேனே என குழம்பிப் போனாள். தனது அன்றைய நாள் கடமைகளை முடித்துக் கொண்டு கொட்டன் சாறியையும் அணிந்து கொண்டு அம்மா தயார் செய்து வைத்த சாப்பாட்டுப் பார்சலை தன் கைப்பையினுள் வைத்து காரில் பறந்தாள் தன் அலுவலகம் நோக்கி.

அன்று அவளுடைய சக அலுவலரது மகளின் பிறந்த நாள் வைபவத்தை முன்னிட்டு இராப்போசன விருந்துபசாரம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அனைவரையும் வரவேற்றிருந்தமையால் தன்யாவால் அவ் விருந்தினை தட்டிக்கழிக் முடியவில்லை. தத்தமது வேலைகளை முடித்துக் கொண்டு அனைவரும் அன்று மிக சீக்கிரத்தில் வீடு நோக்கிச் சென்றனர். தன்யாவும் அவர்களுடன் தன் வீட்டிற்குச் சென்றாள்.

பின் தன் ஆடைகளை மாற்றி விட்டு பார்ட்டிக்குச் செல்லத் தயாரானாள். தனக்கு மிகவும் பொருத்தமான மெல்லிய நிறத்திலான அதிக வேலைப்பாடு அற்ற அவள் அணிந்த பட்டுசேலை அவள் மேனிக்கு மிக எடுப்பாக இருந்தது. அச்சேலையில் அவள் தேவதை போன்று காட்சி அளித்தாள். அவளை பார்ப்பதற்காக ஓடோடி வந்த அவளது செல்லத் தம்பி அக்கா! இன்டைக்கு மட்டும் உன்னைய யாரும் பார்த்தாங்க உன்னை அப்படியே தூக்கிக் கொண்டு போயிருவாங்க என்றான்.

பாருங்க அம்மா தம்பி என்னைய கிண்டல் செய்றான். என சிறு பிள்ளை போல் சிணுங்கி விட்டு அம்மாவை கட்டி அணைத்து சற்று தாமதமாகும் பார்ட்டி முடிவதற்கு என கூறி மீண்டும் காரில் ஏறி ஹொட்டல் நோக்கிச் சென்றாள். கார் சற்று கூடிய வேகத்தில் சென்று கொண்டிருந்தது.

நான் விரைவாக சென்றாக வேண்டும். இல்லையேல் சீதாதேவி என் உயிரை எடுப்பாள். கேக் வெட்டுமுன் வருமாறு கூறியிருந்தாளே!!!!

தன்யா சற்றுத் தயங்கித் தயங்கி உள்ளே சென்றாள். உள்ளே பார்த்தவுடன் தான் இவளுக்கு மூச்சே வந்தது. இன்னும் அவர்கள் தயாராகவில்லை. அங்கு வந்திருந்த ஏனையவர்களுடன் சகஜமாக கதைத்துக் கொண்டிருந்தவள் போல பாவனை செய்து கொண்டு சீதாதேவியிடம் சென்று "கேக் வெட்டுவோமே" என சாதாரணமாக கேட்டாள். இவளைக் கண்ட மகிழ்ச்சியில் "தன்யா எப்ப வந்தனீ! உனக்காக தான் காத்துக் கொண்டிருக்கிறேன். வா, வா என் குட்டிப் பொண்ணு எப்படி இருக்கிறாள் என்று சொல்லன்" என்றாள். அவளுக்கென்ன தேவதை போலிருக்கிறாள் என்றாள்.

உடனே சீதாதேவி குட்டிப் பொண்ணு மட்டுமல்ல நீயும் தான் தேவதை போல் இருக்கிறாய் என்று கட்டிப் பிடித்து கொஞ்சினாள்.

இவ்வாறு மிகவும் சந்தோசமாக அப் பிறந்த நாள் கொண்டாட்டம் நடந்து கொண்டிருந்தது. சீதாதேவியும், தன்யாவும் மிகவும் நல்ல நண்பிகள். ஆகவே தன்யாயால் விரைவில் அங்கிருந்து செல்ல முடியவில்லை. அனைத்து வேலைகளிலும் சீதாவுடன் இவள் தோல் கொடுத்து நின்றாள்.

இரவுச் சாப்பாடும் சாப்பிட்டு முடிவுற்றது. அதன் பின் ஐஸ்கிறீம் சாப்பிட்டு விட்டு அனைவரும் ஒருவாறு போட்டோ எடுத்துக் கொண்டு கிளம்பத் தொடங்கினர். அச்சமயம் தான் தன்யா தன் மணிக்கூடைத் திருப்பிப் பார்த்தாள் நேரம் அப்போது 10.50 ஆகியிருந்தது. உடன் தன் அலைபேசியை பார்த்த போது அம்மா 4 தடவைகளுக்கு மேல் மிஸ்ட் கால் தந்திருந்தாள். தன் அம்மாவுக்கு தன் அலைபேசியில் இருந்து தொடர்பு கொண்டு அம்மா எனக்கு திட்டிராத இப்பதான் அனைத்தும் முடிந்தது.
இன்னும் சற்று நேரத்தில் வெளிக்கிட்டு விடுவேன். ப்ளீஸ், ப்ளீஸ் அம்மா கோவிக்காத.........

சரி சரி உன் வேலை ஆகணும் என்டா கெஞ்சுவாயே நல்லா. அதெல்லாம் இருக்கட்டும் நீ தனியாக வந்து சேர்ந்திருவியா? அப்பாவ வேணும்னா அனுப்பிவிர்றனே.
இல்லம்மா நானே மனேஜ் பண்ணிருவன்.
சரி வரும்போது அந்து குறுக்கு வீதியால் மட்டும் வந்திராத அது கொஞ்சம் ஆபத்தானது. இங்க சரியான மழையும். பார்த்து கவனாமா வா பிள்ள. என்றாள் அம்மா. இவளும் சரி என்றவாறே தொடர்பை துண்டித்தாள்.

பின் தானும் புறப்படுவதாய்க் கூறி சீதாவிடம் விடை பெற்று சென்றாள். செல்லும் போது ஏதோ மனம் ஒரு மாதிரி இருந்தது. இன்னும் 2 மணித்தியாலங்கள் சரி வேணுமே நான் வீடு போய்ச் சேர்வதற்கு!

குறுக்கு வீதியால் போனால் 1 மணி நேரத்திற்குள் சென்றுவிடலாம் என்றவாறே காரை அக்குறுக்கு வீதிக்குள் திருப்பினாள். சற்று நேரத்தின் பின்னர் தன் காருடன் யாரோ சேர்ந்து அருகிலேயே வருவது போல் தோன்றியது. மனம் பட பட என்றடித்து பயத்தைத் தூண்டியது. தன்னை ஒருவாறு ஆசுவாசப்படுத்திக் கொண்டு மெல்ல கண்களை திருப்பிப் பார்த்தாள் ஆ ஆ ஆ ஆ ஆ !!!!!!!!!


தொடரும் ... ...




# தேடி வரும் உறவு

## சிறுகதை

பொன்னம்மாள் தன் கடைசி நாட்களை எண்ணிக் கொண்டிருந்தாள். பத்துப் பிள்ளைகளைப் பெற்றெடுத்த அந்த மகராசிக்கு, வாழ்நாளின் கடைசி நாட்களில் தன்னை கவனித்துக் கொள்ள யாருமில்லாத அநாதையாகப் படுத்த படுக்கையில் கிடந்த வண்ணம் புலம்பிக் கொண்டிருந்தாள். கணவர் இறந்த பிறகு அவள் தனி மரமானாள். கணவர் உயிரோடிருக்கும் வரை பெற்ற பிள்ளைகள் வீட்டிற்கு வந்து போனார்கள். கணவர் இறந்த பிறகு எந்தப் பிள்ளைக்கும் தன்னுடைய தாயை உடன் வைத்திருக்க மனம் வரவில்லை.
கடந்த பத்து நாட்களாக உடல்நலமில்லாமல் படுக்கையில் படுத்துவிட்டாள். டாக்டர் ஒருவர் தினமும் வந்து சிகிச்சையளித்து சென்றார். அவளுடைய சிந்தனையில் தன்னுடைய மக்கள் பக்கத்தில் இல்லாமலிருக்கும் போது, தன்னுடைய உயிர் பிரிந்து விடுமோ என்ற அச்சம் தோன்ற ஆரம்பித்தது. அவளையறியாமலே கண்களிலிருந்து கண்ணீர் தாரைதாரையாக வழிந்தோடின.
கடந்த கால வாழ்க்கையின் அத்தியாயங்கள் அவளுடைய நினைவில் வந்து போயின.
பொன்னம்மாள் கணவர் மேலப்பட்டி மிராசு மீனாட்சி சுந்தரம் பெயர் சொன்னால், அப்பகுதி மக்கள் முதல்மரியாதை செலுத்த முந்திக்கொண்டு வருவார்கள். அக்கிராமத்தில் உள்ள தஞ்சை புஞ்சை நிலங்கள், தோட்டத்துரவுகள் முக்கால்வாசி மிராசுக்கு பாத்யதையாக இருந்தது. மிராசு நல்லவர் இனியவர். அதர்மத்துக்கு துணை போகாதவர். கிராமத்திலிருந்து எந்த வழக்கும் காவல் துறைக்கோ, நீதிமன்றத்துக்கோ செல்லாது. மிராசு வழங்கும் தீர்ப்பை அந்தக் கிராம மக்கள் நீதிதேவனின் தீர்ப்பாக ஏற்றுக் கொள்வார்கள்.
மூதாதையர் விட்டுச்சென்ற சொத்துக்களின் பேரில் புதுப்பட்டி மிராசுக்கும், மேலப்பட்டி மிராசுக்கும் ஏற்பட்ட வழக்கு உச்சநீதிமன்றம் வரையில் சென்று முடிவடையாமல் நீண்டு கொண்டே சென்று கொண்டிருந்தது. வழக்கு தொடர்பாக மேலப்பட்டி மிராசின் சொத்துக்கள் கரையத் தொடங்கியது. இறுதியில் பிறந்த ஊரைவிட்டு வெளியேறி, வைகை கரையோரம் அமைந்துள்ள மானாமதுரையில் சொந்த வீடு வாங்கி குடும்பத்துடன் குடியேறினார்.



மீனாட்சிசுந்தரம்-பொன்னம்மாள் தம்பதியருக்கு பத்து பிள்ளைகள். பத்தாவது பிள்ளைக்கு பாக்யவான் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தனர். ஐந்து ஆண்மக்களும், ஐந்து பெண்மக்களும் அவர்களிடையே உலாவந்தனர்.
எல்லா குழந்தைகளுக்கும் கல்விச் செல்வத்தை உரிய முறையில் தந்து பெரியவர்களாக்கினார்கள். ஆண் மக்களுக்கும், பெண் மக்களுக்கும் சம்பந்தம் பேசி, அவர்களை சீரும் சிறப்புமான வாழ்க்கையை அமைத்துக் கொடுத்தார்கள். திருமணங்கள் முடிந்த பிறகு, அவரவர்கள் தனிக்குடித்தனமும் சென்று விட்டனர். தங்களை வளர்த்து ஆளாக்கி, வாழ்க்கையில் ஏற்றத்தை தந்த தாய்-தந்தையரை எந்தப் பிள்ளையும் தேடவில்லை. எல்லோருக்கும் தனது பொறுப்பை முடித்த நிம்மதியில் மீனாட்சி சுந்தரம் கண்மூடினார்.
தன் கைகால் சுகத்துடன் இருக்கும் வரையில், தான் பெற்ற பிள்ளைகள் தன்னைத் தேடி வராதது பற்றி சிறிது கூட கவலை பொன்னம்மாள் உள்ளத்தில் தோன்றவில்லை. ஆனால் இப்போது-
அவள் உள்ளத்தில் பாசத்தின் பிணைப்பு வளையமாக பின்னிக் கொண்டிருந்தது. அந்த வளையத்திற்குள் அகப்பட்டு திக்குமுக்காடிக் கொண்டிருந்தாள்.
ஆண் மக்களோ தங்கள் மனைவிமார்களை எதிர்த்து பெற்ற தாயைப் பேணிக்காக்க தங்களுடனே வைத்திருக்க துணிவில்லை. பெண் மக்கள் தங்களின் கணவர்மார்களை எதிர்த்து, தங்களின் இல்லங்களில் பொன்னம்மாளை அந்திமக்காலத்தில் காப்பாற்ற அவர்களும் எண்ணவில்லை. நான் மட்டும் தான் பிள்ளையா? மற்றவர்கள் பிள்ளையாகப் பிறக்கவில்லையா? என்று ஒருவருக்கொருவர் கேள்விகள் கேட்டுக் கொண்டனர். பொன்னம்மாளைத் தேடவில்லை.
பொன்னம்மாள் தனது கணவன் வாங்கிய வீட்டின் ஒரு பகுதியிலிருந்து வரும் வாடகைப் பணத்தில் தன்னுடைய ஜீவனை நகர்த்திக் கொண்டிருந்தாள். அவளிடம் தங்க நகைகளோ, ரொக்கப் பணமோ இல்லை. பத்துப் பிள்ளைகளைப் பெற்றெடுத்த அந்த மாபெரும் இந்தியத்தாய் பொன்னம்மாளின் கதியைப் பற்றி அந்த தெருவில் பேசாதவர்கள் இல்லை.
ஒருநாள்-
பொன்னம்மாள் மயக்கமுற்ற நிலையில் அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் எல்லா பிள்ளைகளுக்கும் தகவல் தெரிவித்ததின் பேரில் எல்லாருமே குடும்பத்துடன் கார்களிலும், வேன்களிலும் வந்து கூடினார்கள். அந்தப் பெரிய கும்பல் பொன்னம்மாளுக்கு ஆறுதல் தரவில்லை. அவர்களும் பறந்து, பறந்து பணிவிடைகள் செய்யவில்லை.
உடல் நலமின்றிக் கிடந்த பொன்னம்மாள் மயக்கம் தெளிந்து எழுந்து உட்கார்ந்தாள். எந்தப் பிள்ளைகளைப் பாலூட்டி வளர்த்து ஆளாக்கினாளோ, அந்தப் பிள்ளைகள் குடும்பத்துடன் வெளியேறிக் கொண்டிருந்தார்கள். வெளியேறிச் சென்றவர்கள், அவளது படுக்கையின் மீது ஐம்பது, நூறு ரூபாய் நோட்டுக்களை இட்டுச் சென்றனர். இதுதான் அவர்களின் நன்றிக் கடன்! இதன் மூலம் பிள்ளைகளின் பாசத்தின் விலையை பொன்னம்மாள் நன்றாகப் புரிந்து கொண்டாள்.
எதற்கும் கலங்காத அவள் அன்று சற்று அதிகமாகவே சித்தம் தடுமாறினாள். கண்களிலிருந்து அவளையுமறியாமல் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. எந்தப் பிள்ளைக்கும் தொந்தரவு கொடுக்காமல் திடீரென்று இறைவனடி சேர தோத்திரங்கள் செய்ய ஆரம்பித்தாள். ஆனால் இறுதிநாளுக்கு இன்னும் நாட்கள் இருப்பது போல, பொன்னம்மாள் எழுந்து உட்கார்ந்து விட்டாள்.
அவசரப்பட்டு தகவல் கொடுத்து விட்டதால் பிள்ளைகளோடு வந்து, இங்கு பலநாட்கள் தங்க எங்களுக்கு தோதில்லையென்று அண்டை வீட்டுக்காரர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தது அவளது இதயத்தில் பல சம்மட்டிகள் ஒன்றாகச் சேர்ந்து அடித்தது போன்ற உணர்வினைப் பெற்று, அவள் இதயம் கனத்தது.
தான் உயிரோடிருக்கும் போது வந்து பார்க்காத மக்கள், இறந்தபிறகு ஊர்மெச்ச சம்பிரதாய சடங்குகள் செய்வதற்கு வந்தாலென்ன வராவிட்டாலென்ன என்று அவளது உள்ளுணர்வுகள் அவளது சித்தத்திற்கு சோதனை செய்தன.
"வயதோ அதிகம் ஆகிவிட்டது. இனிமேல் உயிரோடிருந்து எந்தக் கோட்டையைப் பிடிக்க! பிள்ளைகளைக் கரையேத்தியாச்சு, அவரும் போயிட்டாரு பெற்ற பிள்ளைகள் யாரும் தன்னுடனே வைத்து அந்திமகாலத்தை பார்க்கப் பிரியப்படலே இனிமேல் இது இழுத்துக்கிட்டு கிடக்கிறது பெரிய பாவம்" தெருவில் உள்ளவரில் ஒருவர் முணுமுணுத்தார்.
"அட என்னய்யா! நீ பாட்டுக்கு பேசறே அந்த அம்மாளுக்கு சீக்கிரம் மேலே போய்ச் சேரணும்தான் ஆசை! சாவை எதிர் பார்த்தா வராது எதிர்பாராம இருந்தா திடீர்னு சாவு வந்து அணைச்சிடும்" எதிர்வீட்டுக்காரர் அங்கலாய்த்துக் கொண்டிருந்தார்.
இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த பொன்னம்மாளுக்கு உயிர் உடனே போகவேண்டுமென ஏக்கப் பெருமூச்சு விட்டாள்.
அன்று காலைப்பொழுது நல்ல பொழுதாக விடிந்து அவளைத் தேடி அட்வகேட் ஒருவர் காரில் வந்திறங்கினார்.
"அம்மா! உங்கள் கணவர் தொடர்ந்த வழக்கு உங்களுக்கு அனுகூலமாகி விட்டது. வழக்கில் சம்பந்தப்பட்ட சொத்துக்களின் தற்போதைய மதிப்பு சுமார் ஐம்பது லட்சங்கள் பெறும். அதற்கான பத்திரங்கள் இந்தாருங்கள்." அட்வகேட் மகிழ்ச்சி பொங்க கூறினார்.
இதைக் கேட்ட பொன்னம்மாளின் இதயம் படபடத்தது. செய்வதறியாது திகைத்து உட்கார்ந்து விட்டாள்.
இரண்டு நாட்களில் செய்தியறிந்து பத்துப்பிள்ளைகளும் குடும்பத்துடன் வந்து பொன்னம்மாளைச் சுற்றி உட்கார்ந்து நலம் விசாரிக்கத் தொடங்கினர். தங்களுக்கு சேரவேண்டிய பங்குத் தொகையை யாரும் அபகரித்து விடாமலிருக்க அங்கேயே மாதக்கணக்கில் தங்கினர்.

- கீதா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு



## மறவோம்!

— ஏமாளி —

உறுதியாம் என்றார்கள்,
ஓடினோம் கச்சேரி!
மறுமாடி தாண்டியே
மறுமாடி ஏறினோம்!
எள் போட்டால் எண்ணெய்
விழும்,
இருந்தோம் -
எழுந்தோமே!
சொல்மாரி பொழிந்தார்கள்,
சொக்கினார் கைதட்டி!
இறுதி தானோ என்று
எண்ணி இருக்கையிலே?
உறுதிக் குரித்தான
ஒரு தாளைத் தந்தார்கள்!
பெற்றே சுணங்காமல்
பேசாமல் ஓடி வந்தோம்!
மற்றவை பிறகு வரும்,
மறவோம் 'கணு' நான்கை!

## மதுவும் மாதுவும்

மங்கையும் மதுவுமொன்று
மயக்கிடும் தன்மை தன்னில்
பங்கயத்தமரும் பிரம்மன்
பாங்கியும் அமர்ந்தான் பக்கம்

திங்களைச் சூடுமெங்கள்
சிவனது உமையுங்கூட
பங்கெனப் பாதிபெற்றால்
பாதியைக் கொடுத்தாரென்றும்

போதைதான் இரண்டுமென்றால்
புனிதமும் உண்டு அங்கு
பார்த்திட்டால்போன ஒன்று
பருகிட்டால் போதை மற்று

சாதனை போதைக்குண்டு
சரித்திரம் பலவுமுண்டு
ஆட்சிகள் உயர்ந்ததுண்டு
அனேகமாம் சரிந்ததுண்டு

போதையைத் தேடி அன்று
போயினர் சங்ககாலம்
பேதையைத் தேடிச்சென்று
பெற்றிட்ட வரலாறுண்டு

மாதவி போதையாலே
மயங்கினான் கோவலன்தான்
காவியங்கண்டோமின்று
கண்ணகி சிலம்பினாலே

விரும்பிய பெண்டிர் போனால்
விருப்போடு தாடி மீசை
பருகிடும் பழைய கள்ளு
பலர் பெயரோ தேவதாசி

சாதனை படைக்குந் தன்மை
தரணியில் போதைக்குண்டு
வேதனை பலவுமுண்டு
வீதியில் அலைவதுண்டு

கோலங்கள் மாற்றுஞ் சக்தி
குவலயத் திருப்பதெல்லம்
மங்கைக்கு முண்டு கண்ஏர்
மதுவுக்கு முண்டு




## அரசியலில்

ஏமாற்றும் நாடகங்கள்
அரசியலில்
எப்போதும் இருப்பதுண்மை!

எடுப்பார் கைப் பிள்ளையாய்
அரசியலில்
எல்லோரும் இருப்பதில்லை!

ஊழல் புரிவோர்கள்
அரசியலில்
உழைத்துக் கொள்கிறார்கள்!

அதிகாரம் பதவிக்காக
அரசியலில்
ஆலாய்ப் பறக்கின்றார்கள்!

அநாகரீகம் பேச்செல்லாம்
அரசியலில்
அம்மணமாய்க் கதைக்கிறார்கள்!

பல்டியடிப் பதெல்லாம்
அரசியலில்
கற்றுத் தெரிந்த கலை!

மதில் மேல் பூனையாக
அரசியலில்
வாழ்பவரும் இருக்கிறார்கள்!



## கார்த்திகை மாதம்

கதவுகளைத் தட்டின....
கண்ணீர் கேட்கவோ?
கண்களுக்குத் தெரியாமல்!

நித்திரையில் குழப்பம்
கனவுகளில் ஆத்மாக்களின்
ஓலம் பிதுர்த்தானம்
வேண்டத்தானோ என்னவோ!!

கர்மாக்களுக்கு திதியில்
தர்ப்பணம் செய்துதில்
அசிரத்தை ஏற்பட்டால்
அகால மரணமும் வியாதியும்
அம்மா எப்பவோ சொன்னது ...

செஞ்சமதில் உழைச்சல்
நாளிதழ்களின் செய்திகளால்...
கார்த்திகை மாதமும்
இப்படியே கழிகின்றது

**திருமலை சுந்தா**

## தலைப்பிடா வரிகள்

நிசப்தமான நடுநிசிப்பொழுது நிம்மதியாய்
நித்திரா தேவியின் அணைப்பில் அனைவரும்
என்னை மட்டுமேன் தனியாகத்தவிக்க விடுகிறாள் நித்திரை அரசி
"நீதி" நிரந்தரமாய் விடைபெற்றுச் சென்று விட்டதாக நினைவு
தூக்கம் தழுவ மறந்து நழுவிப் போயிற்றோ?

"நன்றி" யென்ற சொல்லை ஆழக்குழி
கின்றிப் புதைத்து விட்டதாகப் புரிகிறதோ
புழுங்குகிறது உள்ளம் புறப்பட்டது உறக்கம்

"அன்பு" என்பதை அடைத்துப் பூட்டித்
திறவு கோலையும் திருட்டுக் கொடுத்து
திகைக்கின்ற மனிதரை யெண்ணி
மரத்து விட்டதோ சயனம்

**திருமதி.எம்.வேலுப்பிள்ளை**
*நிலாவெளி*

## கால வாய்

காலம் எனக்காய்க்
காத்திருப்பதாய்..
என் பிறப்பின் போது எவருமே
சொல்லவில்லை...

நாட்கள் நகர நகர
ஆண்டுகள் கடந்தன
அகவைகள் கொண்டாடப்பட்டன..

எனினும் காலம்
எனக்காய்க் காத்திருந்தது..

பாலர்
பலர் கூடி படிப்பு

அகவைகள் அதிகரிக்க
உயரம் அதிகரித்தது...
எண்ணமோ வானம்
நோக்கியுயரப் பறந்தது..

கனவுகளின் நிறங்கள்
வண்ணங்களைக் கொண்ட
காலைப் பொழுதொன்றில்
காதல் மனதமர்ந்தது...

காலமோ
காத்துக்கிடந்தது....

மணம்புரிந்து மலர்களாய்
மீண்டும் ஜனனம் பெருக்கி
உலகச் சுமையுயர்த்திப்
பணத்திற்காய் பிணமாய்
உழன்று.. .. ..

தோல் சுருங்கித்
தெருவோரத்திண்ணையில்

அனாதைப் பிணமாய்
நான் .. .. இறந்தபோது

காத்திருந்த
காலம்

என் கடைசிப்பாகத்தை
ஈவிரக்கமின்றி
எழுதிமுடித்தது.

— — மாயன் — —
**மலைமுரசு ஆசிரியர்**

# இது குளக்கோட்டன் சமூகம்

**வரலாற்றுப் பக்கம்**

கடந்தவாரத் தொடர்ச்சி.. ...

இலண்டன், நெதர்லாந்து, பிரித்தானிய ஆவணக் காப்பகங்களின் ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு சுவாரிசமான ஆனால் அவ்வாணங்கள் சொல்லும் கருத்துக்கள் மீதான விமர்சனமற்ற வரலாற்றுப்பதிவாக அமைகிறது இந்நூல்.

திருகோணமலையில் ஒல்லாந்து ஆளுனராகக் கடமையாற்றிய துயஉஙரநள குயடிசஉைந எயடெ ஞநனெநடெ அவர்களின் சுற்றுப்பயண அறிக்கை (15.05.178 - 21.06.1786) அடிமைப்பட்ட சமூகம் ஒன்றின் மீதான காலனித்துவ ஆட்சியாளரின் பார்வைப்பதிவுகள் என்றாலும் திருகோணமலை வரலாற்றின் மிக முக்கிய விடையங்கள் அடங்கிய ஒரு பொக்கிசமாக இந்நூல் இருக்கிறது. இதன்பின் வருபவை பெரும்பாலும் போர்த்துக்கீசு, ஒல்லாந்து, பிரான்ஸ், பிரித்தானியா போன்ற நாடுகள் திருகோணமலை மீது செலுத்திய அதிகார மாற்றங்கள் தொடர்பாகப் பேசுபவையாக அமைந்துள்ளன. இடையிடையே காலனித்துவம் திருகோணமலை மக்களின் வாழ்வியலில் ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றிய சிறுகுறிப்புகளும் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

தினக்குரலின் வாரமலரில் தொடராக வெளிவந்த திருகோணமலை மீதான யப்பானியத் தாக்குதல் ஒரு நேர்முக வர்ணனையாளரின் விறுவிறுப்புடன் பதிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. காலநித்துவ ஆட்சியில் சுதேச தமிழ்ச் சிற்றரசுகளின் இறையாண்மை பாதிக்கப்பட்டு, வரலாற்று பண்பாட்டு பெருமிதங்கள் தகர்க்கப்பட்ட பின்னர் ஈழத்தமிழர் வரலாற்றாதாரங்களில் ஐரோப்பிய ஆவணங்கள் தவிர்க்க முடியாத முக்கிய இடம்பெறுவதை எடுத்துக்காட்டும் ஒரு நூலாக இது அமைந்துள்ளது.

இந்நூலின் வெளியீட்டினைத் தொடர்ந்து நேரங்கிடைக்கும் போதெல்லாம் அவர் வீட்டுக்குச் சென்று திருகோணமலை தொடர்பான வரலாற்றுத் தகவல்களைப் பற்றி கலந்துரையாடுவதை வழமையாகக் கொண்டிருந்தேன். இச் சந்திப்புகளின் பலனாக பல அரிய புத்தகங்களையும், ஆவணங்களையும், காணொளிகளையும் அவரிடமிருந்து இரவல் வாங்கிப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

இவ்வாறு நாட்கள் நகர்கையில் ஒரு நாள் (27.12.2013) தம்பலகாமம் பொற்கேணியில் சில வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு அவரை அழைத்துச் செல்லும் சந்தர்ப்பம் கிடைத்தது. இந்தப் பயண நிகழ்வினை ஒழுங்கமைத்திருந்தவர் திரு.விஜேந்திரன் அவர்கள். தம்பலகாமம் சிவசக்திபுரத்தைச் சேர்ந்த இந்த இளைஞர், கண்டி பேராதனைப் பல்கலைக் கழகக் கலைப்பட்டதாரி. தம்பலகாமம் தொடர்பான வரலாற்றாதாரங்களை ஆவணப்படுத்த வேண்டும் என்பதில் துடிப்பாக இயங்கும் இளைஞர். அன்றையத் தேடலில் என்னுடன் நண்பர் விஜேந்திரன், கலாநிதி.கனகசபாபதி சரவணபவன், திருமதி.சாந்தினி சரவணபவன், வே.தங்கராசா ஆகியோர் இணைந்திருந்தனர்.

தம்பலகாமம் பொற்கேணியிலுள்ள அழிவடைந்த ஓர் ஆலயத்தின் எச்சங்களாக இருக்கலாம் என்று நம்பப்படும் ஒரு பகுதிக்கு முதலில் சென்றிருந்தோம். அருகிலேயே அவ்வாலயத்திற்குச் சொந்தமான கேணி ஒன்று தூர்ந்துபோன நிலையில் காணப்படுகிறது. பண்டைய நாட்களில் பிரபல்யமாக இருந்த இந்த இடத்திற்கு பொற்கேணி என்று பெயர்வர இவை காரணமாக இருந்திருக்கலாம் என்று தோன்றியது.

செல்லும் வழி நெடுகிலும் எதிர்ப்பட்ட மூலிகைச் செடி களைக் கண்டெடுத்து அதன் மருத்துவக் குணங்கள், உணவில் பயன்படுத்தக் கூடிய முறைகள் என்பனவற்றை சொல்லிக்கொண்டு வந்தார் திருமதி.சாந்தினி சரவணபவன் அவர்கள்.



புவியியல் பட்டதாரியான இவர் கலாநிதி சரவணபவன் அவர்களின் எழுத்துத் துறைசார்ந்த சாதனைகளுக்கு பக்கபலமாக இருப்பவர். அவர் எழுதி வெளியிட்ட வரலாற்றுத்துறை சாராத யேர்மன் - தமிழ் அகராதி, டச்சு - தமிழ் அகராதி ஆகியவற்றில் அவரது பங்கு அளப்பெரியது.

புராதான பொருட்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த அவர் நாங்கள் நின்ற இடத்தினைச் சுற்றி கிடைத்த மட்பாண்ட ஓடுகளை ஆர்வத்துடன் சேகரித்துக் கொண்டிருந்தார். பெரும்பாலும் வரலாற்றுத் தேடல்களுக்காக கிராமங்கள் தோறும் கலாநிதி சரவணபவனுடன் உடன் சென்றார்.

தொடரும்.....

**வைத்திய கலாநிதி**
**த.ஜீவராஜ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவிர்ப்பும்.... தந்திரோபாயமும்....

-வெட்டியான்

இலங்கையின் சனாதிபதித் தேர்தல் அறிவிக்கப் பட்டதன் பின்னர் இரண்டு முக்கிய அணிகள் களத்தில் தமது பலப் பரீட்சையில் இறங்கியுள்ளன.

ஆனால் இதுவரை காலமும் தேர்தலில் போட்டியிட்ட பலமான அணிகளில் இருந்த தெளிவு மனிதர்களின் வகைப்படுத்தல் இந்தத் தேர்தலில் இழக்கப்பட்டிருப்பதால் இரண்டு அணிகளையும் உருவாக்கும் நபர்கள் யார் யாரென தற்போதுவரை எதிர்வு கூற முடியாத நிலை காணப்படுகின்றது.

அதாவது ஆளும் ஐக்கிய மக்கள் முன்னணியும், அதனையெதிர்த்துப் போட்டிக்குக் கோதாவில் இறங்கியுள்ள பொது எதிரணியும் ஒரே வகை மனிதர்களைத் தம்மகத்தே கொண்டிருப்பதே இத் தெளிவின்மைக்கான காரணமாகியுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் நீல நிறத்தைத்தாங்கியவர்கள் இன்று பச்சை நிறத்திற்குத் தாவியுள்ள நிலையில் அங்கும் தமது நிறத்தை விட்டுக்கொடுக்காமல் இருப்பதைப் போலவே, பச்சை நிறத்தை தாங்கியவர்கள் இன்று நீல நிறத்திற்கு மாறி அங்கும் தமது பச்சை நிறத்துடன் நிற்கத் தொடங்கியுள்ளனர்.

அதேவேளை மற்றொரு முக்கிய நிறமான காவி நிறமும் இரண்டாகப் பிரிவடைந்துள்ளது. இந்தப் பதிவை எழுதிக்கொண்டிருக்கும் போது ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச்செயலாளர் உதய கம்மன் பில தனது ஆதரவை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளரான சனாதிபதி மஹிந்த ராசபக்சவிற்க வழங்கும் தனது முடிவை ஊடகவியலாளர் சந்திப்பின் ஊடாக வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்.

இப்போது ஒட்டுமொத்தமாக சிங்களக் கட்சிகள் தமது தனித்தன்மைகளை இழந்து பொதுவானதொரு குறிக்கோளுக்காகப் போட்டியிடும் ஒரு தேர்தலாக இத்தேர்தல் பதிவாகப்போகின்றது. இவ்வாறு கட்சிகளின் சுயம் இழக்கப்பட்ட சனாதிபதித் தேர்தலொன்றினை ஈழ வரலாறு முதலாவது தடவையாக இப்போதுதான் பதிவுசெய்கின்றது என்பது உண்மையாக இருக்கலாம்.

தமது சுயத்தை இழந்துள்ள தனித்தன்மை வாய்ந்த சிங்களப் பிரதான கட்சிகளும், துணைக்கட்சிகளும் இத் தேர்தலில் தமிழரின் தலைமைதாங்கும் கட்சி தொடர்பாக தனித்துவத்தையும் ஒற்றுமையையும் பேணுவதைக் காண முடிகின்றது.

நிறம், கொள்கை, அரசியல் ஆதர்சனம் என்பவற்றில் தம்மிடையே எவ்வித நிரந்தரக் கொள்கையையும் பின்பற்றாமல் நிலை சார்ந்து தீர்மானம் எடுக்க முனைந்துள்ள சிங்கள அரசியல் கட்சிகளும் அதன் அங்கத்தவர்களும் தமிழர் சார்ந்து ஒரு பொது நிலைப்பாட்டையே தமதுடையதாகக் கொண்டிருப்பது பெரும் ஆச்சரியத்தையும், அவர்களது தீர்க்க தரிசனத்தையும் மட்டுமா? வெளிக்காட்டுகின்றன என்பதையிட்டு ஐயம் கொள்ள வேண்டியுள்ளது.

தமிழ்க் கட்சிகளில் தனித்துவம் வாய்ந்ததும் தமிழர்களின் தேசிய அரசியலைத் தலைமை தாங்கி முன்னெடுத்துச் செல்லுவதுமான பொறுப்புக்களில் இயங்கிவரும் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமக்கு ஆதரவாகத் திருப்புவதில் இரண்டு பிரதான கட்சிகளும் "தவிர்ப்பு" அனுகுமுறையையே தற்போது வரை கையாள்வதுடன் அத்தவிர்ப்பு அனுகுமுறையின் ஊடாக சிங்களச் சிறு கட்சிகளின் ஆதரவைத் திரட்டும் பணியிலேயே தற்போது இரு கட்சிகளும் முயற்சியை முன்னெடுத்துள்ளன.

தவிர்ப்பு அனுகுமுறைக்கான முக்கியமான காரணம் யாதெனில் தமிழத் தேசியக் கூட்டமைப்பானது தனித் தமிழ்ழத்தை அமைக்கும் கருத்தையே அடியாளமாகக் கொண்டுள்ளது என அடிப்படைவாதத்தைத் தமது எண்ணமாகக் கொண்டிருக்கும் சிங்கள மக்களிடையே விதைக்கப்பட்டிருப்பதேயாகும்.

இவ்வாறு விதைக்கப்பட்டுள்ள விதையில் இருந்து அறுவடையை யார்? பெற்றுக்கொள்ள முடியும் என்றால் சனாதிபதித் தோதலில் போட்டியிடும் எத்தரப்பைத் தமிழ்த் தரப்பு வெளிப்படையாகக் கைவிடுகின்றதோ அத்தரப்பே.

எனவே வெளிப்படையான ஆதரவைத் தவிர்த்துக்கொள்ளவே பிரதான வேட்பாளர்கள் இருவரும் முயற்சி செய்து வருகின்றனர்.

இத் தவிர்ப்பு அனுகுமுறையானது தமிழர்களின் தேசியம் என்ற நிகழ்ச்சி நிரலின் மிக முக்கிய பதிவாகப் பதியப்பட வேண்டும் என்பதை தற்போது தமிழர்களில் பெரும்பாலானவர்கள் உணரத் தலைப்பட்டுவிட்டனர்.

ஒரு நாட்டில் வாழ்கின்ற ஒரு முக்கியமான இனத்தின் பங்களிப்பின்றியே அந்நாட்டின் தலைவரை தோந்தெடுக்க முடியுமாயின், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுவதை மற்றொரு இனம் வெளிப்படையாகவே விரும்புகின்றதாயின், அந்த நிலையில் தவிர்க்கப்பட்ட இனம் ஒரு தனியான இனமாக மிளிர்வதற்கு உள்ள வாய்ப்புக்களில் ஒன்றாக இத்தவிர்ப்பைப் பதிவு செய்ய முடியும் என்பது அந்த முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு எனலாம்.

இந்தத் தவிர்ப்பினையே வெளிப்படையாக முக்கிய இரண்டு வேட்பாளர்களும் பின்பற்றி வருகின்றனர்.

இந்த நாட்டில் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முதல் தமக்கென தனியானதொரு தேசத்தை உருவாக்கிக்கொள்ளப் போராடிய இனத்தினை சனநாயகத் தேர்தலொன்றில் வெளிப்படையாகத் தவிர்ப்பதன் விளைவுகளையிட்டு யாரும் கவலைகொள்வதாக இல்லை.

அத்துடன் எண்ணிக்கையில் குறைந்த மக்கள் பின்பற்றும் சமயங்களில் இருந்து யாரும் சனாதிபதியாக வரமுடியாது என்பதை இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தின் படி விதந்துரைக்கப்பட்டிருப்பதன் ஊடாக குறித்த இனத்திற்கு வேறு வழிகள் ஏதுமின்றி சனாதிபதித் தேர்தலில் பார்வையாளர்களாய் இருக்க வேண்டிய நிலையொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இத்தவிர்ப்பைச் சரியாக தமிழர்கள் தமது அரசியல் முன்னெடுப்புக்களுக்குப் பயன்படுத்தக் கூடிய நிலை உருவாகியுள்ளது.

சர்வதேச ரீதியில் இத்தவிர்ப்பு சரியாகப் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதுடன் அரசியல் ஏதிலிகளாகும் (அனாதைகள்) நிலையொன்றை வேண்டுமென்றே சனாதிபதித் தேர்தல் தரப்புக்கள் வெளிப்படுத்தி வருகின்றனவா என்ற கேள்வியும் எழுப்பப்பட வேண்டும்.

இந்நிலையின் ஆரம்பம் இந்த சனாதிபதித் தேர்தலாக உள்ள நிலையில் இனிவரும் காலங்கள் யாவிலும் சனாதிபதித் தேர்தல்களில் தமிழ்த் தரப்பின் வெளிப்படையான ஆதரவு தெரிவாகும் சனாதிபதிக்குத் தேவையில்லை என்ற நிலை நீடிக்குமாயின் அதன் விளைவுகள் என்னவாக இருக்கலாம் என்ற ஆராய்ச்சியும் இக் கட்டத்தில் முக்கியத்துவம் பெறுகின்றன.

இனி இவ்வெளிப்படையான தவிர்த்தலை உடைத்து முன் செல்லக்கூடிய தந்திரோபாயங்கள் எவையும் உள்ளதா? என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆராய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இப்போது தமிழத் தேசியக் கூட்டமைப்பின் முன்னுள்ள வாய்ப்புக்கள் இரண்டு தான்! அவற்றுள் முதலாவது மக்களை முடிவெடுக்கச் சொல்வது. இரண்டாவது தாமாகவே முன்வந்து தரப்பொன்றை ஆதரிப்பது.

மக்களை முடிவெடுக்கச் சொல்லும் முடிவைத் தமிழத் தேசியக் கூட்டமைப்பு எடுக்குமாக இருந்தால் அதன் சாதக பலன்களை விட மிகப் பலமான பாதகமொன்றைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்கொள்ளும்.

அப்பாதக நிலையின் முதல் கூறாக தமிழ் மக்கள் தலைமையின்றித் தன்னிச்சையாக முடிவெடுக்க வேண்டிய நிலைக்கு இந்தத் தேர்தலில் தள்ளப்பட்டுவிடுவர். அதனால் முக்கியமான கணமொன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் தமிழர்களுக்குத் தலைமைத்துவத்தினை வழங்க முடியாதுள்ளதா? என்ற அபிப்பிராயக் கேள்வி அக்கூட்டமைப்பின் ஒட்டுமொத்த அடித்தளத்தையும் மக்கள் பார்வையில் ஆட்டம் காண வைத்துவிடும்.

அதேவேளை அப்பாதக நிலையின் அடுத்த கூறாக எந்த அணிக்குத் தமிழ் மக்கள்

## தேர்தல் ஆய்வு

வாக்களிக்கின்றார்களோ அந்த அணியின் தமிழர் விரோதக் கொள்கைகளையும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்ற பொருள்பட வெற்றிபெறும் தரப்பு பேசத் தொடங்கிவிடும். ஏனெனில் இருதரப்பினரதும் கொள்கைளிற் சிலவும் அவ்விரு தரப்புக்களுடன் இணைந்துகொண்டுள்ள ஏனைய கட்சிகளுடனான புரிந்துணர்வு உடன்படிக்கைகளின் சரத்துக்களிலும் தமிழர் விரோத காரணிகள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றமையை இங்கு கவனத்திற் கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னுள்ள இரண்டாவது வாய்ப்பானது தாமாகவே முன்வந்து ஒரு தரப்பை ஆதரிப்பது. அதன் மறுவினை, சிங்களக் கடும்போக்குவாதிகளிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்கும் தரப்பின் மீது எதிரிடையான தாக்கத்தை ஏற்படுத்தினால் கூட தமிழர்களின் தலைமைத்துவம் அதற்கு அஞ்சாது சில, பல அடிப்படைகளின் மீது எமது ஆதரவு இந்த வேட்பாளருக்கே உள்ளது என்ற வெளிப்பாட்டை ஏற்படுத்துதல் வேண்டும்.

வடக்குகிழக்கு இணைந்த தாயகம், சுயநிர்ணயம், சமவுரிமை, கூட்டாட்சி போன்ற தமிழர்களின் அடிப்படைக் கோரிக்கைகளில் எவ்வித பேச்சுக்கும் இடமில்லை என்ற நிபந்தனையுடன் தாமாகவே முன்வந்து ஒரு தரப்பிற்கு வழங்கப்படும் ஆதரவானது எதிர்காலத்தில் குறித்த வேட்பாளர் வெற்றி பெற்றாலும் அவர் மற்றும் அவர் சார்ந்திருக்கும் அணியின் ஒட்டுமொத்த விஞ்ஞாபனத்தில் மேற் சொல்லப்பட்ட தமிழர்களின் அடிப்படைக் கோரிக்கைகளுக்குப் பாதகமான எவற்றையும் நாம் ஏற்கவில்லை என்பதை முன்னமே அறிவித்திருப்பதால் மீண்டும் தமிழ்த் தேசிய அரசியல் முயற்சிகளை முன்னெடுக்கும் வாய்ப்பு காணப்படும்.



அத்துடன் இவ்வாறு தாமாகவே முன்வந்து வழங்கப்படும் ஆதரவானது சர்வதேச்தின் கண்களுக்கு தற்போதும் சனநாயகத்தின் மீதும் அதன் பால் கிடைக்கப்பெறும் தீர்வின் மூலமுமே ஈழத்தமிழர்களின் அரசியல் வெப்புசாரம் தீர்க்கப்படும் என்பதையும் மீளுறுதிப்படுத்த ஓர் வாய்ப்பாகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

## MOBILE

### ஸ்மார்ட் ஃபோன்

Vivo நிறுவனம் X5 Max எனும் ஸ்மார்ட் கைப்பேசியினை அறிமுகம் செய்யவுள்ளதாக தகவல் வெளியிட்டுள்ளது. 5.5 அங்குல அளவு, 1920 x 1080 Pixel Resolution உடைய தொடுதிரையினைக் கொண்டுள்ள இக்கைப்பேசியானது Eight Core Qualcomm Snapdragon 615 64-bit Mobile Processor, பிரதான நினைவகமாக 2GB RAM மற்றும் 16GB சேமிப்புக் கொள்ளளவு என்பவற்றினைக் கொண்டுள்ளது.


### SAMSUNG GALAXY S6



Samsung Galaxy S6 கைப்பேசியில் பல் வேறு சிறப்பம்சங்களை உட்புகுத்தியுள்ளது. இதன்படி இணைய வேகமானது 450Mbps வரை காணப்படுவதுடன், 5.5 அங்குல அளவு மற்றும் 2560 x 1440 Pixel Resolution உடைய Quad HD தொடுதிரையினைக் கொண்டுள்ளது.

இவை தவிர பிரதான நினைவகமாக 3GB RAM, 32GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினையும், 20 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 5 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இக்கைப்பேசி யானது 2015ம் ஆண்டில் பெப்ரவரி மாதத்தில் அறிமுகம் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### அப்பிள் 7 இன் மாதிரி



iPhone 7 ஸ்மார்ட் கைப்பேசி வடிவமைப்பில் அப்பிள் நிறுவனம் மும்முரமாக ஈடுபட்டு வருகின்ற வேளை Martin Hajek எனும் டிசைனர் ஒருவர் iPhone 7 கைப்பேசியின் மாதிரி வடிவமைப்பை வெளியிட்டுள்ளார்.

இக்கைப்பேசியானது முழு நீளத் திரை கொண்டதாகவும், மேற்பகுதியில் அமைந்த ஸ்பீக்கர்களை உடையதாகவும் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## INFOMATION TECHNOLOGY

### 8TB வன்றகடு



கணனி உலகில் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் தரவுச் சேமிப்புக்களுக்கு ஏற்றவாறு கூடிய கொள்ளளவுகளைக் கொண்ட வன்றட்டுக்கள் உருவாக்கப்பட்டுவருகின்றன. இதன் அடிப்படையில் Seagate நிறுவனம் 8TB கொள்ளளவுடைய வன்றட்டினை அறிமுகம் செய்துள்ளது. 5,900 rpm வேகம் கொண்ட இவ்வன்றட்டானது செக்கனுக்கு 150 MB வேகத்தில் தரவுகளைக் கடத்தும் ஆற்றல் கொண்டது.

### அதி வேக கார் – படகு



நீர் நிலைகளில் மிகவும் வேகமாகப் பயணிக்கக்கூடிய கார் வடிவிலான படகு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. ஸ்வீடன் வாசியான Eduard Gray என்பவரால் வடிவமைக்கப்பட்டுள்ள இக்காரானது சுமார் 20 மில்லியன் யூரோக்கள் பெறுமதியானதாகும். இப்படகில் சூரியப் படலம் பொருத்தப்பட்டுள்ளதுடன் சூரியப் படலத்தினைப் பயன்படுத்தியே படகு இயங்குவதற்கான மின்சக்தி உற்பத்தி செய்யப்படுகின்றது. மேலும் இந்த சூரியப் படல்கள் ஹெலிபேட் போன்றும் செயற்படக்கூடியவை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### செல்பி – ஆய்வறிக்கை

ஃபேஸ்புக், டுவிட்டர் போன்ற சமூக வலைதளங்களில் பல பயனாளிகள் தொடர்ந்து செல்ஃபி படங்களை அப்டேட் செய்து வருபவராக இருப்பவர்கள் நிச்சயம் அவர்களது மேல் அதிகாரியால், சந்தேகம் கொண்டவராய் பார்க்கப்படுவீர்கள் என்று கூறுகிறது சமீபத்தில் எடுக்கப்பட்ட ஒரு ஆய்வு. செல்ஃபி மீது ஆர்வம் கொண்டவர்கள் இயல்பாகவே கூட்டு முயற்சியில் ஈடுபாடு இல்லாதவராகவும் சுய கட்டுப்பாடு அற்றவர்களாகவும் இருக்கின்றனர்" என்றும் கூறப்படுகிறது.

## OTHER

### தோல்வி இல்லை

மணிக்கு 1000 மைல் வேகத்தில் பயணிக்கும் Bloodhound கார் தொடர்பான தகவல்கள் கடந்த காலங்களில் வெளியாகிருந்தன. இந்நிலையில் இந்த காரிற்கான ரொக்கட் ரக இயந்திரத்தை வடிவமைத்து கொடுத்த நிறுவனமான Nammo இனால் சோதனை ஓட்டம் மேற்கொள்ளப்பட்டது. எனினும் இயந்திரம் இயங்கி 10வது செக்கனில் தீப்பற்றி எரிந்துள்ளது. இருப்பினும் தோல்வியடையவில்லை என கூறியுள்ளனர்.

### கூகுளின் சாதனைகளில் இதுவும்


இணைய முதல்வனான கூகுள் வழங்கிவரும் பல்வேறு சேவைகளில் Google Street View சேவையும் பிரபல்யமான ஒன்றாகும். இச்சேவையில் முதன் முதலாக அரபு நாடு ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. இப்பெருமையை டுபாய் பெற்றுக்கொண்டுள்ளது. ஆண்டு தோறும் டுபாய்க்கு 10 மில்லியன் மக்கள் விஜயம் செய்கின்றனர். இத்தொகையினை 2020ம் ஆண்டில் 20 மில்லியனாக அதிகரித்து சாதனை படைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### பயணிகள் சேவையில் Supersonic



ஒலியை விடவும் வேகம் கூடிய விமானங்களான Concorde ரக விமானங்கள் தற்போது யுத்த களங்களிலேயே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் அமெரிக்காவைச் சேர்ந்த Lockheed Martin நிறுவனம் வர்த்தக நோக்கத்திலான Concorde விமானத்தை தயாரித்துள்ளது. இது சாதாரண விமானங்களை விட இரு மடங்கு வேகம் கொண்டதாகவும், 80 வரையிலான பயணிகளை ஏற்றிச் செல்லும் வசதி உடையதாகவும் காணப்படுகின்றது. இவற்றில் ஒரு இயந்திரமானது விமானத்தின் மேற்பகுதியில் பொருத்தப்பட்டுள்ளது.

### தொழில்நுட்பத்தில் மாற்றம்



இணையத்தளப் பாவனையின் போது பல்வேறு இடங்களில் அதனை பயன்படுத்துபவர் ரோபோ அல்லது வைரஸ் இல்லை என்பதை நிரூபிக்க வேண்டிய அவசியம் காணப்படுகின்றது. இதற்காக Captcha தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

அதாவது படம் ஒன்றில் தரப்பட்டுள்ள இலக்கங்கள், எழுத்துக்களை அதே போன்று தட்டச்சு செய்யவேண்டும். கூகுள் நிறுவனம் தற்போது இத்தொழில்நுட்பத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதில் முனைப்புக்காட்டி வருகின்றது.

இதற்காக வினாக்களுக்கு விடையளித்தல் உட்பட சுட்டியின் (Mouse) பயன்படுத்தும் வேகத்தை கணித்தல், கிளிக் செய்யும் துல்லியத்தை மதிப்பிடல் என்பனவற்றுடன் கணனியின் IP முகவரிகள் தொடர்பான தகவல்களும் பயன்படுத்தப் படவுள்ளன.

### மறுமுறை பிரிண்ட்

ஒரு முறை பிரிண்ட் செய்த பின் அத்தாள்களை (Papers) மீண்டும் பயன்படுத்த முடியாது. எனினும் அவ்வாறு மீண்டும் 20 முறைகள் வரை மீள் பதிப்பு செய்து பயன் படுத்தக்கூடிய தாளினை கலிபோர்னியாவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இதேவேளை அவற்றில் மீண்டும் பதிப்பு செய்வதற்கு மேலதிக மை (Ink) தேவை இல்லை என்பதும் விசேட அம்சமாகும்.

# குறுக்கெழுத்து புதிர் 039

முடிவுத் திகதி : 18.12.2014

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 12 | ய | 13 | | தி | | |
| | 2 | ந் | | | | | | |
| 3 | | | | 4 | ர | | | ர் |
| | 21 | 5 | வ | 14 | | 6 | | 19 |
| 20 | | 7 | ரு | | | | | |
| 18 லி | | | | | | | 15 | |
| | 16 | 22 | | | | | ன | 17 |
| 8 | | ண | | ம் | | 9 | | ம் |
| 10 | | | | | | 11 | | |

## இடமிருந்து வலமாக

1. அள்ள அள்ளக் குறையாதது
2. முடிவு
3. நிகழ்விற்கு வரும் முக்கியஸ்த்தர்
4. கொடையாளி
5. பாம்பு -குழம்பியுள்ளது
6. சிவனில் பாதி
7. திரௌபதியின் துகிலைக் காத்தவன்
8. மரணவீட்டில் இடிப்பது
9. புறத்திற்கு எதிர்ச்சொல்
10. தூரம்
11. அண்ணாவிற்கு அடுத்தவன்
18. ஒன்றுமில்லாதது

## மேலிருந்து கீழாக

03. சந்திரனைக் குறிக்கும் சொல்
08. இதை உழைக்கத்தான் அலைகின்றோம் - கீழிருந்து மேலாக
12. சந்திரன் விழுங்கப்படும் நாள்
13. கண்டால் படையே நடுங்கும்
14. வரத்துடன் கூடிய அம்பு
15. அடர்ந்த காடு
16. காந்தி இக் கிராமத்தை நோக்கித்தான் தனது உப்புச் சத்தியாக்கிரகத்தைத் தொடங்கினார் - கீழிருந்து மேலாக
17. சிறிய பறவை
19. வாஸ்த்து பார்க்க இதுவும் தேவைப்படும்
20. பதுங்கி இருந்து பாயும் ஒன்று
21. காற்றில் பறப்பது
22. கூட்டம்

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்ளவனவு கூப்பன் வழங்கப்படும்.

*விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :*
*மலைமுரசு.*
*இல - 159ஏ,*
*கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*

## புதிர் 038 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 சூ | 2 சை | க | 3 அ | டி | மை | 4 நா | 18 ச | ர் |
| டு | த் | | வ | 19 த | | த | ர் | |
| | 5 தா | ம | ரை | க | | ஸ் | ப் | 20 கு |
| 6 ப | ன் | 7 மை | தா | ன | ம் | வ | 8 ப | ழி |
| ல் | | | | 21 ம் | | 9 ர | ம் | வா |
| 10 லி | ங் | கு | 22 சா | மி | | ம் | 11 ப | டி |
| 12 வ | ள் | ளி | ம | 13 அ | 23 க | வை | ர | 24 பு |
| ர் | 14 ம | து | ரை | | ன | | ம் | ர |
| 15 க | ண் | ணி | 16 யா | த் | தி | 17 ரை | கா | வி |

## பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:

*திருமதி. ஈ. மேரி*
*105, டொக்யாட் வீதி, திருகோணமலை.*

*செல்வி. எம். தனுஷா*
*21. 4ம் குறுக்குத் தெரு, திருகோணமலை.*

*செல்வன். கே. பிரதீஷன்*
*1ஏ அலஸ்தோட்டம், திருகோணமலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலியும், சதீஸும் திருமண பந்தத்தில்



அஞ்சலி நீண்ட நாட்களாக ஆந்திரா தொழில் அதிபரை காதலிக்கிறார் என்று ஒரு வதந்தி இருந்தது. சென்னையில் நடந்த வை ராஜா வை படத்தின் இசை வெளியீட்டு விழாவில் சிலர் நடிகை அஞ்சலி, காமெடி நடிகர் சதீஸை ரகசியமாக திருமணம் செய்து கொண்டார் என பேசியுள்ளனர். இந்த செய்தி குறித்து சதீஸிடம் பேச முயன்ற போது அவர் ஏதும் சொல்ல மறுத்துவிட்டதாக கூறப்படுகிறது.

# மன அழுத்தத்தில் வடிவேலு



வடிவேலு மகன் சுப்பிரமணியன்-புவனேஸ்வரி திருமணம் மதுரை ராஜா முத்தையா மன்றத்தில் நடந்தது. இந்த திருமணத்திற்கு சினிமா பிரபலங்களுக்கோ, அரசியல் தலைவர்களுக்கோ அழைப்பு விடுக்கப்படவில்லை. தன் சொந்த ஊர் உறவினர்கள் மற்றும் நண்பர்களை மட்டும் திருமணத்திற்கு அழைத்துள்ளார். மண்டபத்திற்கு வெளியே வைத்திருந்த பேனரில் கூட வடிவேலு தன் பெயரை போடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# 3 போட்டியாளர்கள்



என்னை அறிந்தால் மற்றூம் ஐ ஆகிய இரண்டும் தயாரிப்பு அளவில் பிரமாண்டமானது என்பதால் இரு படங்களும் ஒரே நேரத்தில் ரிலீஸ் ஆவதை தவிர்க்க இரு படங்களின் தயாரிப்பாளர்களும் பேச்சுவார்த்தை நடத்தி பட ரிலீஸ் தேதிகளை மாற்றி அமைப்பார்கள் அனைவரும் எதிர்பார்த்த நிலையில் இரண்டு தயாரிப்பாளர்களும் தமிழகத்தில் உள்ள தியேட்டர்களை கைப்பற்றுவதில் தீவிரம் காட்டி வருவதாக கூறப்படுகிறது. வி'ாலின் ஆம்பள படத்திற்கு பூஜை அளவுக்கு தியேட்டர்கள் கிடைக்காவிட்டாலும் ஒரளவிற்கு தியேட்டர்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# நடுவில் திரிஷா – வருண்

உண்மை

பொய்?

தயாரிப்பாளர் வருண் மணியனுக்கும் திரிஷாவுக்கும் காதல் மலர்ந்துள்ளதாக செய்திகள் வெளியாயின. இருவருக்கும் திருமண நிச்சயதார்த்தம் நடந்ததாகவும் கூறப்பட்டது. இருந்தாலும் வருண்மணியனுடன் நிச்சயதார்த்தம் நடக்கவில்லை என்று திரிஷா மறுத்தார். நண்பர்களாகத்தான் பழகுகிறோம் என்றார். ஆனாலும் நிச்சயதார்த்தம் நடந்தது உண்மை என்றும் விரைவில் இருவருக்கும் திருமணம் நடக்க உள்ளது என்றும் அவருக்கு நெருக்கமானவர்கள் கூறினார்கள்.



# அஜித்துக்கு தடை சல்மான் கானே



அஜித் படம் வருகிறது என்றாலே சமூக வலைத்தளங்களில் திருவிழா தொடங்கிவிடும். சமீபத்தில் வெளிவந்த டீசர் தற்போது வரை 35 லட்சம் ஹிட்ஸை தாண்டியுள்ளது. அதேபோல் 77,000 லைக்ஸ்களை பெற்றுள்ளது. தற்போது இந்திய அளவில் இரண்டாம் இடத்தில் இருக்கும் இப்படத்திற்கு சல்மான் கான் நடித்த கிக் படத்தின் டீசரே தடையாக இருக்கிறது. இப்படம் 1 லட்சம் லைக்ஸ்களை பெற்றுள்ளது. கூடிய விரைவில் இந்த சாதனையை என்னை அறிந்தால் முறியடிக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

# அதிர்ச்சியில் விஷால்

மூன்று கோடி - சம்பளம்




சுந்தர் சி இயக்கத்தில் விஷால் தற்போது நடித்து வரும் "ஆம்பள" படத்தை அடுத்து அவர் தயாரித்து நடிக்கவிருக்கும் ஒரு திரைப்படத்தில் காஜல் அகர்வால் ஜோடியாக நடிக்க பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. தமிழ் மற்றும் தெலுங்கு ஆகிய இரண்டு மொழிகளிலும் நடிக்க வேண்டும் என்பதால் வி'ாலிடம் காஜல் அகர்வால் ரூ.3 கோடி சம்பளம் கேட்டுள்ளார். இதைக்கேட்டு அதிர்ச்சி அடைந்த விஷால், இவ்வளவு பெரிய தொகை சம்பளம் தரமுடியாது என்று கூறிவிட்டாராம்.

**என்னைக் கண்டுபிடியுங்கள் பார்ப்போம்**



சென்ற வாரம்



# சிவாவை பழிவாங்கும் தனுஷ்

தனுஷ் தயாரிப்பில் சிவகார்த்திகேயன் நடித்த காக்கி சட்டை படம் பொங்கல் வெளியீடு என சமீபத்தில் விளம்பரம் கொடுத்தனர். பொங்கல் அன்று ஐ, என்னை அறிந்தால், ஆம்பள ஆகிய படங்கள் வருவதால் இந்த படங்களுக்கே தியேட்டர் கிடைக்கும் என்று எப்படி தெரியவில்லை. இந்நிலையில் காக்கி சட்டையும் வரவிருப்பது திரையரங்க உரிமையாளர்களுக்கு மேலும் தலைவலியை தந்துள்ளது. படம் என்ன தான் நன்றாக இருந்தாலும் ஓபனிங் கிடைப்பது கஷ்டம் தான்.

# சினிமுரசு

## திரை விமர்சனம் "ர"

### இயக்குனர் பிரபு யுவராஜின்

### அஷ்ரப், அதிதி செங்கப்பா நடிக்கும்



நாயகன் அஜய் மற்றும் நாயகி ரென்யா இருவரும் காதலிக்கின்றனர். இவர்களுடைய காதலுக்கு நாயகி வீட்டில் எதிர்ப்பு கிளம்பியதால் இருவரும் ஓடிப்போய் திருமணம் செய்து கொள்கின்றனர். நாயகனின் வீட்டில் இவர்களுடைய திருமணத்தை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு முதலிரவு ஏற்பாடு செய்கின்றனர். தனியாக ஒரு வீட்டில் முதலிரவு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் நிலையில் நாயகனின் நண்பர்கள் வந்து வாழ்த்து கூறியதோடு பார்ட்டி கேட்கின்றனர். அந்த வீட்டில் உள்ள ஒரு அறையில் நீண்டநேரம் பார்ட்டி நடக்கின்றது. பார்ட்டியில் அதிகளவு மது குடித்ததால் போதையுடன் வரும் நாயகன் முதலிரவு அறைக்கு வந்து தூங்கிவிடுகிறார். மறுநாள் காலையில் எழுந்து பார்த்தபோது நாயகி ரென்யா கொலை செய்யப்பட்டிருப்பது கண்டு அதிர்ச்சி அடைகிறார்.

நாயகனையும் அவருடைய நண்பர்களையும் போலீஸ் விசாரணை செய்கிறது. இந்நிலையில் ரென்யாவின் போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டில் அவர் மாரடைப்பால் இறந்ததாக குறிப்பிடப்பட்டிருப்பதால் நாயகனையும் அவருடைய நண்பர்களையும் போலீஸ் விடுதலை செய்கிறது.

இந்நிலையில் ரென்யாவை அந்த வீட்டில் உள்ள ஒரு ஆவிதான் கொலை செய்திருக்கும் என நாயகன் நினைக்கும் வேளையில் அடுத்தடுத்து மேலும் இரண்டு கொலைகள் நடக்கின்றது. உண்மையிலேயே இந்த கொலைகளை செய்தது ஆவிதானா? அல்லது வேறு யாரேனும் கொலை செய்தார்களா? என்பதை நாயகன் கண்டுபிடிப்பதுதான் கதை.



முதல் படத்திலேயே இயக்குனர் பிரபு யுவராஜ் திறமையான திரைக்கதையை அமைத்து கொலைகள் செய்வது ஆவியா, வில்லனா என்பதை யாரும் எளிதில் ஊகிக்க முடியாத அளவுக்கு சஸ்பென்ஸுடன் கொண்டு செல்கிறார். பல இடங்களில் திரைக்கதையில் திடுக்கிடும் திருப்பங்கள் கொடுத்து இருப்பது படத்திற்கு பலம். அஜய்யாக வரும் நாயகன் அஷ்ரப்புக்கு கனமான வேடம். மிரட்டலான பின்னணி இசை, திறமையான ஒளிப்பதிவு, சஸ்பென்ஸ் கலந்த திரைக்கதை ஆகியவை படத்திற்கு பலம்.

மொத்தத்தில் "ர"வை திகிலுடன் ரசிக்கலாம்.

# சினிமா கிசு கிசு



- ஆசியாவின் கவர்ச்சிகரமான 50 பெண்கள் பட்டியலில் பொலிவூட் நடிகை பிரியங்கா சோப்ரா முதலிடத்தை பிடித்துள்ளார்.
- பிரியா ஆனந்த், ஐஸ்வர்யா தனுஷ் இயக்கிவரும் "வை ராஜா வை" படத்தில் கௌதம் கார்த்திக்குடன் இணைந்து நடித்து வருகிறார். இப்படத்திற்குப் பிறகு சந்தானத்துடன் இணைந்து நடிக்கவுள்ளார்.
- "யுவன் ஷங்கர் ராஜாவின் பெரிய ரசிகன், அவரது பாடல்களை எப்போதும் விரும்பி கேட்பேன். குறிப்பாக பருத்திவீரன், பில்லா ஆகிய படங்களின் இசை என்னை மிகவும் கவர்ந்தது" என ரஜினி கூறியுள்ளார்.
- நண்பேண்டா படத்தை அடுத்து உதயநிதி நடிக்கவுள்ள திரைப்படம் "கெத்து". இந்த படத்து உதயநிதிக்கு ஜோடியாக எமி ஜாக்சன் நடிக்கின்றார். இப்படத்தில் ஸ்டாலின் சந்தானத்தை கழட்டிவிட்டு சூரி யை தெரிவு செய்துள்ளார்.
- பாக்யராஜ் கதை எழுதி நடித்து வரும் 'துணை முதல்வர்' படத்தில் இன்னொரு நாயகனாக நடிக்கும் மலையாள நடிகர் ஜெயராமுக்கு ஜோடியாக சந்தியா நடித்து வருகிறார்.
- ஆர்யா நடிக்கும் படத்தில், அஜித் ரசிகர் மன்றத் தலைவராக ஆர்யா நடிக்கிறார் என்பது அறிந்ததே. ஏற்கெனவே இந்த திரைப்படத்தில் கௌரவ தோற்றத்தில் அஜீத் நடிக்க இருக்கிறார் என்ற செய்தி சில மாதங்களுக்கு முன் வெளியானது. ஆனால், அந்த செய்தி வதந்தி என்று தற்போது தெரியவந்துள்ளது.
- கர்ப்பமாக இருந்த ஜெனிலியாவுக்கு கடந்த 25-ம் திகதி ஆண் குழந்தை பிறந்தது. இக்குழந்தைக்கு "ரியான்" என்ற பெயரை தேர்வு செய்து சூட்டி உள்ளனர்.
- சிவாகைதேதான் நடிக்கும் ரஜினி முருகன் என்ற படத்தினை முடித்த யாடு நடிக்கவுள்ள படத்திற்கு பெரும்பாலும் நயன்தாரா ஜோடியாக நடிப்பார் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.
- தமன்னா பத்திரிகை அதிகாரி படப்பிடிப்புக்கு கடும் செக்யூரிட்டி போடப்பட்டுள்ளது. கயாளர்கள் அவரை நெருங்கவிடாமல் ஆறு செக்யூரிட்டிகள் தமன்னாவை சுற்றி நின்று காவல் காத்து நிற்கின்றனர்.
- ரஜினி அறிவுரையால் என் வாழ்க்கை மாறியது என சோனாக்சி சின்ஹா மனந்திறந்துள்ளார். லிங்காவில் ரஜினியுடன் நடித்த அனுபவங்கள் பற்றி கூறும் போது, இதனை தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் - 31

# எழுத்தாளர்களும் நன்மதிப்பும்





(வி.என்.சந்திரகாந்தி)

சில மாதங்களுக்கு முன்னர் திருகோணமலை நகரமுதல்வர், பல கலைஞர்களையும் எழுத்தாளர்களையும் பாராட்டி விருது வழங்கி கௌரவித்தார். அச் சமயம் மேடையில் உரையாற்றிய கிழக்கு பல்கலைக்கழகமொன்றின் தமிழ் விரிவுரையாளர், திருக்கோணமலையில் எழுத்தாளர்களுக்கு உரிய கௌரவம் கிடைக்கப் பெறுவதில்லை எனவும் அதற்கான காரணங்களை ஆராய்ந்து தான் ஒரு நூலை எழுதியதாகவும் அந்நூலானது வெளிவரும் பட்சத்தில் அது பலருக்கும் மனத்தாங்கலை ஏற்படுத்தக்கூடும் என்ற அச்சத்தில் அந் நூலை வெளியீடு செய்வதை தவிர்த்துக்கொண்டதாகவும் கவலையுடன் தெரிவித்தார்.

அவ்விடயத்தில் ஒரு நூலை எழுதும் அளவுக்கு அவருக்கு விடயதானம் இருந்திருக்கின்றது எனும் போது அது பற்றி நாம் சிந்திக்காமல் இருப்பது அல்லது எமது எழுத்தாளர்களுக்கும், ஏன் மக்களுக்கும் கூட ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தாமல் இருப்பது பெரும் தவறென்றே கொள்ளவேண்டும்.

தமிழகத்தில் உள்ள எழுத்தாளர்களை உலகமே அறியும்! அந்த அளவுக்கு அவர்கள் பிரபல்யம் அடைந்துள்ளார்கள்.

சங்ககாலம் முதல் இன்று வரையான காலகட்டத்துக்கு அவர்களிடம் இலக்கிய வரலாறே உண்டு. ஏறத்தாள இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம்! இக்காலப்பகுதியில் வாழ்ந்த புலவர்கள் அவர்கள் ஆக்கிய இலக்கியங்கள் (அழிந்து போனவை தவிர) பற்றி எம்மால் அறியக்கூடியதாக இருப்பதுடன் அந்நூல்களை படிக்கக் கூடியதாகவும் இருக்கின்றது.

தவிர சேர, சோழ, பாண்டியர், நாட்டை சுயாட்சி மூலம் பரிபாலனம் செய்யக்கூடியதாக இருந்ததால் அவர்களால் புலவர் பெருமக்களுக்கும் இலக்கியத்துக்கும் பெரும் சேவை ஆற்றக்கூடியதாக இருந்தது. எமக்கு இன்றுவரை அப்படியானதொரு அரசியல் சூழ்நிலை இல்லாதிருப்பது எமது கவிஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் பெரும் வீழ்ச்சியாகவே அமைந்துள்ளது.

மன்னர் காலம் முடிவுற்று தமிழகம் இந்திய மத்திய அரசின் கீழ் வரும் வரைக்குமான அந்நியர் ஆட்சி காலத்தில் கூட பாரதியார் போன்ற எழுச்சிமிக்க பல கவிஞர்களை தமிழகம் உருவாக்கியது. பின்னர் தமிழகம் மாவட்ட சுயாட்சியை பெற்ற நிலையில் அண்ணாத்துரை, ராஜாஜி. கலைஞர் போன்ற எழுத்து வன்மைமிக்க தலைவர்கள் உயர் அரச பீடத்தில் இருந்து தமிழுக்கும் தமிழ் இலக்கியத்துக்கும் தொண்டு செய்தார்கள். கலைஞர் கருணாநிதி தனது 81வது அகவையிலும் திரையுலகிலும் சின்னத்திரையிலும் பிரகாசிக்கிறார்.

ஈழத்தை எடுத்தால் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் தமிழ்சங்கங்கள் தம்மளவிலாயினும் முன்னின்று செயற்படுகின்றமையை காணலாம். ஆனால் திருகோணமலையில் பல பெயர்களில் பலரது தலைமையிலும் இலக்கியம் சார் சங்கங்கள் இருக்கின்றன. எழுத்தாளர்களிடம் ஐக்கியம் இன்மையால் செயற்பாடுகள் எதுவும் வீறுடன் அமையவில்லை. இவர்களால் தமிழுக்கும் எழுத்தாளர்களுக்கும் பெரும் சேவையாற்ற முடியவில்லை.

என்.செல்வராஜா அவர்கள் தனி ஒருவராக தமிழ் நூல்களையும் எழுத்தாளர்களையும் ஆவணப்படுத்தும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். திருக்கோணமலை எழுத்தாளர்களை நோக்கினால் அவர்களது படைப்புக்கள் மக்களை சென்றடையாமல் இருப்பது பெரும் தாக்கமாக உள்ளது. அதனையிட்டு எழுத்தாளர்களை மட்டும் குறைசொல்லவும் இயலாது. பிரதானமாக திருக்கோணமலை மக்கள் கடந்த மூன்று தசாப்தங்களாக நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் பாதிப்புக்குள்ளானவர்களாக இருப்பதால் வாசிப்பு பழக்கம் மிகவும் அரிதாகிவிட்டது. ஒரு தேசிய பத்திரிக்கையிலோ உள்ளூர் பத்திரிக்கையிலோ பிரசுரமாகும் சிறுகதைகள், கவிதைகள், ஆய்வுக்கட்டுரைகள், ஆசிரியர்கட்டுரைகள் அரசியல் கட்டுரைகள் உட்பட எந்த ஒரு ஆக்கத்தையும் எழுத்தையும் வாசிப்பவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். கல்விமான்கள் என்று குறிப்பிடக்கூடிய சிலரைத்தவிர நாலு எழுத்தைத் தெரிந்துகொண்டு தமது அறிவை வாசிப்பின் வாயிலாக மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணுபவர்கள் மிகவும் சிலராகவே காணப்படுகிறார்கள்.

திருக்கோணமலையில் ஒரு எழுத்தாளன் தனது சிறுகதையோ வேறு ஆக்கங்களோ பத்திரிக்கையில் பிரசுரமாவதையிட்டு பெருமைப்படவே முடியாத ஒரு நிலைதான் நீடிக்கின்றது. அதனால் தொடர்ந்து எழுதவேண்டும் என்ற ஊக்கமும் அவனுக்கு இல்லாமல் போய்விடுகின்றது.

வாசிப்பு பழக்கம் இல்லாமையால் மக்கள் ஒரு சமூகத்தினதும் நாட்டினதும் முதுகெலும்பான எழுத்தாளர்களை சந்திக்கும் போது அவர்களது எழுத்துக்கள் பற்றி கலந்துரையாடாமல் சாதாரண பொதுமகனுடன் கதைப்பது போலவே உரையாடுகின்றார்கள்.

அடுத்து எழுத்தாளர்களை கௌரவித்து விருதுகள் வழங்க வேண்டிய அமைப்புக்கள் சிறந்த எழுத்தாளர்களை தாமாகவே தெரிவுசெய்வதில்லை. எவருடையதாவது. அல்லது எதனு டையதாவது நிர்ப்பந்தத்தில் தான் எழுத்தாளர்கள் கௌரவிக்கப்படுகின்றார்கள். அதிக சந்தர்ப்பங்களில் அதே காரணத்திற்காக கௌரவிக்கப்படாமலும் இருக்கின்றார்கள்.

மற்றும் இலக்கிய விழாக்கள், இலக்கிய கூட்டங்களில் பிரதம, கௌரவ, சிறப்பு விருந்தினர்களாக அரச அலுவலர்களையே முன்னிறுத்துகிறார்கள். அல்லது நிதி உதவி செய்பவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். உண்மையில் இலக்கிய விழாக்களில் கௌரவிக்கப் படவேண்டியவர்கள் மூத்த எழுத்தாளர் களே. பிறமாவட்டங்களிலிருந்தாயினும் நல்ல எழுத்தாளர்களை வரவழைக்கவேண்டும். மறு வளமாக எமது எழுத்தாளர்களும் பிறமாவட்ட இலக்கிய விழாக்களுக்கு அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட சந்தர்ப்பம் ஏற்படும். உடனடியாக அரச அலுவலர்களை புறக்கணிக்க சாத்தியப்படாவிட்டாலும் கூட அவர்களுடன் சேர்த்து மூத்த எழுத்தாளர்களுக்கும் சந்தர்ப்பங் கொடுக்க முன்வரவேண்டும்.

அடுத்து திருக்கோணமலையில் உள்ள எழுத்தாளர்கள் பெரும்பாலும் கல்விமான்களாக இல்லை. இலக்கிய முயற்சிக்கு அது ஒரு குற்றமில்லாவிட்டாலும் கூட பெரும்பான்மையான எழுத்தாளர்கள் ஏழ்மை நிலையில் இருக்கின்றார்கள். அதனால் அவர்கள் வசம் இருக்கும் ஆக்கங்களை வெளியீடு செய்ய இயலாதவர்களாக இருக்கிறார்கள். பண்பாட்டு திணைக்களம் ஏழ்மை நிலையில் உள்ள எழுத்தாளர்களின் ஆக்கங்களை கண்டறிந்து வெளியீடு செய்யலாம். அதிலும் தலையீடுகள் இருப்பதால் வசதியான எழுத்தாளர்களின் நூல்கள் பிரசுரமாவதற்கும் கடந்த காலத்தில் சந்தர்ப்பம் அமைந்துள்ளது.

அதே சமயம் திருக்கோணமலையில் அச்சு இயந்திரம் ஒன்று இல்லாமல் இருந்துள்ளது. அண்மைய நாட்களில்தான் மலைமுரசு ஆசிரியர் எழுத்தாளர்களினதும் வெளியீட்டாளர்களினதும் நலன் கருதி வர்ண அச்சு இயந்திரம் ஒன்றை கொணர்ந்துள்ளார்.

திருக்கோணமலையில் பல சிறந்த மூத்த எழுத்தாளர்களும் இளம் எழுத்தாளர்களும் உள்ளனர். அவர்களில் சிலர் நோய்வாய்பட்ட நிலையிலும் தமது தேவைகளுக்காக வைத்தியசாலை தபால் அலுவலகம் வங்கி கச்சேரி என்று செல்லவேண்டியவர்களாக இருக்கின்றார்கள். அவ்வவ் அலுவலகங்களில் கடமையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களும் ஊழியர்களும் அவர்களை அடையாளம் காணாமல் அவமதிப்புக்கு உள்ளாக்குவது உண்மையில் கவலைக்குரிய விடயமாகும்.

குறைந்த பட்சம் மக்கள் திருக்கோணமலையில் இன்று வீரியத்துடன் எழுதிக்கொண்டிருக்கும் எழுத்தாளர்களை பற்றி தெரிந்திருக்க வேண்டாமா?

இன்று இலங்கை பல்கலைகழகங்களிலும் தஞ்சைப் பல்கலைக்கழகத்திலும் கூட மாணவர்கள் எமது எழுத்தாளர்களின் படைப்புக்களை தமது பட்டப்படிப்பின் நிமித்தமான ஆய்வுகளுக்காக தேர்ந்தெடுக்கிறார்கள். எமது எழுத்தாளர்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கூட பல கௌரவங்களும் விருதுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

அப்படியான பெருமைகளை கொண்ட எமது திருக்கோணமலை மண்ணில் மக்கள் எழுத்தாளர்களின் படைப்புக்களை தேடியும் விலைகொடுத்து வாங்கியும் படிப்பதொன்றே எமது எழுத்தாளர் களுக்கான நன்மதிப்புக்கு வித்திடும்.

---

சா தா ர ண மா ன வ னி ன் ம ன து

# ஒரு மனிதன்... ஒரு வாழ்வு... அவன் மனசாட்சி...

சஞ்சயன் செல்வமாணிக்கம்

கடந்து போன சில கனதியான நாட்களின் மீண்டும் உயிர்திருக்கிறேன் இன்று. நேற்றைய இரவின் ஞானம் என்னை எனக்கு மீட்டத் தந்திருக்கிறது என்றால் அது மிகையில்லை.

என்னை மீட்டுக்கொண்ட பரவசத்தில் இருந்து மீள முதலே அதை பகிர்ந்து கொள்வதற்காய் இந்தப் பதிவை எழுதத் தொடங்கியிருக்கிறேன். இது ஒருவித பரவசமான பதிவு.

சில நாட்களுக்கு முன் நண்பர்கள் சிலர் என்னை, எனது குறிப்பிட்டதோர் செயலுக்காய் மிகக் கடுமையாய் விமர்சித்தார்கள். மனம் கனத்தும், சிறுத்தும் போனது. வெட்கித் தலைகுனிந்திருந்தேன், மனச்சாட்சி விரோதியாகிப்போனது, அமைதியற்ற மனம் தறிகெட்டுப் பாய, தூக்கமற்று என்னை முழுவதுமாய் இழந்திருந்தேன்.

என் செயலால் பாதிக்கப்பட்டவர்களின் மனம் பெரும் சஞ்சலத்துக்கும் வேதனைக்கும் உள்ளானது. மனங்கள் காயப்பட்டும், உறவுகளில் விரிசலும் ஏற்பட்டன. நட்புகளை இழந்து அனாதரவானது போலணுர்ந்தேன். பாதுகாப்புணர்வினை இழந்துபோனேன்.

கொட்டப்பட்ட வார்த்தைகளை எப்படி அள்ளியெடுக்க முடியாதோ அப்படிப்பட்ட நிலை அது. மற்றவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று நினைத்தோ, மற்றவர்களை காயப்படுத்தும் நோக்கத்துடனோ அல்லது மற்றவர்களை ஏமாற்றும் நோக்கத்துடனோ செய்யப்பட்ட செயல் அல்ல. அன்றைய நிலையில் அது தவறாய்ப் புரியவில்லை, ஆனாலும் இன்று அது தவறு என்று புரிந்திருக்கிறது.

நான் குற்றமற்றவன் என்று எப்போதும் கூறியதில்லை. தவறுகள் செய்யாது இருக்க நான் ஒன்றும் தெய்வப்பிறவியும் அல்ல, உணர்ச்சிகள் இன்றி வாழ நான் ஜடமுமல்ல. நானும் நன்மை தீமைகள், ஆசாபாசங்கள் கொண்ட சாதாரண மனிதனே. நன்மையும் தீமையும் இங்கும் உண்டு எங்கும் உண்டு.

மற்றவருக்கு என்னாலும், எனக்கு மற்றவர்களாலும் துன்பம் ஏற்படாமல் வாழவே விரும்புகிறேன். என் மனட்சாட்சியுடன் பூசலின்றி வாழ்தல் முக்கியம் எனக்கு. தற்போது அது சாத்தியமாயிருக்கிறது.

என் தவறுகளை, தவறு என்று ஏற்றுக் கொள்ளவும், தயக்கமின்றி மன்னிப்புக்கோரவும், அவற்றில் இருந்து பலதைக் கற்றுக்கொள்ளவும் என்னால் முடிகிறது.

கடந்து போன நாட்கள், கடந்து போனவையே. கடந்த நாட்களில் இழைத்த தவறுகளை திருத்திக் கொள்ள முடியாது என்பது புரியும் அதே வேளை அத் தவறுகளில் இருந்து வாழ்வினைக் கற்றல் இன்னும் சாத்தியமாயிருக்கிறது, எனக்கு.


கற்றலால் உயிர்க்கலாம் என்பதையும் அனுபவி த்துணர்ந்திருக்கிறேன். என் தவறுகளை தவறு என்று, அவற்றை ஏற்று, தவறுகளை மன்னிக்கமுடியுமா என்று மனதாரக் கேட்டு நிமிரும் போது, மனமானது சூழ்ந்து கொண்டிருந்த கனதிகளை இழந்து, என்னுள் புயலுக்குப் பின்னான தென்றலைப் போன்றதோர் பெரும் அமைதியையும், சுகத்தையும் தந்து போகிறது. இழந்து போன நிம்மதியும், சுய நம்பிக்கையும், சுயமும் முன்பைவிட பல மடங்கு அதிகமாக எனக்குள் ஊறிக் கொண்டிருப்பதை உணருகிறேன்.

சில நாட்களின் பின், மனச்சாட்சி என்னுடன் மீண்டும் நட்பாய் தோளில் கைபோட்டு தோழமையுடன் பேசுகிறது. முள்ளாய் குத்திய படுக்கையும், தொலைந்து போன சுகமான தூக்கமும், நிம்மதியற்று தறிகெட்டு ஓடிய சிந்தனைக் குதிரையும், கூனிக்குறுகி இருந்த மனமும் தந்த வேதனைகளைக் கடந்து, மனமாது, சீழ் வடிந்த ரணத்தின் ஆறுதலையும், சுகத்தையும் உணர்ந்தி ருக்கிறது.

முன்பைவிட என்னில் எனக்கு பலமான பாதுகாப்பான உணர்வும், நம்பிக்கையும ஏற்பட்டுள்ளதுடன் அன்பான, தவறுகளை மறந்து மன்னிக்கும் மனிதர்களிலும், நண்பர்களிலும் பெரும் நம்பிக்கையும் எழுந்திருக்கிறது. மனித உறவுகள் பலப்பட்டிருக்கின்றன. இவ்வாறான நண்பர்களை பெற்ற நான் அதிஸ்டசாலியே.

தவறுகள் தவறாயிருப்பினும், தவறுகளினால் கிடைக்கும், ஞானத்தின் சுகத்தினை அனுபவித்துணரும் போது, என்னை நான் பல காலங்களின் பின் மீண்டும் காதலிக்கத் தொடங்கியிருக்கிறேன். மனம் காற்றில் சருகாயிருக்கிறது.

நண்பர்களே! மனச்சாட்சியுடன் நட்பாயிருங்கள். அதுவே யாதுமாகிறது.



ஓர் மனசாட்சி பேசியது . . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் நண்பர்கள் இருப்பர் - கவனம்

...நாட்டு நடப்பு...

சிவபாலனும் நடராஜனும் நல்ல நண்பர்கள். முன்பள்ளி தொடக்கம் உயர்தரம் வரை இருவரும் ஒன்றாக கல்வி கற்றனர். இருவரும் தெல்லிப்பளை பிரதேசத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர்கள். சிவபாலன் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் பல்கலைக்கழகம் செல்வதற்கு வேண்டிய புள்ளிகளைப் பெறாததினால் அங்கு சென்று கற்கக்கூடிய வாய்ப்பை இழந்தான்.

இருப்பினும் அவன் தனது முயற்சியில் இருந்து சற்றேனும் பின்வாங்கவில்லை. வவுனியா கல்வியியல் கல்லூரிக்குள் எப்படியோ நுழைந்து விட்டான். நடராஜா உயர்தரத்தில் சித்தியடையாத படியால் தொழில் ஒன்றை தேர்ந்தெடுக்க வேண்டிய நிலை அவனுக்கு ஏற்பட்டது. அவன் மிகவும் பண ஆசை கொண்டவன் என்பதால் அதிக பணம் சம்பாதிக்கக் கூடிய தொழிலான கட்டட ஒப்பந்த வேலையை தேர்ந்தெடுத்தான்.

மேலும் அந்தத் தொழிலுக்கு அதிகமான பணம் தேவைப்பட்டதால் தெள்ளிப்பளையில் அவனது பெற்றோரின் சகல சொத்துக்களையும் விற்று பணமாக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டான். எப்படியோ மிகக் குறுகிய காலத்தில் அவன் பெரிய பணக்காரனானான். பணம் இல்லாவிட்டால் மனிதன் பிணம் அல்லவா!

சிவபாலனுக்கு பல்கலைக்கழகம் செல்லும் சந்தர்ப்பம் கிடைக்காவிட்டாலும் வவுனியா கல்வியியல் கல்லூரி தேர்வில் மிக சிறப்பான சித்தியுடன் அங்கிருந்து வெளியேறியதால் திருகோணமலை மாவட்டத்தின் விவசாயத்திற்கு மிகப் பிரசித்தி பெற்ற பிரதேசமான தம்பலகாமம் தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியர் பதவி அவனுக்கு கிடைத்தது.

அன்று தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்த இரண்டு நண்பர்களின் நெருங்கிய உறவு மீண்டும் தொடர ஆரம்பித்தது. இவ்விருவரையும் மீண்டும் இணைக்கும் ஒரு பாலமாக தம்பலகாமம் அமைந்திருந்தது. தம்பலகாமம் தமிழ் மகா வித்தியாலயத்தில் இரசாயன கூட கட்டட ஒப்பந்த வேலை நடராஜனுக்கு கிடைத்திருந்ததால் அவன் அங்கு தனது தொழிலாளர்களுடன் வேலைகளை ஆரம்பித்தான்.

அக்கட்டட வேலை சுமார் ஆறு மாதத்திற்கு உரிய வேலை என்பதால் அங்கு தங்கி இருந்து கொண்டே அவ்வேலைகளை கவனித்து வந்தான். ஒரு நாள் பாடசாலை சிற்றூண்டிச் சாலையில் நடராஜாவுக்கு தனது உயிர் நண்பன் சிவபாலனை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. இனி கேட்கவா வேண்டும் பிரிந்தவர்கள் ஒன்று சேர்ந்தால்!. தமது ஊர் புதினங்களையும் வாழ்க்கை நிலைகளையும் அங்கு அவர்கள் பகிர்ந்து கொண்டனர். சிவபாலன் அங்கு ஆசிரியராக கடமையாற்றுவதால் நடராஜா மேலும் பெரும் மகிழ்ச்சி அடைந்திருந்தான்.

இவ்விதமே அங்கு அடிக்கடி சந்தித்துக் கொள்வார்கள். ஒருநாள் சுவாரசியமாக பேசிக் கொண்டிருக்கும் வேளையில் "சிவா... உனக்கு தம்பலகாமத்தில் ஒரு பிகர் பார்ப்பமாடா?" என தமாஷாகக் கேட்டான் நடராஜா.



"அதுக்கு அவசியமில்லடா?" என பதிலளித்து, அந்த சிற்றூண்டிச் சாலையினுள் சக ஆசிரியைகளுடன் தேனீர் அருந்திக் கொண்டிருந்த அருந்ததி ஆசிரியை பார்க்கும்படி தனது ஓரக்கண்ணால் நடராஜாவுக்கு சமிக்ஞை கொடுத்தான் சிவபாலன்.

நடராஜா அந்த அழகு தேவதையான அருந்ததியை நாசூக்காக பார்த்துவிட்டு "புடிச்சாலும் நீ புளியங் கொம்பாகத்தான் புடிச்சிருக்கிறா மச்சான்" என சிவபாலனை அவன் மேலும் புகழ ஆரம்பித்தான். "என்னடா சொல்லுறா? உனக்கு அவளை தெரியுமா?" என வியப்பாக அங்கு கேள்விகளை கேட்டுக் கொண்டே சென்றான் சிவபாலன்.

"தெரியுமாவா? இவளின்ர குடும்பந்தான் இந்த தம்பலகாமத்திலே மிக பெரிய பணக்காரக் குடும்பம். அவளிட தகப்பனிட்ட மாத்திரம் நூறு ஏக்கருக்கு மேல வயல் காணி இருக்கு. அதைவிட தோட்டம், வாகனம் என்றெல்லாம் பல வசதிகள் கொண்ட குடும்பம்" என்று நடராஜா அக்குடும்ப தரத்தினை அடுக்கிக் கொண்டே போனான். சிவபாலனால் மகிழ்ச்சியை ஸ்பீட் பிரேக்கர் போட்டாலும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அது எங்கெல்லாமோ சிறகு கட்டி பறந்து கொண்டே இருந்தது.

சிவபாலன் அந்த பாடசாலையில் கடமையை பொறுப்பேற்ற நாள் தொடக்கம் அவளது இதயத்தில், நீங்கா இடத்தை பிடித்துக் கொண்டான். அதற்கு காரணம் சிவபாலனின் அமைதியான சுபாவம் அவளை அளவுக்கதிகமாக அவன் மேல் ஆசை கொள்ள வைத்ததே.

மச்சான் நீ பயப்படாதே, எப்படியும் அருந்ததி ரீச்சர் உனக்குத்தான். நான் உன்ர கல்யாணத்தை முன்னின்று நடத்தி வைப்பன். நீ ஒன்றுக்கும் யோசிக்காதே என்று சிவபாலனை ஆர்வப்படுத்தினான் நடராஜா.

அந்தப் பாடசாலையின் அதிபர் சித்திரவேல் மிக தங்கமான மனிதர். தம்பலகாமத்தில் அவரின் சொல்லை எவரும் மீறி நடக்கவே மாட்டார்கள். அவ்வளவு தூரம் செல்வாக்கு இருப்பதற்கு காரணம் அவர் அந்த மண்ணின் மைந்தன் மாத்திரமல்ல அவரின் நேர்மையான நடவடிக்கைகளுமே. அதிபர் சித்திரவேலுக்கு அருந்ததி ஆசிரியை ஒரு வகையில் நெருங்கிய உறவினரும் கூட. அவருக்கு ஆண்பிள்ளைகள் இருந்திருந்தால் நிச்சயம் அருந்ததியை தனது மருமகளாக்கி இருந்திருப்பார். சிவபாலன் அருந்ததியை விரும்பாதிருந்திருந்தால், நிச்சயம் அவனை தனது மருமகனாக்கி இருந்திருப்பார். இறைவனின் முடிவை யாரால் மாற்றமுடியும்? அது மாத்திரமல்ல எந்த விடயத்திலும் நீதி, நியாயமாக நடந்து கொள்வார். அருந்ததியின் தகப்பனாரை சந்தித்து அவர்களுடைய விருப்பத்தை மிக பக்குவமாக எடுத்து கூறியதன் அடிப்படையில் சிவபாலன் - அருந்ததியின் திருமணம் மிகச் சிறப்பாக அங்கு இடம் பெற்றது.

தெல்லிப்பளையிலிருந்து சிவபாலனின் பெற்றோரும், உறவினர்களும் கலந்து கொண்டனர். நடராஜா அதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்திருந்தான். தனது நண்பனையும் அவன் செய்த உதவிகளையும் சிவபாலனால் என்றுமே மறக்க முடியாத நிலை இருந்துவந்தது. நடராஜா எந்த உதவியை கேட்டாலும் சிவபாலன் என்றும் மறுப்பதே இல்லை.

தம்பலகாமத்தில் சிவபாலனுக்கு சீதனமாக பெரியதொரு வீடொன்றை அவனது மாமனார் வழங்கி இருந்தார். அந்த வீட்டில் தனக்கும் மனைவிக்கும் ஓர் அறையை தரும்படி நடராஜா கேட்டதிற்கு இணங்க சிவபாலனும் அந்த வீட்டில் ஒரு பகுதியை நடராஜா குடித்தனம் நடாத்த கொடுத்திருந்தான். நடராஜா திருமணம் செய்து கொண்டது பற்றி சிவபாலன் அறியாதிருந்தான். இருந்தாலும் தனது திருமணத்திற்காக இரவும் பகலும் அயராது உழைத்த நண்பனுக்கு உதவாமல் இருக்க முடியுமா என்ன! மேலும் தனது மனைவிக்கு மாந்திரீகம் கைவந்த கலை. அவளால்தான் நான் இன்று இந்த நிலையில் இருக்கிறேன் என சிவபாலனுக்கு நடராஜா அடிக்கடி கூறிவருவான்.

அது மாத்திரமல்ல ஆசிரியர் தொழில் ஒரு கௌரவத்திற்காக இருந்திட்டுப் பேகட்டும். நான் உன்னை இலட்சாதிபதியாக ஆக்கிக் காட்டுகிறேன் என அடிக்கடி நடராஜா சிவபாலனுக்கு சவால் விடுவான். கொழும்பிலுள்ள ஒரு வெளிநாட்டு தொழில் வாய்ப்பு நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு தம்பலகாமப் பிரிவுக்கு சிவபாலனை முகவராக்கினான். அந்த தொழில் சிறந்து விளங்க வேண்டுமென்பதற்காக நடராஜா தனது மனைவி மூலம் பல தாயத்துக்கள், மாந்திரீக தகடுகள் தயாரிப்பதும் ஆயிரக்கணக்கில் பணம் செலவழித்து யாகங்கள், பூஜைகள் கூட அந்த வீட்டில் தொழில் சிறந்து விளங்குவதற்காக இடம்பெற்று வந்தன.

ஆனால் அருந்ததிக்கு இந்த மாந்திரீக விடயத்தில் எவ்வித உடன்பாடும் இருக்கவில்லை. அது குறித்து நிதமும் அந்த வீட்டில் கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் வாக்கு வாதங்கள் இடம்பெறுவது வழமை. தனது கணவனை நடராஜாவும், அவரது மனைவியும் ஏமாற்றுகிறார்கள் என்பதை மட்டும் நன்கு புரிந்து கொண்டாள். ஆனால் மனைவியின் பேச்சை கேட்க சிவபாலன் ஆயத்தமாயில்லை. அவன் நடராஜாவையும், அவன் மனைவியையும் முற்றாக நம்பினான். அதனால் வீட்டில் நிதமும் பிரச்சினைக்கு மேல் பிரச்சினையாக இருந்து வந்தது. நடராஜா அதிக நாள் அந்த வீட்டில் தங்குவதில்லை. ஒப்பந்த வேலைகள் என்று கூறி வெளியூரிலே இருந்துவிடுவான். வாரத்தில் ஒரு தடவை தான் வீட்டுக்கு வருவான். அவர்களின் நடத்தையில் அருந்ததிக்கு பலத்த சந்தேகம் எழுந்தது. மிக இரகசியமாக அவள் தனது புலனாய்வு நடவடிக்கைகளை ஆரம்பித்தாள்.

மேலும் அடிக்கடி மாந்திரீக வேலைகளை காரணம் காட்டி தனது கணவனிடம் இலட்சக்கணக்கில் அந்த தம்பதியினர் பணம் பறிக்கிறார்கள் என்பதனை அருந்ததி நன்கு தெரிந்து கொண்டு சில விடயங்களை ஆதார பூர்வமாக தனது கணவனுக்கு நிரூபித்தும் அது பயனற்றுப் போயின. ஆனால் சிவபாலன் தனது நண்பனையும், அவன் மனைவியையும் எள்ளளவும் சந்தேகமின்றி நம்பி அவர்கள் கேட்கும் போதெல்லாம் பணத்தை அள்ளிக் கொடுத்துக் கொண்டே இருந்தான்.

ஒரு நாள் அருந்ததி நடராஜாவினதும் அவன் மனைவியினதும் திருகுதாளத்தையும், அவர்கள் புரிந்த திருட்டையும் கையும் களவுமாக பிடித்துக் கொண்டாள். அதனால் அங்கு பெரும் வாக்குவாதம் இடம்பெற்றது. அருந்ததி நடராஜாவின் மனைவியை வீட்டை விட்டு துரத்தியே விட்டாள்.

அச்சமயம் நடராஜாவும், சிவபாலனும் வீட்டில் இருக்கவில்லை. வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவன விடயமாக கொழும்பு தலைமைக் காரியாலயத்திற்கு சென்றிருந்தனர். பெயரளவில் தான் சிவபாலன் முகவராக செயற்பட்டானே தவிர அவனால் ஒருவரையும் அந்த நிறுவனம் ஊடாக வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்க முடியவில்லை.

கொழும்பில் வைத்து நடராஜாவின் தில்லுமுல்லு வேலைகளை சிவபாலன் நன்கு அறிந்து கொண்டான். அது மாத்திரமல்ல அந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் நடராஜாவுக்கும் தங்களுக்கும் எந்தவித தொடர்புகளும் இல்லை என கூறிவிட்டது. நடராஜா கொழும்பிலே தலைமறைவாகிவிட்டான். அவனால் முகம் கொடுக்க முடியாததே அதற்கு காரணம்.

கவலையுடனும், ஏமாற்றத்துடனும் வீடு வந்து சேர்ந்த சிவபாலன் நடந்த தவறுகளுக்காக அருந்ததியிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். அத்துடன் அவளும் திடுக்கிடும் தகவலை அவனுக்கு கூறி வைக்க தவறவில்லை. அதுதான் அவன் இல்லாத போது அங்கு நடந்த சம்பவம்.

நடராஜா ஏற்கனவே நிலாவெளியில் திருமணம் செய்து கொண்டவன். அவனுக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றார்கள். அவன் சிவபாலன் வீட்டில் தனது மனைவி என்று கூறி குடித்தனம் நடாத்தியது அவனது சட்டபூர்வமற்ற மனைவியுடனாகும். அருந்ததி தனது நண்பிகளின் மூலம் நடராஜாவின் பூர்வீகத்தை எப்படியோ அறிந்து கொண்டே துணிவுடன் அவனது அந்த கள்ள மனைவியை வீட்டை விட்டு துரத்தியிருந்தாள். அந்த வீட்டில் நடராஜா திருட்டுத்தனமாக குடும்பம் நடாத்துவதற்காகவே தனது மனைவியாக நடித்தவளுக்கு மாந்திரீகம் தெரியுமென்று பொய் கூறி அங்கு தங்க வைத்தான். என்னவாக இருந்தாலும் சிவபாலனிடமிருந்து சுருட்ட வேண்டிய தெல்லாவற்றையும் நடராஜா சுருட்டிக் கொண்டே ஓடிவிட்டான். அருந்ததி மட்டும் இல்லாவிட்டால் எல்லாம் அதோ கதிதான்.

**- பாலையூற்றான் -**




## தனிமை பொல்லாதது

பிரான்ஸில் தனியாக வசித்து வந்த மூதாட்டி ஒருவர் (57), தனிமைக்கொடுமை தன்னை வாட்டுவதாக அடிக்கடி புலம்பியதால், அவரது மகள் அவ்வப்போது வந்து தாயை சந்தித்துள்ளார். இதேபோல் கடந்த வாரம் தாயை பார்க்க வந்த மகளுக்கு, வீட்டில் தாயின் சத்தம் எதுவும் கேட்காததால் தீயணைப்பு வீரர்களுக்கு தகவல் கொடுத்துள்ளார். இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற தீயணைப்பு படையினர் வீடு முழுவதும் தேடியும் தாயார் கிடைக்கவில்லை.

இதன்பின் வீட்டில் இருந்த குளிர்சாதன பெட்டியை திறந்து பார்த்தபோது, அங்கு மூதாட்டியின் பிணம் இருந்ததை பார்த்த அவரது மகள் கண்ணீர் வெள்ளத்தில் ஆழ்ந்துள்ளார்.

## முதலிரவு சிறையில்...



பிரித்தானியாவில் உள்ள ஹொட்டல் ஒன்றில் திருமண உடையணிந்து கிறிஸ்டி என்ற பெண் தனது வருங்கால கணவருடன் வந்திருந்தார். அப்போது ஹொட்டல் காவலாளியை பார்த்த கிறிஸ்டி, அந்நபரின் இனத்தை சுட்டிக்காட்டி கொச்சையாக பேசி இனவெறி தாக்குதலை நடத்தியுள்ளார். இதை பார்த்த சிலர் பொலிசாருக்கு தகவல் அளிக்கவே, சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த பொலிசார் அப்பெண்ணை கைது செய்து ஓராண்டு சிறை தண்டனையும் 150 யூரோக்கள் அபராதமும் விதித்து உத்தரவிட்டுள்ளார்.



## 28இல் பாட்டியான கொடுமை

சீனாவின் வடக்கு மத்திய மாகாண பகுதியை சேர்ந்த பெண் "ஹ ஜ" வான் (வயது 28). இரண்டு குழந்தைகளின் தாயான "ஹ, தற்போது 60 அல்லது 70 வயது மதிக்கத்தக பாட்டி போன்று தோற்றமளிக்கிறார். இளவயதிலேயே முதுமை போன்ற தோற்றத்துடன் காணப்படும் அரிய வகை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார் "ஹ. இதனால், முகம் மற்றும் கழுத்து பகுதிகளில் தோல்கள் மிக தொய்வாக காணப்படுகிறது. உலகத்தில் பத்து பேர் மட்டுமே இவ்வகையான அரிய வகை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## தூக்கியெறியப்பட்ட சிசு



சீனாவில் குழந்தை பெற்ற ஒரு தாய், தான் பெற்ற குழந்தையை டாய்லெட்டில் போட்டு சென்றதாகவும், டாய்லெட்ட்டில் இருந்து குழந்தை அழுத குரல் கேட்டு டாய்லெட் சுத்தம் செய்யும் நபர் காப்பாற்றி காவல்துறையிடம் ஒப்படைத்த செய்தி ஒன்று சீனாவை மட்டுமின்றி உலகையே திடுக்கிட வைத்துள்ளது.

## புதிய ஸ்டைலில் சொத்தபகரிப்பு



ஜப்பான் நாட்டில் உள்ள ஒரு பெண், ஓய்வு பெற்று மனைவியை இழந்து வீட்டில் தனிமையில் வாடும் முதியவர்களுடன் டேட்டிங் சென்று அவர்களை கொலை செய்து அவர்களது சொத்துக்களை கைப்பற்றும் குற்றங்களை செய்ததாக கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டார். அவரிடம் நடத்தப்பட்ட விசாரண்ணயில் அவர் இதுவரை 6 முதியவர்களை கொலை செய்துள்ளார் என்றும், கைது செய்யப்பட்ட போது அவர் இரண்டு முதியவர்களுடன் டேட்டிங்கில் ஈடுபட்டிருந்தார் என்ற திடுக்கிடும் தகவல் வெளிவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் மூலோபாயமும் செயற்பாடுகளும்

கலைஞர்கள், சிவில் சமூக பிரமுகர்கள் இவர்களடங்கிய பிரஜைகள் சக்தி என்னும் குழு "பொறியிலிருந்து விடுபடுவோம்" என்கின்ற தொனிப்பொருளில், பொது வேட்பாளர் மைத்திரிபால சிரிசேனவுக்கு ஆதரவானதொரு அரசியல் கூட்டத்தினை கடந்த வாரம் ஹயிட் பூங்காவில் நடத்தியிருந்தது. பூங்காவிற்கு உள்ளும் அதன் வெளியே நடைபாதையிலும் ஒரே கூட்டம். "இது சேர்த்த கூட்டமில்ல. தானா சேர்ந்த கூட்டம்" என ரஜனி பாணியில் கூற வேண்டும்போலிருந்தது. பொறுமையுடன் பல மணி நேரம் நின்றுகொண்டே சகல உரைகளையும் யாவரும் உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டிருந்தனர். அவ்வப்போது கரகோ'ம் இடவும் மறக்கவில்லை. அரசியல் மாற்றத்திற்கு தென்பகுதி தயாராகி வருவது போலத் தோன்றியது. இக்கூட்டத்தில் ரணில் மைத்திரி எனப் பல அரசியல் தலைவர்கள் பேசினாலும், குறிப்பாக காமினி வியாங்கொடை என்னும் எழுத்தாளரது பேச்சு பலரையும் கவர்ந்திருந்தது. அவர் புத்தபெருமானின் வாழ்க்கைக் கதைகளான ஜாதக கதைகளிலிருந்தும் கிராமியக் கதைகளிலிருந்தும் பல உதாரணங்களை எடுத்து விட்டு ஆட்சி மாற்றத்திற்காக ஏன் நாம் வாக்களிக்க வேண்டும் என்பதனை விளக்கிக் கொண்டிருந்தார். இப்பொழுது புலம் பெயர் தமிழர்கள் மத்தியிலிருந்தும் சிவில் சமூகத் தரப்பிலிருந்தும் பலவகையான அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கும் இந்நிலையில், காமினி கூறிய கதைகள் எமக்கும் பொருத்தமாக இருக்கின்றதைப் பார்க்கின்றோம்.

காமினி சொன்ன கதைகளிலொன்று எரிகின்ற வீடொன்றில் வாழ்ந்த மனிதர்களுடன் புத்தர் நடத்திய சம்பா'ணையாகும். ஒரு வீடு நன்றாக எரியத்தொடங்கி விட்டது. ஆனாலும் அதனைவிட்டு அங்கு வாழ்ந்தவர்கள் கிளம்புவதாயில்லை. ஏன் என்று புத்தர் விசாரிக்கின்றார். "நாங்கள் இங்கிருந்து கிளம்பினால் போவதற்கு வேறு வீடிருக்கின்றதா? சுவாத்தியமும் சாதகமாகவில்லையே? இன்னுமொரு நல்ல வீடின்றி தட்டு முட்டுச் சாமான்களுடன் எங்கு போய்த் தங்குவது? எனப் பல்வேறு சந்தேகங்களை அவர்கள் கிளப்பினர். அப்பொழுது புத்தபெருமான் நீங்கள் கேட்கும் ஒவ்வொரு கேள்வியும் நியாயமானதே. ஒரு உத்தரவாதமும் இல்லாத எதிர்காலந்தான் இப்பொழுது உங்கள் முன் நிற்கின்றது.



ஆயினும், வாழ்க்கையில் முதன்மையாகச் செய்ய வேண்டியது, பின்பு செய்ய வேண்டியது.. என காரியங்கள் உண்டு. நீங்கள் வாழ்ந்தால்தானே உங்களுக்கு அடுத்து நடக்கப்போவது முக்கியமாகின்றது? எனவே எல்லாவற்றையும் விட நீங்கள் உங்கள் உயிர்களைக் காப்பாற்றுவதே இப்பொழுது முக்கியமாகின்றது. அதனால் எரிகின்ற வீட்டிலிருந்து முதலில் உடனே கிளம்ப வேண்டும். நீங்கள் முதற்கட்டமாகத் தப்பித்துக்கொண்டதற்குப் பிறகுதான் நாம் அடுத்தடுத்த பிரச்சினைகளை நோக்க முடியும்.." என்று ஆலோசனை கூறினார். "நீங்கள் இப்பொழுது கிளம்பவில்லையானால் பின்பு கிளம்பவே முடியாதபடி நெருப்பில் அகப்பட்டுப் பொசுங்கிப் போய் விடுவீர்கள்.." என்றும் கூறவே அம்மக்கள் வெளியேறினராம். எல்லோருக்கும் தெரிய வேண்டும் என நாம் நினைக்கின்ற மிக எளிமையான போதனைதான். ஆனால் அதுவும்கூட சொல்ல வேண்டித்தானிருக்கின்றது. இன்று, "இவனும் கள்ளன்தான் அவனும் கள்ளன்தான் இரண்டு பேரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்", "தேர்தலைத் தமிழ் மக்கள் பகி'கரிக்க வேண்டும்", "மூன்றாவது வேட்பாளரை தமிழர்கள் நிறுத்த வேண்டும், இது சிங்கள மக்களுடைய அர்த்தமில்லாத அரசியல் என தமிழ் மக்கள் சர்வதேச சமூகத்திற்குக் காட்ட வேண்டும்" என்றெல்லாம் பேசிக்கொண்டு நிற்பது எரிகின்ற வீட்டிலிருந்துகொண்டு தமது எதிாகாலத்தைப் பற்றி வியாக்கியானம் செய்த மக்கள் மாதிரியேயல்லவா இருக்கின்றது? முதலில் தமிழ் மக்கள் தம்மிடம் இருப்பவற்றைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு எந்தக் கள்ளனுடன் என்ன செய்ய வேண்டுமென்பதனைப் பார்க்கலாமே.

இந்த ஆட்சியின்கீழ் இராணுவமயமாக்கலின் ஊடாக, காணி அபகரிப்பின் ஊடாக, சிங்கள மக்களின் குடியேற்றங்களின் ஊடாக இருப்பதையெல்லாம் தமிழ் மக்கள் இழக்க ஆரம்பித்துள்ளனர். இப்பிரச்சினைகள் பற்றி ஏதேனும் நடவடிக்கை எடுத்தாலும் அதுவெல்லாம் விழலுக்கிறைத்த நீராய் செவிடன் காதில் ஊதிய சங்காய் பயனின்றிப் போகும் நிலையில் எதிரில் கண்டவற்றையெல்லாம் புல் டோசர் மாதிரி நசுக்கிச் செல்லும் அரசாங்கமாக இது இருக்கின்றது. எந்த சர்வதேச விசாரணையையும் தனக்கு வாக்குகளாக மாற்றும் சாமர்த்தியம் கொண்டிருக்கின்றது. இராணுவத்தில், நிர்வாகத்தில், அரசியல் கட்சிகளுக்குள், மாகாண அரசியல் நிர்வாகத்துக்குள் என சகல படிநிலைகளிலும் தமது விசுவாசிகளைப் படிப்படியாகப் போட்டுக்கொண்டு வருகின்றது. அது மக்களால் தெரிவு செய்யப்படும் அரசாங்கமாக இரக்கும்வரையில் எவராலும் அசைக்க முடியாத சக்தியாக உலகில் வலம் வரவும் அதற்கு முடியும். இப்பொழுது வாய்ப்பினைத் தவற விட்டால் இனிப்பல யுகங்களுக்கு மாற்றத்தை ஏற்படுத்த முடியாதபடி எம்மை மீறிய சக்திகளாக மாற்றம் பெற நேரலாம். அதற்குள் தமிழ் மக்கள் புதைக்கப்பட்டு விடுவர்.. இவ்வாறு எப்படிப் பார்த்தாலும், இந்த ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு உதவுவது ஒன்றுதான் தமிழ் மக்கள் முன் நிற்கும் ஒரேயொரு தெரிவாகும். 2005ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் விட்ட தவறினை நாம் மீண்டும் விடக்கூடாது.

இந்த நிலையில் புலம் பெயர் தமிழர்களின் தலைமைகள் வெளியிடும் அறிக்கைகளும் சர்ச்சைக்குரிய விடயங்களாகப் போகின்றன. "இத்தேர்தலில் தோற்றால் மகிந்த இராஜபக்ஸ போர்க்குற்ற விசாரணைகளுக்கு உட்படுத்தப்படுவார். என்பது போன்ற பகிரங்க அறிக்கைகளை விடுகின்றனர். அரசியல் சதுரங்கத்தில் எதிர்த்தரப்பினர் மத்தியில் பயத்தினையும் கிலியினையும் உண்டாக்கினால் நாம் எமது குறிக்கோளுக்கு எதிராகச் செயற்படுபவர்களாவோம். சிங்கள மக்களில் அனேகம் பேர் அத்தகைய பயத்துடன் இத்தேர்தலை நோக்குகின்றனர். தமது சார்பில் பிரபாகரனை அழித்தவரை போர்க்குற்ற விசாரணைக்கு கொண்டு செல்வது அவர்களுக்கு விரும்பத்தக்க விடயமல்ல. எனவே அவர்களின் பயத்தினை உறுதிப்படுத்துவது போன்ற செயற்பாடுகளில் இறங்குவது இத்தேர்தலில் தமிழ் மக்கள் தமது நலன்களுக்கெதிராகச் செயற்படுவது போன்றதாகும். இராணுவத்திற்கு வேறு அந்தக் கிலி இருக்கின்றது. ஜனாதிபதி போர்க்குற்ற விசாரணைகளுக்கு இழுக்கப்பட்டால் அதன் தலைமையுமல்லவா இழுக்கப்படும்? இச் சக்த்திகளையெல்லாம் ஆட்சியாளர் பக்கம் சாய விடக்கூடாது. இதனால்தான் எதிரணியினரும் தாம் போர்க்குற்ற விசாரணைகளை அனுமதிக்க மாட்டோமென திரும்பத் திரும்ப வாக்குறுதியளித்துக் கொண்டிருக்கின்றனர்.

தமிழ் மக்களுக்கிருக்கும் ஒரேயொரு தெரிவு போலவே தற்சமயம் ஆட்சியிலிருக்கும் குடும்பத்திற்கும் தம் முன் ஒரேயொரு தெரிவுதான் இருக்கின்றது. இத்தேர்தலில் வெற்றி காண்பதுதான் அதற்கிருக்கும் ஒரேயொரு தெரிவாகும். எனவே வெற்றி காண்பதற்கான பல யுக்திகளைக் கையாளும் என்பதனை நாம் எதிர்பார்க்கலாம். 2010 ஜனாதிபதித் தேர்தல்களில் தேர்தல் ஆணையாளர் அலரி மாளிகையில் சில மணி நேரங்கள் குடியேறியதை நாம் மறக்க இயலாது. யாழ் மாவட்டக் கட்டளைத் தளபதியினை இதே காரணத்திற்காக மாற்றம் செய்தாகி விட்டது. வட மாகாணத்தின் வாக்குகளை மூன்று இலட்சத்தினால் குறைத்தாலே ஜனாதிபதிக்கு வெற்றி என்கின்றனர். இதே போல் சில குறிப்பிட்ட தென் மாவட்டங்களிலும் பல பொலிஸ் அதிகாரிகள் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். தேர்தல் மோசடிகள் நடக்காமல் தடுப்பது எதிர்க்கட்சியினரின் அல்லது தேர்தல் கண்காணிப்பாளர்களின் கடமை என்று மக்கள் இருக்கக்கூடிய காலமல்ல இது. இனி வருங்காலம். மக்கள் அனைவருமே தாம் வாக்களிக்கும் பொறுப்புள்ளவர்களாக இருப்பது, தம்மைச் சார்ந்த ஏனையோரையும் வாக்களிக்கும் பொறுப்புள்ளவர்களாக மாற்றுவது, இயலுமான விதங்களில் தேர்தல் கண்காணிப்பினைச் செய்வது போன்ற கடமைகளை செயற்படுத்த வேண்டிய காலமாகும். வாக்குரிமை ஒன்றே இப்பொழுது மக்கள் கைகளில் எஞ்சியுள்ள ஆயுதமாகும். அதனை மிகக் கவனமாகப் பிரயோகிக்க முயலவேண்டும். வாக்களிக்கும் கட்டத்தில், வாக்குப்பெட்டிகள் கொண்டு செல்லப்படும் கட்டத்தில், வாக்குகள் எண்ணப்படும் சமயத்தில், அவ்வெண்ணிக்கைகள் கணனியில் பதியப்படும் சமயத்தில், அவையெல்லாம் ஒன்றுகூட்டி கொழும்பு தேர்தல் ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்படும் சமயத்திலெல்லாம் அதீத கண்காணிப்புத் தேவையாகின்றது. மக்கள் கூட்டமாக வாக்குச் சாவடிகளுக்கு சென்று வாக்களிப்பது, பெட்டிகள் வாகனங்களில் ஏற்றப்படும்பொழுது அவ்வாகனத்தில் வேறு பெட்டிகள் போடப்பட்டிருக்கின்றனவா என உறுதி செய்வது, வாக்குப் பெட்டிகள் கொண்டு செல்லப்படும் சாலைகளில் பொது மக்கள் அணிவகுத்து நின்று அவ்வாகனங்கள் எங்கும் திசை திருப்பப்படாததனை உறுதி செய்வது, வாக்குகள் எண்ணப்படும் நிலையங்களில் எதிாக்கட்சியினர் சார்பாக (குறைந்தது பத்துக் கட்சிகளாவது போட்டி போடுகின்றனவே) அவர்களுக்குத் தேவையான தொண்டர் படைகளை சுழற்சி முறையில் வழங்குவது, வாக்குகள் எண்ணப்படும் நேரங்களில் அடிக்கடி மின்சாரம் வெட்டப்படும் சம்பவங்கள் நடக்கின்றதனால் அந்நேரம் கைவசம் வேறு பட்டரி விளக்குகளை வைத்திருப்பது போன்ற பல நடவடிக்கைகளை நாம் கைக்கொள்ளலாம். மக்கள் உறுதியுடன் ஒன்று கூடிச் செயற்படுகின்றனர் என்பது ஒன்றே மோசடியில் ஈடுபடுபவர்களின் ஊக்கத்தினைக் கெடுத்துவிடும்.

அடி என்னடி உலகம் இது எத்தனை கலகம்

**-சாந்தி சச்சிதானந்தம்-**

குளோபல் தமிழ் நியூஸ்.கொம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. ஒன்று ரூ12.50 வீதம் 6 பேனைகளை வாங்கத் தேவையான பணத்தை காண்க?

02. 40கி.மீ/மணித்தியாலம் எனும் கதியில் செல்லும் பேரூந்து ஒன்று இரண்டு மணித்தியாலங்களுக்கு செல்லும் தூரத்தை காண்க.

03. 1.5கி.கி நிறையுள்ள ஒரு வெற்றுப் பெட்டியினுள்ளே சமநிறையுள்ள 5 புத்தகங்கள் அடுக்கப்பட்டுள்ளன. புத்தகங்கள் உள்ள பெட்டியின் மொத்த நிறை 5.25கி.கி எனின், ஒரு புத்தகத்தின் நிறையைக் காண்க?

04. செவ்வகமும் அரை வட்டமும் கொண்ட ஒரு பூந்தோட்டம் ஒன்று உள்ளது.
1. பூந்தோட்டத்தின் பரப்பளவு யாது ?
2. 1 $m^2$ இற்கு பசளையிடும் செலவு ரூபா 3.00 எனின், மொத்தச்செலவு யாது?
3. 14m விட்டம் கொண்ட ஒரு அரை வட்டப் பகுதியில் வில்லின் நீளம் எவ்வளவு ?
4. பூந்தோட்டத்தின் சுற்றளவு யாது ?
5. பூந்தோட்டத்தின் அகலப்பகுதியில் 4 m அகலமான படலை விடப்பட்டு சுற்றிவர 5 நிரை முட்கம்பி வேலி இடபட்டுள்ளது. முட்கம்பியின் மொத்த நீளம் யாது ?

05. வானொலிப் பெட்டி ஒன்றை ரூபா 4050 இற்கு விற்பனை செய்து வியாபாரி 35% இலாபம் பெற்றார்.
1. வியாபாரியின் கொள்விலை யாது ?
2. இலாபம் ரூபாவில் எவ்வளவு ?
3. வானொலிப் பெட்டியை ரூபா 3750 இற்கு விற்பனை செய்திருந்தால் அவருக்கு கிடைக்கும் இலாபச் சதவீதம் எவ்வளவு ?
4. ஒருவர் வியாபாரியிடம் இம்மாதிரியான ஆறு வானொலிப் பெட்டிகளை வாங்கி 15% இலாபத்தில் விற்பனை செய்தால் அவருக்குக் கிடைக்கும் மொத்த இலாபம் எவ்வளவு ?

06. ஒழுங்கான பல்கோணி ஒன்றின் அகக்கோணம் ஒன்றின் பருமன் 140 பாகை ஆகும்.
(1) புறக்கோணம் ஒன்றின் பருமன் யாது?
(2) பக்கங்களின் எண்ணிக்கையைக் காண்க.

07. ரூபா 6000 இன் 2/5 பங்கினை சமிந்த பெற்றுக் கொண்டான். எஞ்சியதில் 1/3 பங்கை ரவி பெற்றுக் கொண்டான். மீதியைக் குமார் பெற்றான்.
1. சமிந்த பெற்ற தொகை எவ்வளவு ?
2. ரவி பெற்ற தொகை எவ்வளவு ?
3. குமார் பெற்ற தொகை எவ்வளவு ?

08. 3 இற்கும் 19 இற்கும் இடையே மூன்று கூட்டல் இடைகளைக் காண்க.
09. 5 பழங்களின் விலை ரூபா 35 எனின், 8 பழங்களின் விலை யாது ?
10. சாய்சதுரம் ஒன்றின் மூலைவிட்ட நீளங்கள் 8cm, 6cm ஆகும். அதன் சுற்றளவைக் காண்க.

**திருமலையின் பிரபல ஆசிரியர் T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**

## பாடம் : விஞ்ஞானம்

01. இளஞ்சூட்டு குருதி நிலை விலங்குகளின் கூட்டம் எது?
1. நகருயிர்கள் 2. உபயவாழிகள் 3. பறவைகள் 4. மீன்கள்

02. ஒட்சிசன் ஏற்றப்பட்ட குருதியைக் கொண்டு செல்லும் நாளம் எது?
1. முற்பக்க பெருநாளம் 2. பிற்பக்க பெருநாளம்
3. சுவாச நாளம் 4. ஈரல் வாயி நாளம்

03. குளோரின் வாயு நிரப்பப்பட்ட வாயுச் சாடி ஒன்றினுள் இடப்பட்ட ஈரப்பாசிச் சாயத்தால் துண்டு வெந்நிறமாக மாறியது. குளோரினின் எந்த இயல்பு இதற்கான காரணமாக அமையலாம்?
1. அமிலத்தன்மை 2. ஒட்சியேற்றும் தன்மை 3. மூலத்தன்மை
4. தாழ்த்தும் இயல்பு

04. தாவரக் கலத்தையும் விலங்குக் கலத்தையும் நுணுக்குக் காட்டியினால் நோக்கும் போது பின்வரும் எப்பகுதியில் வேறுபாட்டைக் காணலாம்?
1. கரு 2. பரம்பரை அலகு 3. கலச்சுவர் 4. முதலுரு மென்சவ்வு

05. சுண்ணாம்பு கல்லின் அரசாயன சூத்திரம் எது?
1. $CaCO_3$ 2. $CaO$ 3. $Ca(OH)_2$ 4. $CaSO_4$

06. இனிமையான மாம்பழம் ஒன்றில் இருந்து தோன்றிய ஒரு மாமரத்தின் பழங்கள் மேற்படி இனிமையான பழத்தை விட இனிமை குறைந்தளவானதாகக் காணப்படலாம். இதற்கான பிரதான காரணமாக அமையக் கூடியது எது?
1. பதியமுறை இனப்பெருக்கம் நடைபெறாமை ஆகும்.
2. மகரந்த சேர்க்கையின் போது இயல்புகள் கலக்கக் கூடிய வாய்ப்பு காணப்படலாம்.
3. முளைக்கும் போது இயல்புகள் வேறுபடுகின்றமை ஆகும்.
4. மண்ணானது தாவரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியதாகும்.

07. கடற்குதிரை என்பது
1. முளையூட்டியின் ஓர் இனமாகும்
2. குதிரையின் இனமாகும்.
3. மீனின் இனமாகும்
4. ஒரு முள்ளந்தண்டிலி ஆகும்.

08. ஒட்சிசன் வாயுவை கண்டுபிடித்த விஞ்ஞானி யார்?
1. போயில் 2. டோல்ரன் 3. பர்சீலியஸ் 4. லவொய்சியர்

09. பின்வரும் விலங்குகளிடையே இலங்கைக்கே உரித்தான விலங்காக அமையாதது எது?
1. நீலப்புள் 2. பச்சைப் புடையன் 3. திலாப்பியா 4. சருகுமான.

10. 1955ம் ஆண்டின் வில்பத்து சரணாலயத்தில் வாழ்ந்த மான்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 550 எனின், அம்மான்களின் கூட்டத்திற்கு வழங்கும் மிகப் பொருத்தமான பெயர் எது?
1. இனம் 2. குடித்தொகை 3. சாகியம் 4. சூழல் தொகுதி

11. மனித உடல் குளிர்ச்சி அடைவதற்கு ஏதுவான உடற்றொழிலியல் முறை எது?
1. குளிர் நீரில் குளித்தல்
2. குளிர் நீரைப் பருகுதல்
3. சிறிதளவு உணவு உட்கொள்ளல்
4. தோலின் மேற்பரப்பில் இருந்து அதிகளவு வியர்வை வெளியேறல்

12. தூண்டல் கிடைக்கப்பெறும் திசையை நோக்கி ஏதேனும் தாவரப் பகுதி வளைகின்றது எனின், அவ்வசைவு
1. முன்னிலை அசைவு என அழைக்கப்படும்
2. திருப்ப அசைவு என அழைக்கப்படும்
3. உறக்க அசைவு என அழைக்கப்படும்
4. இரசனை அசைவு என அழைக்கப்படும்

## பாடம் : வரலாறு

01. தீபவம்சம், மகாவம்சம் ஆகிய வரலாறு நூல்கள் தொடர்பான சரியான கூற்றினை பின்வருவன வற்றிலிருந்து தெரிவு செய்க.
1. மகாவம்சத்தின் இறுதிப் பாகமே தீபவம்சம்
2. தீபவம்சத்தின் தொடர்ச்சியாக அமைந்துள்ளதே மகாவம்சம்
3. சூளவம்சம் என்ற நூலின் மூன்றாம், நாலாம் பாகங்களே இவ்விரு நூல்களும்.
4. தீபவம்சமும், மகாவம்சமும் காஷ்மீர் நாட்டு வரலாற்றை கூறும் இராஜதரங்கனி என்ற நூலிற்கு அடித்தளம் இட்ட நூல்களாகும்.

02. புராதன இலங்கைத் தலைநகரங்களில் யாப்பகூவ இராசதானி தொடர்பான கூற்றுக்களுள் சரியான கூற்று?
1. புராதன இலங்கையின் மூன்றாவது தலைநகரம்
2. இயற்கை பாதுகாப்பு நிலவிய இராசதானி
3. மாகனின் படையெடுப்பால் அதிகமான வீழ்ச்சியினை எதிர்நோக்கிய இராசதானி
4. 1ம் விஜயபாகுவின் பிரதான தலைமையகம் இந்த இராசதானியிலே உருவாக்கப்பட்டது.

03. போர்த்துக் கேயர்கள் இலங்கைக்கு வருகை தந்த ஆண்டினையும் வந்திறங்கிய இடத்தினையும் முறையே கொண்ட விடை எது?
1. 1555, காலி 2. 1505, மட்டக்களப்பு
3. 1505, காலி 3. 1560, திருகோணமலை

04. அலாவுதீன் கல்ஜி அரசனானவன் பின்வருவனவற்றுள் எந்தப் பேரரசு வம்சத்தைச் சேர்ந்தவன்
1. மௌரிய 2. பஹமனி
3. விஜயநகர 4. டில்லி சுல்தான்

05. 6000 வருடம் மனித வரலாற்றைக் கூறும் மிகப் பிரமாண்டமான வரலாற்றைக் கற்றல் என்ற நூலினை ஆக்கியவர்?
1. நுர்.கார் 2. ஸ்ரொஸ்கி
3. அர்னால்ட் றொயின்பி 4. ஹெரடோரஸ்

06. இந்தியாவில் உருவான 16 குடியேற்றங்களில் சூரசேன, அங்கதம், வஜ்ஜி ஆகியவற்றின் தலைநகரங்களை காட்டும் விடைத் தொகுதி எது?
1. தக்ஷில, மதுரை, சம்பா
2. மதுரை, சம்பா, உஜெனி
3. மதுரை, சம்பா, வைஷாலி
4. தக்ஷில, சம்பா, மதுரை

07. ஐரோப்பிய மானிய முறை சமுதாயத்தில் போர் சேவையை தமது முக்கிய தொழிலாக கொண்டிருந்த குடிப்பிரிவு?
1. பிரபுக்கள் 2. பண்ணை அடிமைகள்
3. அரசன் 4. சுதந்திர பிரஜைகள்

08. லூயி மன்னர்களின் சர்வாதிகாரம் நிகழ்ந்த நாடானது எது?
1. ஜேர்மனி 2. பிரான்ஸ்
3. போலந்து 4. ரஷ்யா

09. பாண்டிச்சேரியில் பிரான்சிய ஏகாதிபத்திய நிர்வாகம் நடைபெறுவதற்கு காரணமானவன்?
1. அன்ரூஸ் 2. பபேஜ்
3. தமிழ் நாடு 4. ஒரிசா

## Grammar

Ex. 01 : ***Read the situations and make sentenses from the words in brackets.***

1. I was very tired when I arrived home.
(I/ work/ hard all day) ..........................................

2. The two boys came into the house. They had a football and they were both very tired.
(they/ play/ football) ..........................................

3. There was nobody in the room but there was a smell of cigarettes.
(somebody/ smoke/ in the room) ..................................

4. Ann woke up in the middle of the might. She was frightened and didn't know where she was.
(She/ dream) ..........................................

5. When I got home, Mike was sitting in front of the T.V. He had just turned it off.

Ex 02 :
***Write a note.***
Yesterday on your way home you met your teacher who was your class teacher last year. She invited you and a classmate of yours to visit her home during the new year. Convey this information to your friend.
Between 25 - 30 words only

ஆசிரியர் : அகிலன்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு முரசு

## பிரீமியர் லீக் - 2014

புத்தளம் ட்ரகன்ஸ் கிரிக்கட் கழகத்தின் ஏற்பாட்டில், பிரிமியர் லீக்- 2014 விருது வழங்கும் நிகழ்வு புத்தளம் பொது நூலக கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை (08) இரவு இடம்பெற்றது. அண்மைய காலமாக உள்ளூர் மற்றும் தேசிய ரீதியாக பிரகாசித்து வரும் ட்ரகன்ஸ் அணியின் வீரர்கள் இந்நிகழ்வின் போது விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக புத்தளம் நகர முதல்வர் கே.ஏ. பாயிஸ் கலந்து சிறப்பித்ததோடு அணியின் வீரர்களை கௌரவிக்கும் வகையில் 12 துவிச்சக்கர வண்டிகளையும் வழங்கி வைத்தார்.



## உள்ளூர் விளையாட்டு செய்திகள்

### காற்பந்தாட்ட வெற்றிக்கிண்ண தொடர் ஆரம்பம்

வடமாகாண ஆளுநர் வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்ட சுற்றுப்போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி முதல் ஆரம்பமாக உள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, புதன்கிழமை (10) தெரிவித்தார். யாழ்.பொது நூலகத்தில் புதன்கிழமை (10) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்த சுற்றுப்போட்டி, எதிர்வரும் 26ஆம் திகதியிலிருந்து 30ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதுடன், இறுதிப்போட்டி ஜனவரி மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது. ஆரம்பம் மற்றும் இறுதிப்போட்டிகள் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்திலும், மிகுதி போட்டிகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, பாடும்மீன், சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகங்களின் மைதானங்களில் நடைபெறவுள்ளது.

வடமாகாணத்திலுள்ள 9 லீக்குகளையும் சேர்ந்த 18 அணிகள் பங்குபற்றவுள்ள இந்த சுற்றுப்போட்டியில் முதலிடம் பெறும் அணிக்கு 1 இலட்சம் ரூபாயும், இரண்டாம் இடம்பெறும் அணிக்கு 50 ஆயிரம் ரூபாயும் பரிசில் தொகையாக வழங்கப்படவுள்ளது. அத்துடன், அதிக கோல் அடிக்கும் வீரர், சிறந்த கோல் காப்பாளர் ஆகியோர்களுக்கான விருதுகளும் வழங்கப்படவுள்ளதாக ஆளுநர் கூறினார்.



## சமபோஷவின் ஏற்பாட்டில் உதைப்பந்தாட்டம்

தொடர்ந்து 6ஆவது ஆண்டாக சமபோ' அனுசரணையில் இடம்பெற்ற பாடசாலைகளுக்கிடையேயான 15 வயதிற்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டப் போட்டித்தொடரில் காலி கன்னங்கர மகா வித்தியாலயம் மற்றும் குருநாகல் மலியதேவ பெண்கள் வித்தியாலயம் ஆகியன சம்பியன் பட்டத்தை சுவீகரித்தன. இந்த போட்டியை இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனம் மற்றும் இலங்கை பாடசாலைகள் உதைப்பந்தாட்ட சங்கம் இணைந்து ஒழுங்கு செய்திருந்தன.

இப் போட்டிகளில் தொடர்ந்து 4ஆவது ஆண்டாக பெண்கள் பிரிவில் குருநாகல் மலியதேவ பெண்கள் வித்தியாலயமும், ஆண்கள் பிரிவில் காலி சி.டபிள்யு. டபிள்யு. கன்னங்கர மகா வித்தியாலயமும் சம்பியன் பட்டத்தை வென்றெடுத்தன.




## சங்ககார தொடர் வெற்றிக்களிப்பில்

இலங்கை அணியின் நட்சத்திர ஆட்டக்காரராக இருக்கும் சங்கக்காரா, களமிறங்கிய அனைத்து போட்டிகளிலும் தன் அசத்தல் திறமையை காட்டி வருகிறார். பல சாதனைகளையும் குவித்து வருகிறார்.

இங்கிலாந்து அணிக்கு எதிரான 3வது ஒருநாள் போட்டியில் 3000 ஓட்டங்கள் என்ற மைல்கல்லை எட்டிய சங்கக்காரா, அடுத்து இந்திய அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சினின் அதிக அரைச்சதம் என்ற சாதனையை முறியடிக்க காத்திருக்கிறார். 452 இன்னிங்ஸில் விளையாடியுள்ள சச்சின் 96 அரைச்சதம் அடித்துள்ளார். ஆனால் 386 இன்னிங்ஸ் விளையாடியுள்ள சங்கக்காரா இப்போழுதே 89 அரைச்சதம் கடந்து விட்டார்.




## ஜெயவர்த்தனே வின் சதம் வீணானது



இந்தியா மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையே 09.12.2014 அன்று நடைபெற்ற 3வது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி தொடரை வென்றது.

ஐதராபாத் நகரில் நடைபெற்ற 3வது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் டாஸ் வென்ற இலங்கை அணி முதலில் பேட்டிங் செய்ய தீர்மானித்தது. முதல் ஓவரிலேயே இலங்கை அணி பெராரே விக்கெட்டை இழந்து தடுமாறிய போதிலும், ஜெயவர்தனேவின் அதிரடி ஆட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 242 ரன்கள் எடுத்தது. ஜெயவர்த்தனே 118 ரன்கள் எடுத்தார். இருப்பினும் இலங்கை அணியினால் வெற்றியைப் பெற முடியாமல் போனது.

## செஸ் சம்பியன் தொடர்ந்து 6முறை

இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த், மற்றும் நார்வே நாட்டின் கார்ல்சன் இடையிலான உலக சாம்பியன் செஸ் போட்டி எட்டு சுற்றுகளை முடித்த பின்னர் தற்போது 9-வது சுற்று ஆட்டம் 19.11.2014 நடந்தது. இந்த ஆட்டத்தை மிகவும் போராடி விஸ்வநாதன் ஆனந்த் டிரா செய்தார்.

தற்போதைய சாம்பியனான மாக்னஸ் கார்ல்சென் அவர்களும் 5 முறை சாம்பியன் பட்டத்தை வென்ற விஸ்வநாதன் ஆனந்த் அவர்களும் மோதும் உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டி ரியாவில் உள்ள சோச்சி நகரில் நடைபெற்று வருகிறது. மொத்தம் 12 சுற்றுகளை கொண்ட இந்தப்போட்டியில் இதுவரை நடந்து முடிந்துள்ள 8 சுற்று ஆட்டங்களில் கார்ல்சென் 2 ஆட்டங்களிலும், ஆனந்த் 1 ஆட்டத்திலும் வெற்றி பெற்றுள்ளனர். மீதி 5 ஆட்டம் டிராவில் முடிந்தன.



## தடை நீக்கியது ஐ.சி.சி



இந்த ஆண்டு இலங்கை அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்தது. அப்போது அந்த அணியின் சுழற்பந்து வீச்சாளர் சேனநாயகே பந்துவீச்சு விதிமுறையை மீறுவதாக இருக்கிறது என்று நடுவர்கள் புகார் தெரிவித்தனர். இதனைத்தொடர்ந்து அவருக்கு ஐ.சி.சி. தடை விதித்தது. இதேபோல், நியூசிலாந்தின் முன்னணி துடுப்பாட்டக்காரர் வில்லியம்சன், எப்போதாவது பகுதி நேரமாக பந்து வீசுவார். இவரது பந்து வீச்சிலும் சந்தேகம் இருந்ததால் ஐ.சி.சி தடைவிதித்தது. தற்போது அவர்கள் பந்து வீச்சில் மாற்றம் செய்து கொண்டதால், அவர்கள் மீதான தடையை நீக்கி ஐ.சி.சி. உத்தரவிட்டுள்ளது. இதனால் அவர்கள் இனி சர்வதேச போட்டிகளில் பந்து வீசலாம்.

## சாதனை என்றால் விராட்

இந்திய அணிக்கு அடிலெய்ட் டெஸ்டில் கோஹ்லி கப்டன் பொறுப்பேற்றார். இவர் களமிறங்கிய முதல் இனிங்ஸில் 115 ஓட்டங்கள் எடுத்தார். இதையடுத்து கப்டனாக களமிறங்கிய முதல் இனிங்ஸிலேயே சதமடித்த மூன்றாவது இந்தியர் என்ற பெருமை பெற்றார் கோஹ்லி. இதற்கு முன் விஜய் ஹசாரே (164 எதிர்இங்கிலாந்து 1951), கவாஸ்கர் (116, நியூஸிலாந்து 1976) இம்மைல்கல்லை எட்டியிருந்தனர். தவிர கப்டனாக அறிமுகமான டெஸ்டின் இரண்டாவது இனிங்ஸில் வெங்சர்க்கார் (102, மேற்கிந்தியா, 1987) சதமடித்துள்ளார். இதையடுத்து ஹசாரே, கவாஸ்கர், வெங்சர்க்காருக்கு அடுத்து அறிமுக டெஸ்டில் சதமடித்த நான்காவது கப்டனாகினார் கோஹ்லி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 10

01. பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

கந்தசாமி வீடு ஒன்றைக் கட்ட விரும்பினார். அவரது நண்பர்கள் தோல் கொடுக்க முன்வந்தனர். அவர் முகம் மலர்ந்தார். உடனடியாகவே வீடு கட்டுவதற்கான வேலைகளை ஆரம்பிக்க எண்ணினார். அவர் வீடு கட்டப் போவதை அறிந்த சிலர் வயிற்றெரிச்சல் அடைந்தனர். அதனைப் பொருட்படுத்தாமல் முன்னுக்கு வருதலே சிறந்தது என்று நண்பர்கள் ஆலொசனை கூறினர்.

1. கந்தசாமி யாது செய்ய விரும்பினார்? ..........................................

2. அவரது நண்பர்கள் எதற்காக முன்வந்தனர்? ..........................................

3. எண்ணினார் என்ற சொல்லின் கருத்து யாது? ..........................................

4. முகம் மலர்தல் என்ற மரபுத் தொடரின் கருத்தினை எழுதுக. ..............................

02. கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை அளிக்குக.

இந்த உலகில் நீங்கள்
இயற்றும் தொண்டில் எல்லாம்
தந்தை தாயைப் பேணும்
தர்மம் ஒன்றே பெரியது

கன்றை நினைத்தே உள்ளம்
கசியும் பசுவைப் போல
நன்றி புரிந்தோர் தம்மை
நாமும் நினைக்க வேண்டும்

பருவம் பார்த்து நாங்கள்
பயிரைச் செய்தல் போல
கருமம் தொடங்கும் போது
காலம் பார்க்க வேண்டும்

1. அறம் என்ற கருத்தைத் தரும் சொல் எது? ..........................................

2. தொண்டுகளில் பெரியது என்று கவிஞர் கருதுவது எதனை? ....................

3. உள்ளம் கசிதல் என்பதன் பொருள் யாது? ..........................................

4. நாம் நினைத்தோம் என்பதனை ஒருமையில் மாற்றி எழுதுக. .............

5. தந்தை, தாயைக் குறிக்கும் ஒரு சொல்லை எழுதுக. ..........................

6. பசுவின் இளமைப் பெயர் யாது? ..........................................

7. இப்பாடலில் இடம்பெறும் உயர்திணை பெண்பாற் பெயர்ச்சொல் யாது? ...........

8. இங்கு இடம்பெறும் முன்னிலை பன்மைப் பெயர்ச் சொல்லை எழுதுக. .............

9. கவிஞர் கன்றை யாருக்கு ஒப்பிடுகின்றார்? ..........................................

10. பருவம் பார்த்து கயிர் செய்தல் என்ற கருத்தைத் தரும் பழமொழி எது? ....................

03. சதுவிடம் உள்ள பணத்தை விட நான்கு மடங்கு பணம் குரவிடம் உள்ளது. சதுவுக்கு ரூபா 150 கொடுத்தால் இருவரிடமும் உள்ள பணத்தொகை சமமாகும். இப்போது இருவரிடமும் உள்ள பணத்தொகை எவ்வளவு?

04. 1கி.கி தேயிலையின் விலை ரூபா 300உம், 1கி.கி சீனியின் விலை ரூபா 70 உம் ஆகம். 250கிராம் தேயிலையும், 500 கிராம் சீனியும் வாங்க எவ்வளவு பணம் தேவை?

05. பின்வரும் விபரத்தை வாசித்து விடை தருக.

| | |
|---|---|
| 1 கி.கி மாசியும், 500 கி பருப்பும் | ரூபா 175 |
| 1 கி.கி மாசியும், 400 கி சீனியும் | ரூபா 555 |
| 500கிராம் பருப்பும், 1கி.கி தேயிலையும் | ரூபா 220 |
| 1கி.கி மாசியின் விலை | ரூபா 35 |

அ. 1 கி.கிராம் தேயிலையின் விலை என்ன? ..........................................

ஆ. 800 கிராம் சீனியின் விலை என்ன? ..........................................

இ. 1 கி.கிராம் பருப்பின் விலை என்ன? ..........................................

ஈ. 1 கி.கிராம் தேயிலை, 1 கி.கிராம் பருப்பு, 1 கி.கி சீனி மற்றும் 1 கி.கிராம் மாசியினை வாங்குவதற்கு தேவையான பணம் எவ்வளவு?

06. ஒரு தெருவில் 21 மின்கம்பங்கள் நடப்பட்டுள்ளன. இரு மின்கம்பங்களுக்கிடையிலான தூரம் 15மீ. எனின், முதல் மின் கம்பத்திற்கும் கடைசி மின் கம்பத்திற்கும் இடையிலான தூரம் எவ்வளவு?

07. ஒருவர் அமெரிக்க நாட்டில் பணிபுரிகிறார். இவருக்கான மாதச் சம்பளம் 800 அமெரிக்க டொலர்களாகும். அமெரிக்க டொலர் ஒன்றின் இலங்கைப் பெறுமானம் ரூபா 120 எனில், இலங்கை நாணயத்தின் படி அவரது மாதச் சம்பளம் எவ்வளவு?

08. தயா தனது வீட்டிலிருந்து வடக்கு நோக்கி சிறிது தூரம் சென்ற பின் வலது கைப்பக்கம் திரும்பி சிறிது தூரம் சென்றான். பின்பு வலது கைப்பக்கம் திரும்பி சிறிது தூரம் சென்றான். மீண்டும் வலது கைப்பக்கம் திரும்பி சிறிது தூரம் சென்றபின் இறுதியில் இடது கைப்பக்கம் திரும்பினான்.

அ. இப்போது தயா எந்தத் திவையை நோக்கி நிற்கிறான்?

ஆ. அவன் சென்ற பாதையின் பரும்படிப் படத்தைத் தருக.

## சிறுவர் முரசு



குட்டிக்கதை

### செய்வன அறிந்து செய்

ஒரு நாள் ஒருவன் அவன் வீட்டுப் பரணைச் சுத்தம் செய்து கொண்டிருந்தான். அப்போது அதுவரை அவன் கவனித்திராத ஒரு புத்தகத்தைக் கண்டெடுத்தான்.

அது ஒரு மிகப் பழைய புத்தகம். பக்கங்கள் மஞ்சள் படிந்து மடித்துப் போயிருந்தன. பக்கங்களைத் திருப்புகையில் மிகக் கவனம் தேவையிருந்தது. இல்லாவிட்டால் பக்கங்கள் உதிரத் தொடங்கின.

அவன் அந்தப் புத்தகம் மந்திர மாயங்களைப் பற்றியது என்று அறிந்து கொண்டான். எத்தனையோ முறை படிக்க முயன்றும் அவன் ஒரே ஒரு பத்தியில் உள்ள கருத்தை மட்டும் தெரிந்து கொள்ள முடிந்தது. மற்றவை அவனுக்குப் புரியவில்லை.


அந்தப் பத்தியில் கருங்கடற் கரையில் கிடக்கும் மாய சக்தி மிக்க ஒரு கறுப்புக் கூழாங்கல்லைப் பற்றிச் சொல்லப்பட்டிருந்தது. அந்தக் கல்லால் எதைத் தொட்டாலும் அதைத் தங்கமாக மாற்றி விடுமாம். அந்தக் கல்லை எப்படிக் கண்டு கொள்வது என்றும் அந்தப் புத்தகத்தில் சொல்லப் பட்டிருந்தது. தொட்டுப் பார்த்தால் மற்ற கற்கள் எல்லாம் பனிக் கட்டி போல் குளிராய் இருக்க, அந்தக் கல் மட்டும் வெதுவெதுப்பாய் இருக்குமாம்.

இதைத் தெரிந்து கொண்ட மனிதனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. கருங்கடல் கரை நோக்கி உடனே புறப்பட்டான். அங்கு தினமும் காலையிலிருந்து மாலை வரை அவன் ஒவ்வொரு கல்லாய் தொட்டுப் பார்த்துத் தேடத் துவங்கினான். கடற்கரையில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை கருங்கூழாங்கற்கள் கிடந்தன. அவனுக்கு ஒரு முறை சோதித்த கல்லை மறுபடி மறுபடி சோதிக்காமல் இருக்க வேண்டுமே என்ற கவலை வந்து விட்டது. சோதித்த கல்லைக் கடலுக்குள் உடனே எறிந்து விட்டால் குழப்பம் வராது என்று யோசித்து, அதன்படியே ஒவ்வொன்றாகக் கற்களைக் கடலுக்குள் எறிந்தான்.

பல மாதங்களும் வருடங்களும் கடந்து போயின. கல்லும் கிடைக்கவில்லை, அவனும் விடுவதாய் இல்லை. கற்களைத் தொட்டுப் பார்த்து கடலுக்குள் எறியும் பணி அவனுக்கு அனிச்சைச் செயல் போல் ஆகி விட்டது.

ஒரு நாள் மாலை, மிகுந்த தேடலுக்குப் பிறகு களைத்துப் போய் கடற்கரையை விட்டுச் செல்லும் போது ஒரு கறுப்புக் கூழாங்கல் அவன் கண்ணில் பட்டது. அதைக் கையில் எடுத்தான். அது வெதுவெதுப்பாய் இருந்தது. ஆனால், பல வருடப் பழக்கத்தால், எப்பொழுதும் போல் அதையும் யோசிக்குமுன் கடலில் தூர எறிந்து விட்டான்.

- - செய்யும் காரியத்தை நன்கறிந்து செய்தல் வேண்டும் - -



செ. லக்ஷாயினி
அல்லைத்தோட்டம்

### சிந்திக்க .. ..

ஒரு பறவை
உயிருடனிருக்கும்
போது எறும்பை
சாப்பிடுகிறது

பறவை இறந்த போது
எறும்பு தின்கிறது

நேரமும் சூழ்நிலையும்
எந்த நேரமும் மாறலாம்



மா. பவிசனா
திருகோணமலை

### மனமெனும் வயல்

அறம் என்ற வரம்பிட்டு
அறிவு என்ற ஏர் உழுது

அன்பெனும் விதை தூவி
நேர்மை என்ற நீர் பாய்ச்சி

கயமை என்ற கலை அகற்றி
உண்மையெனும் உரமிட்டு
கடமையெனும் காவலிட்டு

பண்பெனும் பயிர் வளர்த்து
மனவயலிலே அளவில்லா
ஆனந்தத்தை அறுவடை செய்வாய்



ஜே. ரிஹ்ஷயா
...யாலயம் தமிழ் ம. வித்தியாலயம்

### அழகு தான்

அழகு அழகு தான் - எங்கள்
ஈழம் அழகுதான்!
பழகப் பழகவே - மீண்டும்
பார்க்கத் தூண்டுமாம்!

கடலும் அழகுதாம் - காணும்
கரையும் அழகுதான்!
படகின் ஆட்டமும் - பாயும்
மீனும் அழகுதான்!

வயலும் அழகுதான் - கட்டு
வரம்பும் அழகுதான்!
பயிரும் அழகுதான் - நெல்லும்
பதரும் அழகுதான்!

மலையும் அழகுதான் - முகிலின்
மறைப்பும் அழகுதான்!
குலையும் அழகுதான் - கொக்கோ
கோப்பி அழகுதான்!

காடும் அழகு தான் - அருவிக்
காட்சி அழகுதான்!
மேடும் அழகுதான் - பள்ளம்
மிகவும் அழகடா!

தாமரைத்தீவான்
(ஈச்சந்தீவு. கிண்ணியா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனல் மின் அறிக்கை....

கையளிக்கப்பட்டிருக்கின்றது.

கையளிக்கப்பட்டுள்ள இந்த அறிக்கையின் படி சூழலுக்கு இழைக்கப்படவுள்ள தாக்கங்கள் தொடர்பான மேலதிக முன்மொழிவுகளை இலங்கையின் மின்சார சபையும், இந்தியத் தேர்மல் கோப்பரேசனும் தனித்தனியாக சமர்ப்பிக்க முடியும் என மின்சபை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

512 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியில் உருவாகவுள்ள இந்த அனல் மின்நிலையப் பணிகளின் அமுலாக்கத்திற்கு, இந்திய இலங்கைக் கூட்டு முயற்சியின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள ரிங்கோமலி பவர் கம்பனி லிமிட்டெட் பொறுப்பாகவுள்ளது.

இரண்டு 250 மெகா வோற்றுக்களைப் பிறப்பிக்கக்கூடிய மின்பிறப்பாக்கிகளைக் கொண்டு இயங்கவுள்ள சம்பூர் மின்நிலையமானது தேசிய மின்சார வலைப்பின்னலுக்கு தான் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை வழங்கவுள்ளது.

இவ்வழக்கல் சம்பூரிலிருந்து ஹபரணையூடாக வெயாங்கொடையிலுள்ள மின் உபநிலையத்திற்கு வழங்கப்பட்டு தேசிய மின் வலைப்பின்னலுடன் சேர்க்கப்படவுள்ளது.

2017ம் ஆண்டிற்கு முன் தனது பணிகளை ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்பட்டுள்ள இம்மின்நிலையப் பணிகள் தொடர்பான பல ஒப்பந்தங்கள் 2013ம் ஆண்டின் ஒக்டோபர் மாதம் கையெழுத்திடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தனி மாவட்டம்...

திட்டத்தை உடனடியாக இரத்துச் செய்யுமாறு இராணுவத் தளபதி, கிழக்கு மாகாணத்துக்கான இராணுவ கட்டளைத் தளபதிக்கும் இதன்போது உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

திருகோணமலை, கரிமலையூற்று பள்ளிவாசலை மக்கள் பாவனைக்கு அனுமதிக்குமாறும், அந்த பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பாஸ் முறையை உடனடியாக நீக்கிவிடுமாறும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மக்களுக்குச் சொந்தமான இரண்டு கரைவலைபாடுகளையும் அவற்றிற்கு உரியவர்களிடத்தில் உடனடியாக ஒப்படைத்து விடுமாறும் கிழக்கு மாகாண இராணுவ கட்டளை தளபதிக்கு உத்தரவிடப்பட்டது.

தோப்பூர், செல்வநகர் காணி சம்பந்தமான பிரச்சினை முஸ்லிம் காங்கிரஸ் குழுவினரால் முன்வைக்கப்பட்ட பொழுது அதனை உடனடியாக தீர்த்து வைக்குமாறு மாவட்ட செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் பல வருடங்களுக்கு முன் நிர்மாணிக்கப்பட்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கையளிக்கப்படாமல் தடுத்து நிறுத்தப்பட்டுள்ள நுரைச்சோலை வீட்டுத் திட்டம், ஆலிம்சேனை காணிப்பிரச்சினை, சம்மாந்துறை - வளத்தாப்பிட்டி விவசாய நிலம் தொடர்பான பிரச்சினை என்பவற்றுக்கும் ஏனைய சில பிரதேசங்களில் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் நிர்வாக பிரச்சினைகளுக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சின் செயலாளர் ஆகியோர் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ஹக்கீம் தலைமையிலான குழுவினருடன் நடாத்தவுள்ள கலந்துரையாடலின் போது, உரிய தீர்வு காணப்படும் என தெரிவிக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமை இராணுவத்தினரால் ஆண்டியா புளியங்குளத்தில் வேலியடித்து வேறாக்கப்பட்ட காணியை பாடசாலைக்கு வழங்கிவிடுமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது' என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கிழக்கில்....

உட்பட்ட விடயங்கள் சம்பந்தமாக அதிகாரிகளின் தீர்மானங்கள் அதிகார துஸ்பிரயோகம் வாய்ந்ததா அல்லது அதிகார வரம்பெல்லைகளை மீறியதா என்று விசாரணை செய்யும் அதிகாரம் கிழக்கு மாகாண மேல் நீதிமன்றான கல்முனை மேல்நீதிமன்றுக்கு உண்டு என்று தீர்ப்பளித்துள்ளார்.

மேலும் அண்மையில் தீர்ப்பளிக்கப்பட்ட "சோலைமுத்து ராசு" என்ற உயர் நீதிமன்ற தீர்ப்பில் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் வழங்கிய தீர்ப்பைச் சுட்டிக்காட்டிய நீதிபதி இளஞ்செழியன், குறிக்கப்பட்ட மாகாணத்திற்குள் இருக்கின்ற நபர் மாகாண சபை நியதிச்சட்ட, மாகாண சபை அதிகார எல்லைக்குள் அதிகாரம் பாவிக்கப்படும் நபர்கள் சம்பந்தமாக மாகாண மேல்நீதிமன்றுக்கு பிரிவு 154 அரசியலமைப்பு சட்டத்தின் கீழ் அதிகாரம் உண்டு எனத் தீர்ப்பளித்ததை சுட்டிக்காட்டிய நீதிபதி இளஞ்செழியன், கிழக்கு மாகாண சபை, ஆளுநர், பிரதம செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர்கள், உட்பட கிழக்கு மாகாண சபை நடவடிக்கைகள் அதிகார துஸ்பிரயோகம் கொண்டவையா மற்றும் அதிகார வரம்பெல்லையை மீறியுள்ளனவா என்பன சமபந்தமாக விசாரணை செய்யும் அதிகாரம் கிழக்கு மாகாண மேல்நீதிமன்றமான கல்முனை நீதிமன்றுக்கு உண்டு எனத் தனது தீர்ப்பில் கூறியுள்ளதுடன் கிழக்கு மாகாண சபை அதிகார வரம்பெல்லைக்குட்பட்ட விடயங்கள் சம்பந்தமாக கிழக்கு மாகாண அதிகாரிகளால் பிறப்பிக்கப்படுகின்ற தீர்மானங்களுக்கெதிராக பாதிக்கப்பட்ட அரச சேவையாளர்கள் கிழக்கு மாகாண மேல்நீதிமன்றில் ஆணை வழக்கு தாக்கல் செய்வதற்கு கிழக்கு மாகாண மேல்நீதிமன்றமான கல்முனை மேல்நீதிமன்றுக்கு நியாயாதிக்கம் உண்டு எனவும் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் ஒருவர் தனக்கு வழங்கப்பட்ட இடமாற்றமானது நியாயமற்றது எனத் தெரிவித்துத் தொடர்ந்த வழக்கை விசாரிக்கும் அதிகாரம் கிழக்கின் மேல் நீதிமன்றுக்கு இல்லை என கிழக்கு மாகாண சபை சார்பில் சட்டத்தரணிகள் மேற்கொண்ட முறைப்பாட்டின் போதே தீர்ப்பளித்த நீதிபதி.எம். இளஞ்செழியன் அம் முறைப்பாட்டைத் தள்ளுபடி செய்ததுடன் குறித்த இடமாற்றத்தையும் இல்லாதொழித்துத் தீர்ப்பளித்துள்ளார்.

## ஜாதிக ஹெல.....

முஸ்லீம் காங்கிரஸ் பங்குகொள்ளமுடியாது என்று கருத்துரைத்ததாக என்மீது வீண்பழி சுமத்தப் பட்டுள்ளது.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அத்தகைய தொனியில் நான் கருத்துரைக்கவில்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பை பற்றி அன்றைய கூட்டத்தில் எந்தவொரு உச்ச பீட உறுப்பினர்களும் பிழையான கருத்துக்கள் எதனையும் முன்வைக்கவில்லை.

தமிழ் தேசிய கூட்டமைப்பானது ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக எதுவித கருத்தையும் முன்வைக்காத போது நாமும் அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுக்கதேவை இல்லை என்பதைதான் கூறினேன். அதனையே சிலர் பிழையாக எனக்கு எதிராகத் திருப்பி விட்டுள்ளனர்.

ஆனால் ஜாதிக ஹெலய உறுமயவிற்கும் பொது வேட்பாளருக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை என்ன என்பதை தெரிந்து கொள்வதற்கு முஸ்லீம் சமூகத்துக்கு தார்மீக பொறுப்புள்ளது.

45 அம்சங்களை உள்ளடங்கிய 19வது அரசியல் சீர் திருத்தம் ஒன்றை பாராளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும் என்று தற்போதைய ஜனாதிபதியிடம் ஜாதிக ஹெலய உறுமய நிபந்தனை வைத்து பேச்சுவார்த்தை நடத்தமுயன்ற போது அந் நிபந்தனையை அரசு ஏற்றுக்கொள்ள மறுத்ததன் விளைவாக அவர்கள் அரசை விட்டு வெளியேறினர்.

அதே நிபந்தனைகளை எதிரணி வேட்பாளர் எதுவித தயக்கமும் இன்றி ஏற்றுக்கொண்டு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

எனவே அவ்வொப்பந்தத்தில் உள்ளவையையிட்டு நான் கவனமெடுக்க வேண்டும் என வற்புறுத்தினேன். ஏனெனில் உறுமய முன்வைத்துள்ள யோசனை என்பது சிறுபான்மை சமூகத்தின் அரசியல் முதுகெலும்பை உடைத்து எறியக்கூடிய அம்சங்களும் உள்ளடங்கப்பட்டுள்ளன என்பதாலேயே என்றார் அவர்.

## கோடிக் கணக்கான...

களமிறக்கப்பட்டுள்ளது.

குறித்த விசாரணை அணி, மோசடியுடன் சம்பந்தப்பட்ட பலரது சொத்துக்கள் மற்றும் வங்கிக் கணக்குகளைப் பரிசீலித்துவரும் போதே கோடிக்கணக்கான பணம் குறித்த பெண் அலுவலரின் கணக்கில் வைப்பிலிடப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது எனத் தெரிகின்றது.

இதனையடுத்து தம்பலகாமம் பிரதேசத்தில் விசாரணைகள் சில முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் மோசடியுடன் சம்பந்தப்பட்ட மேலும் பலரைத் தேடி வலைவிரிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகின்றது.

மோசடியுடன் நேரடியாகத் தொடர்புபட்டவர்கள் சிலர் குற்றப் புலனாய்வுத் திணைக்கள விசாரணைகளுக்கு முகம் கொடுத்துள்ளதாகவும் விசாரணைகளுக்காக அவர்கள் கொழும்பிற்குக் கொண்டு செல்லப்பட்டிருப்பதாகவும் நம்பகமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சீனன்குடா...

வைத்து குறிப்பிட்டார்.

இந்தநிலையில், தாம் தேர்தல்கள் ஆணையாளருக்கு இது தொடர்பான முறைப்பாட்டை செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

## சிவில் சமூகச்....

கண்டறியப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ள தமிழ் சிவில் சமூக அமைப்பினர் மூதூர் காவல்துறையினர் இவ்விடயம் தொடர்பாகச் சரியானதொரு விசாரணையை முன்னெடுக்க வேண்டும் என்பதையும் அவ்வாறானதொரு விசாரணையை முன்னெடுக்க சிரேட்ட காவல்துறை அத்தியட்சகர் அறிவுறுத்த வேண்டும் எனவும் கோரியுள்ளது.

## பெப்ரவரி 02 வரை.....

முன்னெடுத்திருந்தனர்.

அத்துடன் திருகோணமலை நகர முதல்வரால் நபரொருவருக்கு கங்காணிப்பதவியொன்று வழங்க முயற்சிகள் நடப்பதாகவும் அவரைவிட பணிமூப்பிலுள்ள பலர் அந்நியமனத்திற்குத் தகுதியுடையவர்களாக இருந்தும் அவர்களைப் புறக்கணித்து இந் நியமனம் வழங்க முயற்சிகள் நடப்பதாகவும் தொழிற்சங்கப் போரில் ஈடுபட்டவர்கள் மலைமுரசிற்குத் தெரிவித்தனர்.

தற்போதுவரை நகரசபை மற்றும் பிரதேச சபைகளில் பணியாற்றும் சுகாதாரத் தொழிலாளர்களின் தரங்கள் நிறுவப்படவில்லை எனத் தெரிவித்த அவர்கள் அத்தரங்களை நிறுவவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

இக் கோரிக்கைகளுக்கு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பெப்ரவரி 2ம் திகதிவரை கால அவகாசத்தைக் கிழக்கு மாகாண சபை கேட்டுக்கொண்டுள்ளதை அடுத்து அமைதிப் பேரணியிலுள்ளவர்கள் கலைந்து சென்றுள்ளனர்.

அதேவேளை இவ்விடயங்கள் தொடர்பான அறிக்கையொன்றை மலைமுரசின் மக்கள் குறைகேள் அலுவலகத்திடம் கையளிக்கும் முயற்சியிலும் தொழிலாளர்கள் இறங்கியுள்ளனர்.

## மீரியபொத்த.....

கட்சியின் தலைவருமாகிய திரு.சி.தண்டாயுதபாணி, மாகாண சபை உறுப்பினர்கள் K.நாகேஸ்வரன், .ஜெ.ஜெனார்த்தனன் ஆகியோரும், மூதூர் தொகுதித் தலைவர் க.திருச்செல்வம், சேருவில் தொகுதித் தலைவர் க.சுந்தரலிங்கம் மற்றும் கைலைவாசன் ஆகியோர் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தங்க வைக்கப்பட்டுள்ள மாக்கந்த தேயிலைத் தொழிற்சாலை, பூணாகலை தமிழ் மகாவித்தியாலயம் ஆகியவற்றுக்குச் சென்று திருகோணமலை மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட பணத்தை பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி நிதியாக பெற்றோரை இழந்த 6 மாணவர்களுக்கு தலா 30,000 ரூபாவும் ஏனைய 40 மாணவர்களுக்கு 5,000 ரூபாவும் மேலும் 15 மாணவர்களுக்கு 2,000 ரூபாவும் கொஸ்லந்தை மக்கள் வங்கியில் இம்மாணவர்களுக்கு தனித்தனி வங்கிச் சேமிப்பு கணக்குகள் திறந்து வழங்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பதவி ஆசை

## அண்ணன் எப்ப சாவான்:

## திண்ணை எப்ப காலியாகும்



நபி(ச) அவர்கள் மதீனா வருவதற்கு முன்னர் மதீனா மக்கள் அவ்ஸ்-கஸ்ரஜ் என்ற இரு கோத்திரமாகப் பிரிந்திருந்தனர். அவ்ஸ் கோத்திரத்தின் தலைவராக 'ஸ.ஃ.த் இப்னு முஆத்', ஹஸ்ரஜ் கோத்திரத் தலைவராக 'ஸ.ஃ.த் இப்னு உபாதா' இருந்தார்கள். நபி(ச) அவர்கள் முக்கிய விடயங்கள் குறித்து முடிவெடுக்கும் போது இவர்களிடம் ஆலோசனை பெறுவார்கள். நபி(ச) அவர்கள் மரணித்த போது இவ்விருவரில் 'ஸ.ஃ.த் இப்னு உப்பாதா' மட்டுமே உயிருடன் இருந்தார்கள். எனவே, நபி(ச) அவர்கள் மதீனா வர முன்னர் தலைவராக இருந்தவர் என்ற அடிப்படையில் அவரைத் தலைவராகத் தெரிவு செய்ய அந்த மக்கள் முற்பட்டனர்.

இது பொதுவான மனித இயல்புதான். மதீனா மண்ணுக்கு மதீனாவைச் சேர்ந்த ஒருவர்தான் தலைவராக வர வேண்டும் என அவர்கள் எதிர்பார்த்தார்கள்.

இதற்கு மக்காவாசிகள் உடன்படாவிட்டால் அன்ஸாரிகளில் ஒரு தலைவர் முஹாஜிர்களில் ஒரு தலைவர் என்று முடிவெடுக்கவும் அவர்கள் விரும்பினர். ஆனால், அபூபக்கர்(வ) அவர்கள் அவர்களுக்கு நிலைமையை விளக்கிய போது ஏகமனதாக அபூபக்கர்(வ) அவர்கள் கலீபாவாகத் தெரிவு செய்யப்பட்டார். அவரின் கிலா.ஃ.பத்தின் போது அன்ஸார்கள் அவருக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு ஒத்துழைத்தனர். "அண்ணன் எப்ப சாவான்? திண்ணை எப்ப காலியாகும்? எனக் காத்துக் கொண்டிருந்தவர்களாக இருந்தால் தமது நீண்டநாள் கனவை இப்படி இலகுவாக விட்டுக் கொடுத்திருப்பார்களா?

அபூபக்கர்(வ) அவர்களின் விளக்கத்தின் பின்னர் முஹாஜிர்களே தலைவர்களாக வர வேண்டும் என்பதை அவர்கள் விளங்கிய பின்னர் மீண்டும் ஒரு முறை நம்மில் ஒருவர் தலைவராக வரவேண்டும் என அவர்கள் எண்ணிக் கூடப் பார்க்கவில்லை.

**அபூபக்கர்(ச) அவர்கள் மக்காவைச் சேர்ந்தவர்கள்:**

உமர்(வ) அவர்களும் மக்காவைச் சேர்ந்தவர்கள். இவ்வாறே உஸ்மான்(வ), அலி(வ), ஹஸன்(வ), முஆவியா(வ), ஸைத்(வ) எனத் தொடராக வந்த அத்தனை கலீபாக்களும் மக்காவைச் சேர்ந்தவர்களாவர். மதீனாவைச் சேர்ந்த எவரும் கலீபாவாக வந்ததே இல்லை.

தொடரும் .. ..



# கிறிஸ்மஸ் ஸ்பெஷல்

## ப்ளோட்டிங் பொடேடோ



### தேவையான பொருட்கள்

உருளைக்கிழங்கு (மீடியம் சைஸ்) - அரை கிலோ. பச்சைப் பட்டாணி - 200 கிராம், உப்பு - தேவைக்கேற்ப, மைதா - 2 டேபிள் ஸ்பூன், எண்ணெய் - பொரித்து எடுக்க அளவாக, தக்காளி - அரை கிலோ, உப்பு - தேவைக்கேற்ப, காரப்பொடி - 1 டீஸ்பூன், சர்க்கரை - 1 சிட்டிகை, வெங்காயம் - 3, பச்சைமிளகாய் - 3, இஞ்சி - 1 துண்டு, கொத்தமல்லி - சிறிது

### செய்முறை

வெங்காயம், பச்சை மிளகாய், இஞ்சி ஆகியவற்றை அரைத்துக் கொள்ளவும், தக்காளிப் பழத்தைச் சூடான நீரில் போட்டு, தோலை உரித்து, மிக்ஸியில் அரைத்து தனியாக வைத்திருக்கவும். உருளைக்கிழங்கை உப்பு போட்டு, பதமாக உடைந்துவிடாமல் வேகவிடவும், வெந்தவுடன் தோல் நீக்கவும், பட்டாணியை சிறிது உப்புப் போட்டு வேகவைக்கவும். மைதாவை சிறிது நீர் சேர்த்து, பேஸ்ட்போல் ஆக்கவும். பிறகு உருளைக்கிழங்கை இரண்டாக வெட்டி, அதன் நடுவே உள்பக்கப் பகுதியை ஒரு ஸ்பூனால் தோண்டி, கிண்ணம் போல செய்துகொள்ளவும்.

பின், துளை செய்த இடத்தில் வேகவைத்த பட்டாணியைக் கொஞ்சம் வைத்து அடைக்கவும். இரண்டு பாகங்களையும் கொஞ்சம் மைதா பேஸ்ட்டை எடுத்துத் தடவிப் பொருத்திவிடவும். அதேபோல், எல்லாக் கிழங்குகளையும் அடைத்து எடுத்துக் கொள்ளவும். ஸ்ட.ஃ.ப் செய்த கிழங்குகளைப் பொன்னிறமாகப் பொரித்து எடுக்கவும்.

அரைத்து எடுத்த மசாலாவை, மிதமான தீயில் வதக்கவும், இதில் தக்காளி விழுதை சேர்க்கவும். அத்துடன் உப்பு, காரப்பொடி, சர்க்கரை சேர்த்துக் கொதிக்கவிட்டு, அடுப்பிலிருந்து இறக்கி விடவும். இதில் பொரித்தெடுத்த உருளைக்கிழங்குகளைச் சேர்க்கவும். பொடியாக அரிந்த கொத்தமல்லித் தழையைத் தூவி அலங்கரித்துப் பரிமாறவும். இது ஒரு சத்தான சைட் டிஃ. சப்பாத்தி, பூரி, பரோட்டாவுக்கு ஏற்றது.

# தலைமுடி நீளமாக இருக்க




பெண்களுக்கு அழகே கூந்தல்தான், அந்த கூந்தல் உதிர்ந்தால் ஏதோ அவர்கள் அழகில் கொஞ்சம் பாதி குறைந்துவிடும்.

- ஐந்து இதழ்கள் கொண்ட செம்பருத்தி பூவை அரைத்து நல்லெண்ணெயில் காய்ச்சி வடிகட்டிய பின் தலைக்குத் தேய்த்தால் தலை முடி அடர்த்தியாக வளரும்.
- செம்பருத்தி இலையை அரைத்து தலையில் தடவி அரைமணி நேரம் ஊறியபின் கூந்தலை சீயக்காய் போட்டு அலசவும். கூந்தல் நன்றாக வளரும். கடுக்காய், செம்பருத்தி பூ, நெல்லிக்காய் ஆகியவைகளை சமஅளவு எடுத்து தேங்காய் எண்ணெயில் காய்ச்சி கூந்தலில் தடவினால் முடி நன்றாக வளரும்.
- முடிசெழித்து வளர வாரத்திற்கு ஒரு முறை வெண்ணெய்யை தலைக்கு தடவி ஒரு மணிநேரம் கழித்து கழுவி வந்தால் முடி நன்றாக வளரும்.




# வயிற்றுக் கோளாறா ???



சாப்பிட்ட உணவு சரியாக செரிமானம் அடையாவிட்டால் வயிற்றில் பலவித பிரச்சனைகள் வரும். வயிற்றில் எரிச்சல் இருந்தால் உணவுக்கு ஒரு மணிநேரத்திற்கு முன்பு இரண்டு டீஸ்பூன் தேன் அருந்த வேண்டும். தொடர்ந்து சில நாட்களுக்கு அருந்தினால் வயிற்றில் ஏற்படும் எரிச்சல், இரைச்சல் ஆகியன குணமாகிவிடும்.

### மிளகுத் தூளுடன் தேன்

ஒரு டீஸ்பூன் மிளகைத் தூள் செய்து மெல்லிய துணியில் சலித்துக் கொள்ள வேண்டும். அதில் அரை டீஸ்பூன் தூள் எடுத்து அதனுடன் தேன் கலந்து உட்கொள்ள வேண்டும்.

### இஞ்சியுடன் தேன்

இஞ்சியை சிறு துண்டுகளாக வெட்டி ஒரு பாத்திரத்தில் போட்டு அடுப்பில் வைத்து சிவக்கும்படி வறுக்க வேண்டும். அதில் ஒரு கப் நீரையும், இரண்டு டீஸ்பூன் தேனையும் கலந்து காய்ச்ச வேண்டும். சுண்டக் காய்ந்ததும் இறக்கி வடிகட்டி அருந்த வேண்டும். இப்படி இருவேளை அருந்தினால் செரிமானம் ஆகாமையால் ஏற்பட்ட வயிற்றுப் போக்கு நின்றுவிடும்.

### அகத்திக் கீரையுடன் தேன்

அகத்திக் கீரையைக் காம்பு நீக்கி ஆய்ந்தெடுத்து ஆவியில் வேகவைக்க வேண்டும். அதை சாறுபிழிந்து எடுத்து அதனுடன் தேன் கலந்து அருந்தினால் எல்லாவித வயிற்றுக் கோளாறுகளும் குணமாகும்.

### பாலுடன் தேன்



சிலருக்கு கை, கால்கள், விரல்கள், மற்றும் உடல் நடுங்க ஆரம்பிக்கும். இவர்கள் தினமும் ஒரு டம்ளர் பாலில் ஒரு டீஸ்பூன் தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் நிச்சயம் குணமாகும். ஒரு மேசைக்கரண்டி தேனை இரவில் படுக்கும் போது உண்டு வந்தால் அடிக்கடி சிறுநீர் கழிக்கும் நிலை மாறும். நரம்புத்தளர்ச்சிக்குத் தேனைவிட சிறந்த மருந்து இல்லை. தேனை துளசி சாறில் கலந்து உபயோகிப்பது சளி தொண்டை வீக்கம், பிராங்டீஸ் எனப்படும் சுவாசத் தொல்லை போன்றவைகளுக்கு மிகவும் நல்லது.

### நெல்லிக்காயுடன் தேன்

நெல்லிக்காய்களைத் துண்டு துண்டாக்கி தேன், ஏலக்காய், ரோஜா இதழ்கள் சேர்த்து இரண்டு நாட்கள் வெயிலில் காயவைக்க வேண்டும். பின்பு 1 டீஸ்பூன் வீதம் காலையும், மாலையும் சாப்பிட்டு வந்தால் வறட்டு இருமல் குணமாகிவிடும். என்றும் இளமையுடன் இருக்க வேண்டுமென விரும்புவோர் தினமும் தேனை அருந்த வேண்டும்.

### வெந்நீருடன் தேன்

1 டம்ளர் வெந்நீரில் 1 டீஸ்பூன் தேன் கலந்து பின்பு அதில் அரை எலுமிச்சைபழ சாற்றையும் சேர்த்து சாப்பிட்டு வந்தால் உடல் எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருக்கும். நுரையீரலில் சேர்ந்துள்ள சளி எல்லாம் கண்காணாத இடத்திற்கு ஓடிவிடும், குடல் மற்றும் வயிற்றுக் கோளாறுகள் நீங்கிவிடும், குளிர்ச்சியால் ஏற்படும் எல்லா வியாதிகளையும் உடல் எதிர்த்து நின்று தடுத்துவிடும்.


### குப்பை மேனியுடன் தேன்

குப்பை மேனி செடியின் வேரை இடித்து கஷாயமாக்க வேண்டும். அக்க'ாயத்தில் 30 மில்லி எடுத்து அதனுடன் சிறிது தேன் கலந்து அருந்தினால் வயிற்று புழுக்கள் வெளியாகும்.




### ஆட்டுப்பாலுடன் தேன்

பத்து கொன்றை மரப்பூக்களை 100 மில்லி பசும்பாலில் இட்டு காய்ச்சி பூ நன்றாக வெந்ததும் வடிகட்டி அதனுடன் 1 டீஸ்பூன் தேன் கலந்து அருந்தலாம். இதனால் வயிற்றுக்கோளாறுகள், வயிற்றுபுண், குடற்புண் ஆகியன குணமாகும். சீதபேதியை குணப்படுத்த 100 மில்லி ஆட்டுபாலை ஒரு டீஸ்பூன் தேன் கலந்து அருந்த வேண்டும்.




**மேஷம்** : எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள்.

**ரிஷபம்** : குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளைப் புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள்.

**மிதுனம்** : இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். ஆடை, ஆபரணம் சேரும்.

**கடகம்** : முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க நேரிடும்.

**சிம்மம்** : நெருங்கியவர்கள் சிலரால் தர்மசங்கடமான சூழ்நிலையை சமாளிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள்.

**கன்னி** : மற்றவர்களுக்காக சில செலவுகளை செய்து பெருமைப்படுவீர்கள்.

**துலாம்** : வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்யோகத்தில் தலைமையின் நம்பிக்கையைப் பெறுவீர்கள்.

**விருச்சிகம்** : விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள்.

**தனுசு** : ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். இதை முதலில் முடிப்பதா, அதை முதலில் முடிப்பதா என்ற ஒரு டென்ஷன் இருக்கும்.

**மகரம்** : வாகனத்தை சரி செய்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள்.

**கும்பம்** : அதிகாரக் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் புது [illegible]ளுவீர்கள்.

**மீனம்** : புது நட்பு மலரும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்காட்சியும் சேவை நிகழ்வும்

மூதூர் நிரூபர்

மீள் குடியேற்றயேற்றப்பட்டுள்ள மூதூர் கிழக்கு மற்றும் ஏனைய உள்ளூர் கிராம மக்களின் உற்பத்திகளுக்கு சிறந்த சந்தை வாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்கிலான கண்காட்சி, மற்றும் பெண்கள், சிறுவர் மீதான வன்முறைக்கெதிரான விழிப்புணர்வு சேவை நிகழ்வுகளும் மூதூர் கிழக்கு கட்டைபறிச்சான் பொதுச்சந்தை வளாகத்தில், கடந்த 05.12.14 வெள்ளிக்கிழமை முதல் 07.12.14 ஞாயிறு வரை நடைபெற்றது. திருகோணமலை மாவட்ட இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தினால், சுவீடன் கூட்டுறவு நிறுவன நிதி உதவியின் ஊடாக கூட்டறவு சங்கங்களை வலுவூட்டி அதன் மூலமே இக் கண்காட்சி நடத்தப்பட்டது.

இதன் ஆரம்ப நிகழ்வின் போது பிரதம விருந்தினரான கிழக்கு மாகாண கூட்டுறவு உதவி ஆணையாளர் திருமதி ராஜினி கணேசப்பிள்ளை, சுவீடன் கூட்டுறவு நிறுவனத்தின் நிகழ்ச்சி திட்ட இணைப்பாளர் டி.மயூரன், கட்டைப்பரிச்சான் இராணுவ முகாம் அதிகாரி ரணதிலக, திருகோணமலை மாவட்ட வர்த்தக சம்மேளனத் தலைவர் வ.கலைச்செல்வன், அகம் நிறுவன இணைப்பாளர் க.லவகுகராஜா மற்றும் மதியுரைஞர் பொ.சற்சிவானந்தம் திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்க தலைவர் வ.ராஜ்குமார் ஆகியோரும் இந்நிகழ்வில் அதிதிகளாக கலந்துகொண்டனர்.







# சர்வதேச பெண்கள் வன்முறைக்கெதிரான செயலமர்வு



பெண்கள் வன்முறைக் கெதிரான சர்வதேச 16 நாள் செயற்பாட்டு நிகழ்வுகள் அனைத்து பிரதேசங்களிலும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் 09.12.14 (செவ்வாய்) அன்று திருகோணமலை குச்சவெளி பிரதேசபெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் சலப்பையாறு சமூகபராமரிப்புமையக் கட்டிடத்தில் நடைபெற்றது சர்வதேச பெண்கள் வன்முறைக்கெதிரான 16 நாள் விழிப்பூட்டல் செயலமர்வு

இந்நிகழ்வானது குச்சவெளி பிரதேசத்தின் சலப்பையாறு உள்ளிட்ட குறிப்பிட்ட சில கிராமங்களில் அதிகளவில் இடம்பெறும் பெண்கள் மீதான வன்முறைகளை தடுக்கும் வகையிலான தெளிவுபடுத்தல் மற்றும் தொடர் வேலைத் திட்டங்களுக்கான செயலமர்வாக அது அமைந்தது. இந்நிகழ்வில் 50க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர். இச்செயலமர்வானது திருக்கோணமலை மாவட்ட இளைஞர் அபிவிருத்தி 'அகம்' அமைப்பின் மதியுரைஞர் திரு.பொ.சற்சிவானந்தம் அவர்களால் நெறிப்படுத்தப் பட்டிருந்தது. குச்சவெளி பிரதேச பெண்கள் வலையமைப்பின் தலைவி செல்வி.ம.கஜநிதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.



## கலை நிகழ்ச்சி
# ஈஸ்ட் ஹில் முன்பள்ளி

ஈஸ்ட் ஹில் முன்பள்ளியின் கலை நிகழ்ச்சி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (07.12.2014) அன்று மாலை 3.00 மணிக்கு ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறுவர் சிறுமியர்களின் அற்புதமான நடன நிகழ்வுகளும், பாடல்களும் விருந்தினர்களின் உரைகளும் இடம்பெற்றன. அனைத்து சிறார்களும் தங்கள் திறமைகளால் வருகை தந்திருந்த அனைவரையும் களிப்பில் திளைக்க வைத்தனர். இந்நிகழ்வு மாலை 6.30 மணியளவில் இனிதே நிறைவு பெற்றது.









# "கலாபூஷண விருது – 2014"

இலங்கையில் கலை இலக்கிதுறைகளில் பணியாற்றும் சாதனையாளர்களான கலைஞர்களுக்கு வருடம் தோறும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அரசின் உயர் விருதான காலாபூஷணம் எனும் விருது வழங்கப்பட்டு வருகின்றது. இவ் விருதுக்காக இம் முறை 2014ம் ஆண்டு திருகோணமலை மாவட்டத்தில் ஏழு தமிழர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் அவர்கள் விபரம்: மு. பத்மநாப சர்மா (சிற்பத்துறை) திருகோணமலை, திருமதி. சிவஞானம் சரோஜினி தேவி (இலக்கியம்) உவர்மலை, வே. தங்கராசா (இலக்கியம்) தம்பலகாமம், த. சிதம்பரப்பிள்ளை (நாட்டுக்கூத்து) பள்ளிக்குடியிருப்பு, அ. குகராஜா (இலக்கியம்) சம்பூர், கோ. திரவியராசா (இலக்கியம்) சம்பூர்.

இக்கலைஞர்களுக்கான விருது வழங்கும் வைபவம் 14.12.2014 ஞாயிற்றுக்கிழமை மு.பகல் 9.30 மணிக்கு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# பால்நிலையும் வீட்டுத் துறையும்

பால்நிலை என்பது நடத்தை, நடவடிக்கை, மனோபாவம், பங்களிப்பு போன்றவற்றைக் கொண்டு சமூகத்தில் மூலம் வேறுபடுகின்றது. இது சமூகத்திலும் குடும்பத்திலும் மாற்றம் பெறக்கூடியது. அதாவது உடை, கல்வி, தொழில், சுகாதாரம் , சொத்து, தீர்மானம் மேற்கொள்ளுதல், அரசியல், சமூக நடத்தை போன்றவற்றில் பால்நிலை மாற்றம் அடையக்கூடியது.

எமது கலாச்சாரத்தையும், சமூகத்தையும் சரியான முறையில் பால்நிலை சமத்துவம் பேணப்படும் போது சமூகம் சிறந்த அபிவிருத்தியை அடைய முடியும். இந்நிலையில் கூடுதலாக பெண்கள் பாதிக்கப் படுகின்றார்கள். ஒரு நாட்டின் அபிவிருத்தியில் பெண்களின் பங்களிப்பு கூடுதலாக உள்ளது. பால்நிலை என்னும் போது மனிதன் மனிதனாக வாழ வேண்டியதன் அவசியத்தையும் உரிமைகளையும் கூறக்கூடியதாக உள்ளது.

பண்டையக்காலத்தில் பெண்களை அடிமைகளாக பாவிப்பது மரபாகவே கருதப்பட்டது. நமது சமுதாயத்தில் காலம் காலமாக மனிதகுலம் என்றால் அது ஆண்களை முன்னிறுத்தியே கூறப்பட்டுள்ளது. ஆண்களுக்கு மகிழ்ச்சியையும் வாரிசுகளைப் பெற்றுக் கொடுக்கவும் பெண்களை இறைவன் படைத்துள்ளான் என்ற கருத்தையே காணமுடிந்தது. இருபத்தியொன்றாம் நூற்றாண்டில் பெண் தான் சிறப்பாக வாழ்வதற்கு கருப்பையிலேயே போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இக்கொடிய நிகழ்வுகளில் இருந்து விடுபட பெண்கள் மத்தியில் விடுதலைச் சிந்தனை தூண்டப்பட்டது. பெண் விடுதலை பெண்களுக்கு ஏற்படும் பல்வகைக் கொடுமைகளில் இருந்து விடுதலை பெற சிறந்த சிந்தனைகளை வெளியிட்டு பெண்கள் வாழ்க்கையை வளம் பெறச் செய்வதில் தமிழ் இதழ்கள் பெரும் பங்காற்றி வருகின்றன. பெண்கள் பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம் என்று பெண்கள் ஆண்களுக்கு நிகராக சமூகத்தில் திகழ வேண்டும்.

சமூகத்தில் உயிர் ஓட்டமுள்ள எல்லாப் பிரச்சினைகளிலும் பொது நீரோட்டம் ஒன்றை ஆணும் சரி பெண்ணும் சரி வந்தடைய இந்த வர்க்கச் சமுதாயத்தில் ஒருக்காலும் முடியாது. எல்லா முரண்பாடுகளும் எல்லா கோரிக்கைகளும் வர்க்கச் சமுதாயப் பிளவுகளால் எதிர்நிலைப் போராட்டத்துக்கு உட்பட்டுத்தான் யதார்த்தத்தில் உள்ளது.

தொழிற்புரட்சியின் விளைவாக பெருகிய நகர வாழ்க்கை அதனால் கிடைத்த கல்வி வாய்ப்புக்கள், வேலை வாய்ப்புக்கள் குடும்ப சூழலில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தின. ஆண், பெண் குடும்பப் பணிபகிர்வு காலத்தின் கட்டாயமான குடும்பச் சூழலில் சம உரிமை கொள்ளும் எண்ணம் தானாகவே அரும்பியது.

அந்த வகையில் பால்நிலையும் வீட்டுத்துறையும் என்னும் போது சமுதாயத்தில் வகிப்பங்கு குடும்பத்தின் செல்வாக்கு செலுத்துகின்றதை பார்க்கக் கூடியதாக உள்ளது. ஒரு வீட்டை எடுத்துக் கொண்டால் அங்கு கணவன், மனைவி பிள்ளைகள் என்ற அங்கத்துவம் காணப்படுகின்றது. இங்கு ஆண், பெண் என்ற பகுப்பாய்வினை நோக்க வேண்டி உள்ளது. வீட்டில் கணவன், மனைவி இருவரும் வேலைக்கு செல்பவர்களாக இருப்பின் அங்கு வேலைப்பழுவை ஒருவர் மட்டும் சுமக்க இயலாது. பெண்ணும் ஆணும் சமமாக வேலை செய்ய வேண்டிய நிலை உருவாகின்றது. குடும்பத்தில் அனைத்து விடயங்களிலும் இருவரும் இணைந்து செயற்படும் பொதுவான முரண்பாடற்ற சூழல் உருவாகின்றது.


வீட்டில் பெண்கள் சமைக்க வேண்டும் ஆண்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் பக்கம்

அதனை சுவைக்க வேண்டும் என்பதுடன் சமைப்பதற்கு அல்லது பெண்கள் செய்யும் வேறு வேலைகளை ஆண்கள் செய்யக்கூடாது என்பதிலும் ஆணாதிக்கம் கொண்டவர்கள் வீட்டில் மனைவியை அடிமையாக நினைத்து வேலை செய்ய வேண்டும் என்கின்றவர்களும் சமூகத்தில் உள்ளார்கள். வீட்டில் மனைவியை கணவன் மதித்து கணவன் மனைவியை மதித்து விட்டுக்கொடுக்கும் பண்புடன் இருத்தல் வேண்டும்.

வீட்டில் பெண்களை அடக்கி ஆழ வேண்டும் பெண் என்பவள் அடிமை என்ற எண்ணக்கருவை அகற்றிவிட்டு பெண்களுக்கும் சம உரிமை உண்டு அனைவரும் மனிதர்கள் என்ற எண்ணம் எழவேண்டும். ஒவ்வொருவருக்கும் சமூகத்தினால் உருவாக்கப்பட்ட நல் விழுமியங்களைக் கொண்ட ஒருவருடன் உறவாடவும், சமூகத்தில் முக்கியத்துவம் வழங்குவதிலும், சந்தர்ப்பம் வழங்கலிலும் மூல வளங்களை பிரயோகிப்பதிலும் சரி நிகரான உரிமைகளை வழங்கல் இவ்வாறு மக்களின் பல்வேறு கலாச்சார அம்சங்கள் பால்நிலைக்கு உருவாக்கம் கொடுக்கின்றது.



செல்வி.கணபதிப்பிள்ளை சூரியகுமாரி
சினக்குடா.



# ஜாதிக ஹெல உறுமயவின் ஒப்பந்தம் சிறுபான்மையினரின் முதுகெலும்பை முறிக்கக் கூடியது - அன்வர் (கி.மா.உ)

ஜாதிக ஹெலய உறுமய முன்வைத்துள்ள யோசனை என்பது சிறுபான்மை சமூகத்தின் அரசியல் முதுகெலும்பை உடைத்து எறியக்கூடிய அம்சங்களும் உள்ளடங்கப்பட்டுள்ளன என்பதை அறிந்து கொள்ளவேண்டியது கடமையாகும் என கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உச்சபீட உறுப்பினர்களில் ஒருவருமான அன்வர் தெரிவித்துள்ளார்.

தன்மீது மேற்கொள்ளப்பட்டுள்ள தவறான செய்திகள் தொடர்பாக விளக்கம் அளிக்கும் போதே இதனை அவர் தெரிவித்தள்ளார்.

கடந்த 09.12.2014 ம் இரவு 7.30 அளவில் ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிஸ் உச்சபீட கூட்டத்தில் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிரிசேனா மற்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ஆகிய இரு வேட்பாளர்களில் யாரை ஆதரிப்பது என்ற வாத பிரதி வாதங்கள் நடைபெற்றது. அப்போது நான் மைத்திரிபாலவை தமிழ் தேசிய கூட்டமைப்பும், ஜாதிக ஹெலய உறுமயவும் ஆதரிக்க முன்வந்திப்பதால் அக்கூட்டணியை ஸ்ரீ லங்கா 17

# மீரியபெத்த மாணவர்களுக்கு திருமலை மாவட்ட தமிழரசுக் கட்சியினர் உதவி

ஒக்டோபர் 29ம் திகதி நடைபெற்ற கொஸ்லந்தை மீரியபெத்த மண்சரிவில் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான நிதியை திருகோணமலை மாவட்ட இலங்கை தமிழரசுக் கட்சியினர் வழங்கினர்.

மீரியபெத்த தமிழ் வித்தியாலயம், ஸ்ரீ கணேசா தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசலைகளைச் சேர்ந்த 61 மாணவர்களுக்கு 4 இலட்சத்துக்கு மேற்பட்ட நிதி அவர்களது எதிர்கால கல்வித் தேவைகளுக்காக பகிர்ந்து வழங்கப்பட்டது.

கடந்த 8ம் திகதி, கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் திருகோணமலை மாவட்ட தமிழரசுக் 17





# தனி மாவட்டம் பற்றி பேசாமல் அபகரிப்புக்களை தடுத்து நிறுத்தியது முஸ்லிம் காங்கிரஸ் வெற்றிகரமான அரசியல் பேரம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீமிற்கும் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரிடையே முக்கிய சந்திப்பொன்று நேற்று பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றது.

இதன்போது முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் அனைத்திற்கும் தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அரசாங்கத்தினால் உறுதியளிக்கப்பட்டது என நீதி அமைச்சரின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர்.எம்.அன்வர், பாராளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன, பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் மிலிந்த மொரகட, திருகோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேச சபை உறுப்பினர் பஷீர் உட்பட படைத்துறைத் தளபதிகளும் பங்கு பற்றியுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணி, மீன்பிடி மற்றும் வழிபாட்டுத் தளங்கள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொர்டர்பாக அவற்றிற்கான தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை புல்மோட்டைப் பிரதேசித்தில் 500 ஏக்கர்களைக் கொண்ட அரிசிமலை காணி பிரச்சினைக்கு உரிய தீர்வை காண்பதாக தெரிவிக்கப்பட்டதோடு, பொன்மலைக்குடா பிரதேசத்தில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டிருக்கும் காணிகள் மற்றும் சுனாமி வீடுகளை உடனடியாக மீட்டுத் கொடுக்கும்படி கடற்படைத் தளபதிக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அத்துடன், புல்மோட்டையில் பொதுமக்களுக்குச் சொந்தமான காணியில் ஆரம்பிக்கப்படவிருந்த படையினருக்கான ரணவிரு கம்மான எனப்படும் இராணுவத்துக்கான கிராம 17

## - பெப்ரவரி 02வரை காலக்கெடு -
# "சுகாதாரத் தொழிலாளர்களை வீதிகளில் வேலை செய்ய விடு"



சுகாதாரத் தொழிலாளர் நியமனங்களை வழங்கி அவர்களை அலுவலகத்தில் கணனி இயக்குனர்களாகவும், அலுவலக உதவியாளர்களாகவும் சேவைக்கு வைத்திருப்பதையிட்டு கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ள கிழக்கு மாகாணச் சுகாதாரத் தொழிலாளர்கள் சங்கம் இந்நியமன்ங்கள் ஊடாகத் தமக்குரிய நிமனங்கள் பறிக்கிப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

அதினடிப்படையில் தமது கோரிக்கைகளை வலியுறுத்திக் கடந்த 8ம் திகதி கிழக்கு மாகாண சபைக்கு முன் அவர்கள் அமைதியான கவனயீர்ப்புப் போராட்டமொன்றை

# கடைகள் உடைப்பு

மூதூர் நகரப் பகுதியில் உள்ள நான்கு கடைகள் கடந்த 10ம் திகதி உடைத்து சூறையாடப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நகரில் அமைந்துள்ள சந்தைப் பகுதியில் தொடராக அமைந்துள்ள நான்கு கடைகளே உடைத்து பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன எனத் தெரியவருகின்றது.

ஆனால் கடைகள் உடைத்துச் சேதப்படுத்தகப்பட்டுள்ளனவே தவர கொள் இடப்படவில்லை என்றும் ஓர் செய்தி தெரிவிக்கின்றது. காவல்துறை விசாரணைகள் தொடர்கின்றன.

மலைமுரசு
MALAIMURASU
மலைமுரசு வாராந்தப் பத்திரிகை ஸ்ரீராம் பிரதர்ஸ் (தனி) நிறுவனத்தால் 159 A, கடல்முக வீதி, திருகோணமலையில் இருந்து 13.12.2014ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org